ரிஜிஸ்டர் நெ. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

புரட்சி.

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வே. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, ஸ்ரீமுக-ஞு பங்குனி-மீ 19-உ (1—4—1934) | மலர் 19.

பாழும் பக்தி.

("மண்வெட்டிக் கூலிதினல் ஆச்சே" என்று பாரதியார்
பாடியுள்ள மறவன் பாட்டின் மெட்டு)

(சாமி. சிதம்பரனார்.)

(சென்றவாரத் தொடர்ச்சி)

உண்ணுதற்குப் போதியஉண வின்றி—அவர்
ஒட்டிவெறும் வயிற்றுடனும் நின்று
கண்கணீரைச் சிந்தியழு வார்கள்—மிகு
கட்டமுடன் இழுத்துவரு வார்கள் (13)

கைகளினில் சாட்டைகளும் கம்பும்—கொண்டு
காரியத்தர் கூடிநடு நின்று
மெய்யிலடி பட்டுதுடித் திடவே—அவர்
மிருகங்கள் என்றுநினைத் தடிப்பார் (14)

இந்தக்கொடுஞ் செய்கை கண்ணிற் காணார்—மேல்
இருக்கின்ற பாவைதனைக் காண்பார்
சிந்தையினில் தெய்வபக்தி கொள்வார்—இந்தச்
சின்னவினை பக்தியென்று சொல்வார் (15)

பதுமைகளை நன்றாயலங் கரிப்பார்—அதன்
பாரத்தினைத் தோள்களின்மேல் தரிப்பார்
புதுமைவினை ஒன்றுஞ்செய அறியார்—இதைப்
புகழ்ந்துதங்கள் செல்வஞ்செல வழிப்பார். (16)

உயிரைப்பலி கொள்ளுங்கொடு நோய்கள்—தம்மை
உற்றபோதும் பக்திகொண்ட மாந்தர்
பயிலுகின்ற மருத்துவரைத் தேடார்—சாமி
பக்தியென்று வேண்டித்துயர் வீடார் (17)

முயற்சிபெருஞ் செல்வங்களைச் சேர்க்கும்—என்னும்
மூதுரையை உங்கள்மனங் கொள்வீர்
அயர்ச்சிதரும் பக்திமூடம் ஒழிப்பீர்—அதை
அகத்தினின்றும் போகச்சிந்தைத் தழிப்பீர். (18)

பக்திபெருஞ் செல்வந்தரும் என்பார்—இன்னும்
பன்னலமும் கூட்டிவைக்கும் என்பார்
சக்திதனைப் போக்கிமூட மக்கள்—இங்கு
சந்திகளில் நின்றுபரி தவிப்பார் (19)

*கதிர் எரியும் இயற்கையென்று துணியார்—அதைக்
காலையிலும் மாலையிலும் பணிவார்
துதியென்று பாட்டுபல சொல்வார்—வாழும்
தூயவுயிர் பலவற்றைக் கொல்வார். (20)

கல்விகலை வாணியென்று சொல்வார்—அதைக்
கருத்திருத்திக் கற்குமறி வில்லார்
பல்வகைகொள் ஏடுகளை வைப்பார்—பூசை
பண்ணிமுழு மூடரென நிற்பார் (21)

ஆயுதங்கள் பண்ணும்வகை யறியார்—தங்கள்
ஆண்மையுடன் கைத்தொழில்கள் புரியார்
ஏயும்படை யாவுமொன்று குவிப்பார்—ஒன்றாய்
ஏற்றிவைத்துப் பூசைபண்ணித் தவிப்பார். (22)

பக்திதன்னில் உங்கள்மனம் போச்சே—உண்மைப்
பகுத்தறிவு மாண்டுவிழல் ஆச்சே
சாத்திரங்கள் தீமையுள்ள வீச்சே—இது
சந்ததமும் உண்மையாகும் பேச்சே. (23)

மந்திரத்தால் மாங்காய்விழா தென்றே—சொல்லும்
மாற்றமதன் உண்மைகாணீர் இன்றே
தந்திரத்தால் வாழ்க்கைவளர் பணியே—செய்து
தாழ்விகந்து வாழ்கசிறந் தினியே. (24)

*கதிர்—சூரியன். எரி—நெருப்பு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

ஈ. வெ. ரா. சொற்பொழிவு
விலை அணா 2,

அகத்தியர் ஆராய்ச்சி
விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்
விலை அணா 2.

சுயமரியாதைப் பாடல்
விலை அணா 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கி-...
விலை ...

...
விலை அணா 2.

...சாதிப் புரட்டு
விலை அணா 2,

பர்னார்ட்ஷா உபந்யாசம்
விலை அணா 1.

இலங்கை உபந்யாசம்
விலை அரை அணா.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்
விலை அரை அணா.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

சிதம்பர ரகசியம் ...	0—8—0
சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மாஇல்லை	0—6—0
மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோக பயிற்சி முறையும் ...	2—0—0
ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை	0—6—0
சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
சாமிகளின் அடிமைகள் ...	0—12—0
சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0
பகுத்தறிவு கீதம் ...	0—1—0

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகப் புஸ்தகங்கள் நம்மிடம் கிடைக்கும்.

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம்	ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

ஏழு தலைமுறைகளாய்க் கையாண்டனுபவம் வாய்ந்ததும் வைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்புப் பெற்றதுமான ஔஷதங்கள் எங்களுடையது.

ஆப்ரேஷன் அவசியமில்லை

நாகபற்பம்.

சாப்பிடுங்கள் (மூலவியாதிக்கு)

எவ்விதமான மூலரோகமாயிருந்தாலும் சரி. எமது பற்பம் ...ணப்படுத்தும். மூளை தானே கரையும். சீழ்மூலம் ரத்த மூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதி சீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம்.

புட்டி 1க்கு ரூ. 4.

தாளக பஸ்பம்.

(இருமலுக்கு)

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம் கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயினும் சரி எட்டுவிதகாசமும் தீரும்.

புட்டி 1க்கு ரூ. 4.

அப்ரேக் செந்தூரம்.

(நீரழிவுக்கு)

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்துத்தாகத்தை நிறுத்தி இரத்த விருத்தியைத்தரும்.

டி 1க்கு விலை ரூ. 15. வி. பி. வேறு.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி. S.I.

மணம் நிறைந்தது! குணம் உயர்ந்தது!!

இதைச் சாப்பிடுங்கள்.

காபி, ஓவல், டீ, கொக்கோ முதலான பானத்திற்குப்பதிலாக அநேகவிதமான மூலிகையின் வேர், பூ, வித்து வகைகளால் தயார் செய்யப்பெற்றுள்ள

சுகானந்த பானச் சூரணம்.

ஒன்றே யாவராலும் விரும்பத்தக்கது. வெட்டைச்சூடு, நீரழிவு, நீர்க்கடுப்பு, காமாலை, சோகை, அஜீரணம், பலஹீனம் ஆகிய வியாதிகளை அடியோடு போக்கி இரத்த சுத்தி, ஞாபகசக்தி சுறுசுறுப்பு இவைகளை பூரணமாகத்தரத்தக்கது.

காலை மாலை இரண்டு வேளைகளிலும் மற்ற பானங்களைப் போன்றே உபயோகிக்கலாம். இதனை ஒருமுறை வாங்கி சாப்பிடுங்கள்.

1-டப்பியின் விலை அணா 10.

வியாபாரிகட்கு தக்க கமிஷன் உண்டு.

விலாசம்:— தேக்ஷிணாமூர்த்தி தமிழ் வைத்தியசாலை
திருக்கோஷ்டியூர், (ராமநாதபுரம் ஜில்லா.)

ரூஸ்வெல்டின் புதிய பொருளாதார முறை.

விலைவாசிகளை உயர்த்த தீவிர முயற்சி.

காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்கள் எழுதியது:—

“தற்கால பொருளாதார நெருக்கடியிலிருந்து அமெரிக்கா தப்பி வேலையில்லாதவர்களுக்கு வேலைகளை ஏற்படுத்தி பொதுஜனங்களுக்கு சந்தோஷத்தை உண்டாக்கி தேசத்தை புனருத்தாரணம் செய்யவேண்டுமாயின், பொருளாதார முறையிலும் அரசியல் முறையிலும் பெரும் மாறுபாடுகள் ஏற்படவேண்டுமென்பது திண்ணம்” என்று சொல்லித்தான் டெமாக்ராடிக் கக்ஷியைச் சேர்ந்த ரூஸ்வெல்ட் 1932ம் வருடத்து எலெக்ஷனில் ஹூவரை தோற்கடித்தார். ஹூவர் சென்ற 5 வருடங்களாக மற்றய அரசாங்கங்களைப் போல் பணச்செலவாணியைக்குறைத்து, தேசிய பட்ஜட்டை சரி செய்து கொண்டு வந்தார். ரூஸ்வெல்ட் எலெக்ஷனில் இம்முறை கண்டித்து பேசியதின் பயனாக அமெரிக்க சாதாரண ஜனங்கள் ரூஸ்வெல்ட் புதிய முறையைக் கையாண்டால் தேசம் அபிவிருத்தி அடைந்து, வேலை இல்லாத திண்டாட்டம் குறைந்து, மறுபடியும் சென்ற பத்து வருடங்களைப் போல் உலக வியாபாரத்தில் தன்னுடைய முக்கிய ஸ்திதிக்கு அமெரிக்கா வந்து விடும் என்று நம்பி அவருக்கு ஓட்டு செய்தனர்.

அமெரிக்காவில் ஊக்கம்.

சென்ற ஒரு வருடத்தில் அமெரிக்காவில் வியாபாரமும், கைத்தொழிலும புத்துயிர் கொண்டிருக்கின்றன. ஸ்டாக் விலைகள் விரைவில் ஏறின. இரும்பு கைத்தொழில் சென்ற பத்து வருடத்தைவிட மூன்று மடங்கு விஸ்தரித்து விட்டது. எலெக்டிரிக் தொழில்களெல்லாம் நன்கு அபிவிருத்தி அடைந்து விட்டன. தொழிலாளிகளுக்கும் எங்கும் வேலை அகப்பட்டுக்கொண்டும், அதிகரித்துக் கொண்டுமிருக்கின்றது. எல்லா வியாபாரங்களிலும் முன்னேற்ற ரிபோர்ட்டு வந்து கொண்டிருக்கின்றது. அமெரிக்கா உலக பொருளாதார நெருக்கடியிலிருந்து எழுந்து விட்டதா?

வியாபார மந்தத்தை நிறுத்த வழி.

பழைய பொருளாதார முறையில் தேர்ந்த நிபுணர்கள், வியாபாரமும், கைத்தொழிலும், செழிப்புற்று ஓங்கி பின்பு க்ஷீணித்து மறுபடியும ஓங்கி, மறுபடியும் க்ஷீணித்து மாறி மாறித்தான் வருமெனச்சொல்லுகின்றனர். ஆனால் அவர்களுக்கு க்ஷீணிக்கும் தருவாயில் நிறுத்துவதற்கு தெரியாதென்று ஒப்புக்கொள்ளுகின்றனர். சோஷலிஸ்ட் கக்ஷியைச் சேர்ந்தவர்கள் முதலாளித்துவ முறையில் இப்படித்தான் நடக்குமென்றும், முதலாளித்வ முறை இப்படி க்ஷீணிக்கும் தருவாயில் உலக தொழிலாளிகள் ஒன்று சேர்ந்த ஓர் பெரிய புரட்சியால் ராஜீய பொறுப்பை வகித்தாலன்றி இது நிற்கப்போவதில்லை என்றும் கூறுகின்றனர்.

ரூஸ்வெல்டின் முறைகள்.

நாணயப்பெருக்கு.

பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் சென்ற வருடத்தில் என்ன செய்தார்? முதலில் விவசாயிகளுக்காகப்பண நடமாட்டத்தை அதிகரிக்க ஓர் சட்டம் ஏற்படுத்தினார். இச்சட்டப்படி கவர்ன்மெண்டார் பெடரல் ரிசர்வ் பாங்கியை 30 கோடி டாலர் பொருமானத்துக்கு, கவர்ன்மெண்டு பாண்டுகளை வாங்கலாம். தவிரவும் பிரசிடெண்டுக்கு டாலரிலிருக்கும் தங்கத்தை நூற்றுக்கு 50 விகிதம் குறைக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்த சட்டம் ஏற்பட்டவுடன் அமெரிக்கன் டாலர் உலக செலவாணியில் விலை குறைய ஆரம்பித்தது. ஒரு ஸ்டர்லிங் பவுனுக்கு $3\frac{1}{4}$ டாலர் இருந்த விகிதம் இன்று ஸ்டர்லிங்குக்கு 4·96 டாலராக இருக்கின்றது.

தொழில் புனருத்தாரண சட்டம்.

பின்பு ஜூன் 16ம் தேதி 1933-ல் தேசீய கைத்தொழில் புனருத்தாரண ஆக்ட் பரவச் செய்யப்பட்டது. அந்த ஆக்ட் வேலையில்லாத் திண்டாட்டத்தைக்குறைக்கவும், தேசத்தைப் புனருத்தாரணம் வேண்டியதால்தான் ஏற்படுத்தப்பட்டதென்றும், முன்னறிக்கையில் சொல்லுகின்றது. முதலில் கைத்தொழில் நடத்தும் பெரிய முதலாளிகளின் அசோசியேஷன் அமெரிக்கா பிரசிடெண்டிடம் மறற முதலாளிகள் குறைந்த கூலி கொடுப்பதிலாவது,குறைந்த விலைக்கு சாமான்களை விற்பதிலாவது, மற்ற எவ்விதத்திலாவது போட்டி போடுவதாக முறையிட்டின் அந்த முதலாளிகளை, அவர்கள் தப்பிதங்களை நீக்க ராஜாங்க முறையில் பலவந்தத்தை உபயோகப்படுத்தலாம். தவிரவும், பிரசிடெண்டே, ஏதாவது மற்ற தேசங்களிலிருந்துவரும் சாமான்கள் இம்முறையை ஒப்புக்கொண்டிருக்கும் கைத்தொழில்களைபாதிக்குமாயின், பிரசிடெண்டு அச்சாமான்களின் இறக்குமதியைத் தடுத்துவிடலாம். மேலும் இந்த ஆக்டில் எண்ணை சுரங்கங்களைப் பற்றி பல செக்ஷன்களும், கவர்ன்மெண்டு புதிய கட்டிடங்களை ஏற்படுத்தி வேலை கொடுக்க சில செக்ஷன்களும் வரியை உயர்த்த சில சட்டங்களும் இருக்கின்றன.

அரசாங்க செலவுத் திட்டங்கள்.

சமீபத்தில் ரூஸ்வெல்ட் கவர்ன்மெண்ட் அமெரிக்கா மார்கட்டிலேயே கடன் வாங்கியது. இந்தக் கடனுக்கு 50 கோடி டாலர் அதிகமாக போட்டி போட்டுக் கொண்டு கடன் கொடுக்க ஜனங்கள் முன் வந்தனர். கவர்ன்மெண்டு வெகு சீக்கிரத்தில் இன்னும் தைரியமாகச் சில காரியங்களை செய்ய எத்தனித்திருக்கின்றனர். முதலாவது குடியானவர்களிடமிருக்கும் கோதுமை பருத்தி முதலியவற்றின் விலையை உயர்த்த, கவர்ன்மெண்டே இச்சாமான்களை வாங்கவும், விற்கவும் ஏற்பாடு செய்தல். இரண்டாவதாக சமீபத்தில் மூடப்பட்ட பாங்கிகளின் ஷேர்களின் பேரில் கவர்ன்மெண்ட் பாதிப் பணம் கொடுத்தல். (இந்தப் பாங்கிகளின் டிபாசிட் தொகைகளும், மற்றய சொத்துக்களும் சுமார் 200 கோடி டாலர் என்று கணக்கிடப் பட்டிருக்கின்றது.) மூன்றாவதாகப் பெடரல் பாங்கியின் வட்டி விகிதத்தை மீண்டும் குறைத்து, நியாயமாகத் தோன்றும் கேஸ்களிலெல்லாம் தைரியமாய்க் கடன் கொடுப்பது. நான்காவதாகச் சில கைத்தொழில்களுக்குக கவர்ன்மெண்டே பண முதவி செய்வது. ஐந்தாவதாக தேசியப் புனருத்தாரண ஆக்டின் சட்டங்களை நன்கு அமுலுக்குக் கொண்டுவந்த சட்டத்துக்கு மாறாக நடக்கும் முதலாளிகளைக் கண்டித்தும், அவர்களுடைய சாமான்களைக் கவர்ன்மெண்ட் வாங்காமல் கஷ்டப்படுத்தியும், வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கப்போகின்றார்கள்: தவிரவும் சோளம், கோதுமை விவசாயத்தைக் குறைக்க விவசாயிகள் இவ்விவசாயத்தை ஏக்கர் விகிதம் குறைத்தால் கவர்ன்மெண்ட் பண உதவி செய்கின்றார்கள். அமெரிக்காப் பஞ்சுக் கமிட்டியார் இம்முறையைக் கையாளப் போகின்றனர்.

இம் முறைகளில் அமெரிக்கன் கவர்ன்மெண்ட் பொருளாதார நெருக்கடியை வெல்ல முயன்றிருக்கின்றது. கவர்ன்மெண்ட் கையிலிருக்கும் அனேக சட்டங்களை நிர்தாட்சண்யத்துடன் உபயோகிக்கப்படுகின்றது.சமீபத்தில்[Ford] போர்ட் கூட ஒதுங்கியிருந்தும் கவர்ன்மெண்டுடன் பலாத்கார விதங்களால் ஒத்துழைக்க நேரிட்டிருக்கின்றது. கவர்ன்மெண்ட் வெறும் விரட்டலோடு நிற்கப் போவதில்லை என்று முதலாளிகளுக்கு நன்கு புலப்பட்டுவிட்டதால் முதலாளிகள் அவசர அவசரமாகச் சாமான்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்துவிட்டனர். கூலிகளுக்கு வேலைகப்பட்டதால் சாமான்களை அவர்கள் வாங்கி அனுபவிக்கவும், அப்பணம் மீண்டும் கூலியாகத் திரும்பிவரவும், அமெரிக்கா 1932ம் வருஷத்தின் ஆபத்து நெருக்கடியிலிருந்து தப்பித்துவிட்டதென்றே சொல்லவேண்டும். ஆனால் சமீபத்தில் சாமான் வாங்கும் யோக்கியதை, சாமான்கள் உற்பத்தி செய்யப்படும் வேகத்திற்குத் தகுந்தவாறு அதிகரிக்கப்படவில்லை என்று தோன்றுகின்றது. இதற்காகக் கவர்ன்மெண்ட் தானாக நேராய் சுமார் 100 கோடி டாலருக்குக் கட்டிடம் கட்டுவதாக எத்தனித்திருக்கின்றது.

ஓர்விதப் பொதுவுடைமை.

உலகம் அமெரிக்காவில் ஒருவிதப் பொதுவுடைமை உலவுவதை ஆச்சர்யத்துடன் கவனிக்கின்றது. அமெரிக்கா முதலாளித்துவத்தினிடையே பொதுவுடைமையின் தீவிரக் கொள்கைகள் கையாளப்படுவது சற்று விந்தையாகத் தானிருக்கின்றது. ஆனால் முதலாளிகள் விலைகள் உயரம்போகின்றனவென்று பூரணமாக நம்பவேண்டும். சற்று திடீரென்று சாமான்களைச் செய்ய ஆரம்பித்து

தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க.

கூட்டுழைப்பாளர் ஆட்சி.

தோழர் மு. சு. பூ. அவர்களின் கேள்விகளுக்கு தோழர் செ. தெ. நாயகம் அவர்களின் பதில்.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பின்னால் பெரும் பெயர் பெற்றுக் குறுகிய காலத்தில் இறந்த பிறகு, அவர் அவ்வாறு எழுதி விடுத்திட்டுப் போன தாள்களில் எழுதியிருப்பவைகளை இன்னவை என்று அறியமுடியாமல், அறிஞர்கள் திகைக்கிறார்களாம். வறுமையில் உழன்ற காலத்து இவ்வாறு அவர் உழைத்தது, ஊதியத்தைக் கருதியா? இவர் இப்பொழுதைய ருஷியாவிலிருந்தால், உழைப்புக்குத் தக்க ஊழியம் இல்லை என்று சும்மா இருப்பாரா? பல்லாண்டுகளாக உணவு உரக்கத்தைப் பொருட் படுத்தாமல், இராப் பகலாய் உழைத்து, செடி, கொடி, மரங்களுக்கு மக்களைப்போல் உணர்ச்சி உண்டெனக் கண்டு, அதை உலகிற்குக் காட்டிய ஜகதீச சந்திரரின் உழைப்பு ஊழியத்தை முன்னேக்சமாகக் கொண்டதா? கம்பியால் இணைக்கப்படாமல் எவ்வளவு தூரத்திலிருந்தாலும் பிற மக்களுடன் பேசக்கூடிய கருவியை மார்க்கனி கண்டுபிடித்து மக்களுக்கு உதவியது ஊதியத்தைக் கருதியா? இறந்துபோன பாடகர்கள் பாட்டையும், எவ்விடத்தில், எப்பொழுது வேண்டுமானாலும் பாடக்கூடிய கருவிகளை எடிசன் ஆக்கி உதவியது ஊதியத்தை விரும்பியா? இப்பொழுதைய ஆட்சிமுறையில் அவர்களுக்குப் பொருள் ஊதியம் கிடைத்திருந்தாலும், அது அவர்களுக்குப் பக்க வழியில் வந்ததேயொழிய, அவர்கள் கோறி உழைத்த குறி அல்ல. அறிவைப் பெருக்குவதில் அவர்கள் கொண்ட ஊக்கமே அவர்கள் உழைப்பிற்கு அடிப்படை. நாடகப்படத்திற்காக நடிப்பதில் பெயர் பெற்ற ஜான் ஜில் பார்ட், நாடகத்திற்காகப் படம் பிடிக்கும் தொழிலையுடைய ஒருவருடன், மாதம் இன்ன தொகை பெற்றுக்கொண்டு படத்திற்காக நடிப்பதாக, ஒப்பந்தம் செய்திருந்தாராம். மாதந்தோறும் ஒப்பந்தப்படி ஊதியத்தைக் கொடுத்துவந்தபோதிலும், அவரிடம் சென்ற நவம்பருக்குப்பின் நடிக்கும் வேலைவாங்கவில்லையாம். பணத்தை வாங்கிக்கொண்டு, அட்டணைக்கால் போட்டுக்கொண்டு, சும்மாயிராமல், தன்னிடம் வேலைவாங்கும்படி படக்காரரை வற்புறுத்தித் தீர்ப்புச் செய்ய, அவர் அமெரிக்காவில் வழக்குத் தொடுத்திருப்பதாக, 19-3-34ல் ஜஸ்டிஸில் வெளியிட்ட செய்தியால் தெரிகிறது. ஊதியத்தைவிட உழைப்பிலேயே அவருக்கு நோக்கம் என்பது இதிலிருந்து தெரிகிறது. பெங்களூர் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவராயுள்ள சர். சி.வி. ராமன, தன நிலைமையில் போட்டிச் சோதனையில் முதன்மையாக வந்து, இந்திய துரைத்தன பொருள் துறையில் உயர்ந்த ஊதியமுள்ள வேலையில் இருந்தார். துரைத்தனத்தாரிடம் உயர்ந்த சம்பளமும், சம்பளம் இன்னும் உயரும் என்ற எதிர்பார்ப்புமுள்ள, வேலையை விட்டு விட்டு, கல்கத்தாவில் விஞ்ஞான ஆராய்ச்சி வேலையில் போய்ச் சேர்ந்தார். ஊதியத்தைவிட உழைப்பே பெரிதென எண்ணுகிறவர்களுமுளர்என்பதை, இவ்வறிஞர்களின் நடவடிக்கையிலிருந்து அறிகிறோம். இப்படி ஊதியத்தை எதிர்பாராது உழைப்பவர்கள் உலகப் பெயர் பெற்ற பெரியார்கள் மாத்திரமல்லர் ஊதியத்தை எதிர்பார்த்தாலும், அதையே தாங்கள் உழைப்பிற்கு ஒரு அளவாகக் கருதாமல், மனமாறப் பாடுபடுவதே கடமை என வேலை செய்பவர்களே, மக்களுட் பெரும் பான்மையார். அப்படி இல்லாவிட்டால், உலகில் இவ்வளவு காரியங்கள், இவ்வளவு சிறப்பாகவும், எளிதாகவும் நடவாது. பெருகிய ஊதியம் வரும் வேலையை உதறித்தள்ளிவிட்டு, ஊதியம் சிறிதாயிருப்பினும் தன் மனதிற்கிசைந்த தொழிலென, அதைவிடாது பார்ப்பவர்களை அடிக்கடி பார்க்கிறோம். ஊதியமே அளவாயிருக்கிற பண ஆட்சியிலேயே, இவ்வியற்கை எழுச்சிகளைப் பார்ப்போமானால், உழைப்பே அளவாயுள்ள சம உரிமை இயற்கை ஆட்சியில், இவைகளை நிரம்பப் பார்க்கலாம் என்பது சொல்லாமலே விளங்கும். கோடிக்கணக்கான பொருள் திரட்டியவர்களும், மறுபடியும் பொருள் திரட்டிக் கொண்டிருப்பது, ஊதியத்தைப் பெருநோக்காகக் கொண்டதல்ல. பத்துக்கோடி சொத்துள்ளவர்கள் அதைப் பதினைறுகோடி ஆக்குவதில் காட்டும் ஊக்கம், ஊதியத்தை யொட்டியதல்ல ஒரு அளவுக்கு மேல் பொருள் வந்தபின், அதற்கு மேலுள்ள ஊதியத்தை அவர்கள் கையாள முடியாது. ஹைதராபாத்து நவாபு உலகில் பணம் படைத்தவர்களுள் முதற்பட்டவர் என்ற பெயர் வந்தபின் அந்தப் பெயர் மற இடங்கொடுக்கக் கூடாதென்ற ஒரு எண்ணமே அவர் பொருள்மேற் பொருள் சேர்ப்பதற்குக்காரணம். நாடடுக்கோட்டைச் செட்டியார் ஒருவர் இரண்டு மூன்று லட்சம் ரூபாயில் ஒரு கோயில் கட்டினால், இன்னொரு நாட்டுக்கோட்டையார் நாலைந்து லட்சம் செலவு செய்து பெரிய தொரு கோயில் கட்டுவது ஊதியத்தை விரும்பியா வெறுத்தா? சுமந்து செல்லும் குதிரையும், வண்டியை இழுத்துச் செல்லும் குதிரையும், மாடும், இன்னொரு குதிரையாவது, மாடாவது தனக்கு முந்திவிடக் கூடாதென, அதற்கு முந்தவேண்டுமென, ஊக்கத்துடன் ஓடுவது எந்த ஊதியத்தைஎதிர்பார்த்து? இரண்டு பறவைகள் கூவுவதிலும், ஆடுவதிலும், இந்த இயற்கைப் போட்டியைக் காணலாம். குயில்கள்கோழிகள் கூவுவதைச்சிறிதுநேரம் உற்றுக் கேட்டால் இதை உணரலாம். தன் இனத்திலுள்ள மற்றவர்களைக் காட்டிலும் தான் முந்தியிருக்க வேண்டும்; தன் இனத்தார் பிறரால் ஆகாததைத்தான் செய்து முடிக்கவேண்டும் என்ற இயற்கை மன எழுச்சியே இதற்குக் காரணம். மக்கள் தங்கள் ஆற்றலை, வேறு கைம்மாறு எதிர் பாராமல், பெருக்குவதிலும், அதைப் பிறருக்கு உதவுவதிலும் ஆவலுடையர் என்ற இயற்கை உண்மையை அடிப்படையாகக் கொண்டது சம உரிமை ஆட்சி.

3. மக்கட் பெருக்க முள்ளவர்கள் மக்கட் குறுக்க முள்ளவர்களை விட அதிகமாக உழைப்பார்களல்லவா? என்பது மூன்றுவதுகேள்வி. பொதுவுடமை ருஷியாவில், மக்கள் பிறந்தநாள் முதல் ஏன் கருவுற்றது உறுதியானது முதல், காப்பாற்றுவதும், வளர்த்துவேண்டியவழி திருப்புவதும், ஆட்சியாளர்பொறுப்பு. மக்கட்பெருக்கம் ஊதியப் பெருக்கத்திற்கும், உழைப்புப் பெருக்கத்திற்கும் உதவுந்துணை அல்ல. மக்கட்குறுக்கம் அவைகளின் குறுக்கத்திற்குக் காரணமல்ல.

4. சம உரிமை நாட்டில், உணவு உடை, பிற இன்ப நுகர்ச்சி, இவைகளில் ஒவ்வொருவரும், அதில் அவரவர்களுக்கு வேண்டியமட்டும் பெற இடமிருக்க வேண்டுமென்பதே கொள்கை. அவரவர்கள் நுகர்ச்சி வேட்கைத்தணிவே அவரவர்கள் உரிமைக்குஎல்லை. மேலே இரண்டாவது கேள்வியின் விடையில் குறிப்பிட்ட பெருந் தீனிக்காரனுக்கும், சிறு தீனிக்காரனுக்கு முள்ள உணவு ஏற்றத் தாழ்வும், பருத்த உடல்காரனுக்கும், மெலிந்த உடல்காரனுக்குமுள்ள புகைவண்டி இட ஏற்றத் தாழ்வும் இக் கொள்கைக்கு எடுத்துக்காட்டாவன.

5. பயிரிடும் பாட்டாளிக்கும், பிறருக்கும், தனக்கும், பணக்காரர் செய்யாமற் செய்யும் உதவி என்ற தலைப்பின் கீழ் 11-3-34ல் வெளிவந்த 'புரட்சி'யில் வெளியிடப்பட்ட என்னுடைய கட்டுரையைப் பற்றிய வினவில், பிறர்நிலத்தைப்பயிரிடுபவர்கள் தன்நிலத்தைத் தானே பயிரிடுபவர்களைப் போன்று பாடுபட மாட்டார்கள், என்பதும், தன்னிலத்தைத்தானே பயிரிட முடியாதவர்கள் அந் நிலத்தை வைத்திருப்பதை விட அதை விற்று, விற்ற தொகையிலிருந்து வரும் வட்டியை வாங்கிக் காலங்கழிப்பது மேல் என்பதும் ஒப்புக் கொள்ளப் படுகின்றன. ஆனால் வட்டிக்குக் கடன் வாங்கி நிலம் வாங்கினவர்கள், கடனைக் கொடுக்க முடியவில்லையானால் வறியவர்களாகத் தானே ஆவார்கள், நில வரும்படி போதாமல், வேறு வழியில் வரும்படி செய்யக் கட்டாயப் படுத்தப் படுவார்கள் அல்லவா, என்ற கேள்விகள் பிறப்பிக்கப் படுகின்றன. என்னுடைய கட்டுரையில், தனக்கு நிலமில்லாமல் பிறர் நிலத்தைப் பயிரிடு பவனைத் தன்னிலத்தைத் தானே பயிரிடுபவனுக்குவதற்குச் சொன்ன வழிகளில் முதலாவது, அவர்களை சொற்பம் சொற்பமாகக் கூட்டுறவு சங்க மூலமாகப் பணம் சேமிக்கஊக்கப்படுத்துவதும், இரண்டாவது, பணம் சேமித்து வைத்திருப்பவர்களை, நிலம்வாங்க ஊக்கப்படுத்தி அவ் வழியில் உதவி செய்வதும், மூன்றுவது அவர்களிடம் பணக் குறைவு ஏற்பட்டால், கூட்டுறவு சங்கங்களிலிருந்து கடன் கொடுக்கச் செய்ய உதவி செய்வதுமாம். ஆகவே நிலப்பாட்டாளி நிலக் கிழவன் ஆவதற்குமுன், தனது உழைப்பாலும், சேமிப்பாலும் நிலக்கிரயத் தொகை உடையவனுக இருக்க வேண்டுமென்பதே எனது கொள்கை. சம்பளத்திற்கு வண்டி ஓட்டுகிறவன், தனது சம்பளத்திலிருந்தும், வேறு வரும்படி இருந்தால், அதிலிருந்தும், சொற்பம் சொற்பமாக மீதம் பிடித்த தொகையாலும் தன்னிடமுள்ள பிற தொகையாலும், வண்டிக்கும், மாட்டுக்கும் வேண்டிய தொகை தன்னிடம் சேர்ந்தவுடன், வண்டிமாடு வாங்கி ஓட்டினால் எப்படித் தனக்கும், மாட்டுக்கும், வாடகைக்கு வண்டியில் போகிறவர்களுக்கும் நல்லதோ, அதுபோலவே, பிறர் நிலத்தைப் பயிரிடுபவனும், நிலத்திற்கு வேண்டியதொகையைச்சேர்த்து வேண்டிய தொகை சேர்ந்தவுடன், நிலத்தை வாங்குவானானால், தனக்கும், தான் பயிரிடாத தன்னிலத்தை விற்றவனுக்கும், பிறர் விளைவித்த உணவுப் பொருளை வாங்க வேண்டிய நிலமையிலுள்ளவர்களுக்கும் நலன் பயப்பதாகும். நிலத்தைத் வாங்குவதற்கு வேண்டிய கிரயத் தொகையில், பெரும் பாகம் சேர்த்து விட்டவர்கள், அவசியமானால், ஒரு சிறு பாகம் கூட்டுறவு நிலையங்களில் கடன் வாங்கி, நிலத்தை வாங்கலாம் என்பதும என் கருத்து. அப்படிப் பட்டவர்கள் கடனை அடைக்க முடியாமல், சேமித்த பொருளையும், நிலத்தையும் இழந்து விட நேரிடாதா என்பது கேள்வி. விளைவுக் குறைவால், பருவத்தாழ்ச்சியால், வட்டி கொடுக்கவும், கடனை அடைக்கவும் இடமில்லாமல், பலர் நிலததை இழக்கவும் வறுமையிலிருக்கவும் இடமாகிறது என்பதும் எடுத்துக் காட்டப்படுகிறது. பயிர்த் தொழிலில் பணம் சேமித்து, அதை

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா

கொலை, களவு, விபசாரம், தற்கொலை நிகழ்வதேன்?

மதங்களின் பயமுறுத்தலாலும், அரசாங்கங்களின் கொடிய தண்டனைகளாலும் இவைகள் ஒழிந்தனவா?

(கொழும்பு தோழர் I. M. இப்ருஹிம்)

உலகத்தில் கொலை, களவு, விபசாரம், தற்கொலை முதலிய, ஈனத் தொழில்களில் ஈடுபடும் மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. இதற்கு காரணம் என்னவென்பதை ஆராய்ந்து இதற்குத் தக்க சிகிச்சை செய்யாவிட்டால் இவ்வுலக மெங்கும் இன்னுமின்னும் பன்மடங்கு கொலை, களவு, விபசாரம், தற்கொலை தலைவிரித்தாட தலைப்பட்டுவிடும். இத்தகைய தவருனவழியில் உலகமக்கள் முன்னிலும் பன்மடங்கு ஈடுபட்டு விட்டார்கள் என்பதை பத்திரிகைகளைப் பார்த்தால் அறியலாம்.

மதங்களின் முயற்சியும், தோல்வியும்.

இத்தீச்செயல்களை ஒழிப்பதற்காக வேண்டி ஆயிரக்கணக்கான வருஷங்களாக மதங்கள் "கொலை, களவு, விபசாரம், தற்கொலை செய்யாதீர்கள் செய்தால் கடவுள் தண்டிப்பார் நரக லோகத்தில் துன்புறுத்துவார்......" என்று மக்களை பயமுறுத்தி மேற்படி ஈனத்தொழில்களிலிருந்து மக்களை விடுவிப்பதற்காக வேண்டி முயற்சித்தன. இதற்காகவேண்டி மதவாதிகள் அநேக கோடிரூபாய்களை செலவு செய்து கோவில்களையும், மசூதிகளையும், சர்ச்சுகளையும் கட்டி, மக்களை வணங்கும்படி ஏவினர்கள். மதங்களின் பயமுறுத்துதலாலும். கடவுள் வணக்கத்தாலும் மக்கள் இத்தீச் செயல்களில் ஈடுபடுவதை விட்டுவிட்டனரா? அல்லது "சர்வ வல்லமையும் சர்வஞானியுமானகடவுளாவது தடைப்படுத்திவிட்டாரா? இல்லவேஇல்லை! (ஏன் அத்தனை புகழும் அத்தனை வல்லமையுமுள்ள கடவுள், மக்கள் தீயவழியில் ஈடுபடுவதை பார்த்துக் கொண்டிருக்கிருர்?) மதங்களின் சட்டத்தையும் மீறி கடவுளின் துன்புறுத்துதலுக்கும பயப்படாமல் மக்கள் மேற்படி தீயவழியில் சர்வ சாதாரணமாய் ஈடுபட ஆரம்பித்து விட்டார்கள்.

அரசாங்கங்களின் முயற்சியும் தோல்வியும்.

மதங்களின் முயற்சிமட்டுமல்ல, இன்றையவரைக்கும் உலகத்தில் ஏற்பட்ட ஒவ்வொரு அரசாங்கமும் மேற்காட்டிய துற்செயல்களை ஒழிப்பதற்காக வேண்டி 'நீதி' ஸ்தலங்களையும், சிறைச்சாலைகளையும், பயங்கரமான மரண தண்டனைகளையும் ஏற்படுத்தி இவைகள் மூலமாய் மக்களை தண்டித்து மேற்காட்டிய ஈனத்தொழில்களை ஒழித்துவிட முயன்றுர்கள். ஆனால் அம்முயற்சியும் விழலுக்கிரைத்த நீர்போலாயிற்று. மேலும் இவர்கள் எதிர்பார்த்ததற்கு முரணாக நாளுக்கு நாள் மேற்படி தீசெயல்களும் அதிகரித்துக்கொண்டே போகின்றன. அதற்குத்தக்கபடி நீதி ஸ்தலங்களும், சிறைச்சாலைகளும், கொடூரமான மரணதண்டனைகளும் பெருகிக்கொண்டே போகின்றன.

முட்டாள்தனத்தை விட்டு காரணத்தை ஆராயுங்கள்.

மதங்களின் பயமுறுத்துதலுக்கும் அரசாங்கங்களின் கொடிய தண்டனைகளுக்கும் சிறிதும் அஞ்சாமல் மக்கள் கொலை, களவு, விபசாரம், தற்கொலை முதலியவைகளைச் செய்கிருர்களே இதற்கு காரணம் என்ன? உடனுக்குடன் அரசாங்கம் தண்டிப்பதை நன்ருக அறிந்திருந்தும் தனக்கு தண்டனைகிடைக்கும் என்பதையுணர்ந்தும் அவைகளுக்கஞ்சாமல் ஏன் மக்கள் மேற்படி துர்செயல்களில் ஈடுபடுகிருர்கள்? ஏதோ ஓர் 'காரணம் இருக்கவேண்டும்! ஒவ்வொருவரும் ஏதாவதொரு தேவையை முன்னிட்டுத்தான் ஒவ்வொரு செய்கைகளையும் செய்கிருர்கள்! அதேமாதிரி கொலை, களவு, விபசாரம், தற்கொலை முதலியவைகளையும் ஒரு அவசியமான தேவையை முன்னிட்டுத்தான் செய்கிருர்கள். எனவே நாம் அத்தகைய தேவையென்ன என்பதை ஆராய்ந்து அதை பூர்த்திபண்ணிவிடுவோமேயாகில் மேற்காட்டிய துற்செயல்களை இவ்வுலகத்திலிருந்தே யகற்றிவிட முடியும். ஆனால் இன்றைய அரசாங்கங்களும் மதவாதிகளும் அத்தகைய நவீன வழியை-கொள்கையை பின்பற்றுமல் வேறுஏதோ அர்த்தமற்ற முட்டாள்தனமான வியர்த்தமான (நமது முன்ஞேர் அறியாமையினுல் குறுகிய அறிவால் சிருஷ்டிக்கப்பட்ட) அத்தனை யிழிவான கொள்கைகளை அப்படியே பின்பற்றுகிருர்கள். (இத்தகைய பின்பற்றுதல் எதற்கு ஒப்பாகும் என்ருல்:— நமது முன்ஞேர்கள் ரயில், மோட்டார், ஆகாயவிமானம், கம்பியில்லா தந்தி, மின்சாரம்......என்பவைகள் என்னவென்று கூட உணர்ந்துகொள்ள முடியாத அவ்வளவு குறுகிய நோக்கம் கொண்டவர்களால் கையாளப்பட்ட மாட்டுவண்டி......முதலியவைகளைத்தான் கையாளவேண்டும். அதல்லாமல் இன்றைய மனிதனின் சுய அறிவால்கண்டு பிடிக்கப்பட்ட மேற்காட்டிய நவீன சாதனங்களை ரயில், மோட்டார், ஆகாயவிமானம் கம்பியில்லா தந்தி, மின்சாரம் .....) உபயோகிக்க கூடாது என்பதற்கு ஒப்பாகுமன்ருே?

மேலும் நாம் இன்னும் மதங்களின் பயமுறுத்துதலாலும், அரசாங்கங்களின் கொடிய சட்டங்களாலும் மேற்காட்டியஈனத்தொழில்களைஒழிக்க முயற்சிப்பது இவ்வளவுகாலம் மதங்களையும் அரசாங்க சட்டங்களையும், எதிர்பார்த்ததினுல் இன்றையவரைக்கும் எப்படி ஏமாற்றமடைந்தோமே? இதைவிட பன்மடங்கு ஏமாற்றமடைவோம் என்பது திண்ணம்.

இன்றேய உலகில் கொலை, களவு, விபசாரம், தற்கொலை முதலிய தீயவழியில் ஈடுபடுகிற மக்களில் முக்காலே மூன்றுவீசம் ஏழைமக்களே. இந்த ஏழைமக்கள் என்ருல் எப்படிப்பட்டவர்கள்? வாழ்க்கைக்கு தேவையான சாதனங்களாகிய உணவு, உடை, வீடு, சுகம் முதலியவைகள் இல்லாதவர்கள்! எனவே மேற்காட்டிய வாழ்க்கைச் சாதனங்கள் இல்லாதவர்கள் தமது இல்லாமையை போக்கிக்கொள்வதற்காக வேண்டி, வேலை தேடித்திரிகிருர்கள். எங்குபோய் கேட்டாலும் "வேலையில்லை" என்னும் பதிலே கிடைக்கின்றன. தேசங்களை நிர்வகிக்கும் அரசாங்கங்களும் வேலையில்லாமல் திண்டாடும் மக்களுக்கு வேலை கொடுக்கிருர்களுமில்லை. அல்லது அவர்களை வைத்து பாதுகாப்பதற்கு ஒரு வழியும் செய்கிருர்களுமில்லை. (வேலையில்லாமல் திண்டாடும் மக்களுக்கு வேலைகொடுக்க முடியாததேன் என்ருல் இன்றைய அரசாங்கங்களுக்கு தேசங்களை நிர்வகிக்ககூடிய முறையே தெரியாதென்று தான் சொல்லவேண்டும!) இல்லாத ஏழைமக்கள் வேலை கிடைக்காமையினுல் வேறு வழியின்றி இல்லாமையை நிவர்த்திபண்ணிக் கொள்வதற்காகவேண்டி, தெரு தெருவாய் வீடு வீடாய்ப்போய்பிச்சைகேட்கிருர்கள். பிச்சையோ தனது தேவையை பூர்த்திபண்ணக்கூடிய அளவு இல்லை. அதில் பத்தில் ஒரு பாகமேனும் கிடைப்பதில்லை. இத்தியாதி பலவழிகளிலும் ஏழைமக்கள் வறுமையை நிவர்த்திபண்ணிக் கொள்வான் வேண்டி முயற்சிக்கிருர்கள். ஆனுல் ஒரு முயற்சியும் பயனளிப்பதில்லை (எங்கு நோக்கினும் உலகத்திலிருக்கும் நிலங்கள் சொத்துக்கள்......முதலியவெல்லாம் சிறுபான்மை யினர்களாகிய முதலாளி கூட்டத்தாரின் கைக்குள் சிக்குண்டிருப்பதே பெரும்பான்மையினர்களாகிய ஏழைமக்கள் பிழைக்கச்செய்யும் அத்தனைவழியும் தடைபடுவதற்கு காரணம்!) இதனுல் இந்த இல்லாத ஏழைமக்கள் "நாம் என்ன செய்வது? இவ்வுலகில் வாழ்வதற்கு நமக்கு வழியொன்று மில்லையே! குழந்தை குட்டிகளை காப்பாற்றுவதெப்படி?" என்று வருந்துகிருர்கள். கடவுளிடத்திலும் சதா தனது குறைபாட்டை சொல்லி மண்டியிட்டு "எல்லாம்வல்ல கடவுளே! எங்கும் நிறைந்தவனே!! சர்வசக்தியே! நீதிமானே!! அருளாளனே! அன்புடையோனே, எங்களுடைய பசியைத்தீரு. எங்கள் குழந்தை குட்டிகள் பசியின் கொடுமையால் மெலிந்து முள்ளும் தோலுமாய் இருக்கின்றனவே; எங்களால் இனி வறுமையின் கொடுமை சகிக்க முடியாது. இப்போது எங்களுக்கு உதவி செய்வார் மனித சமூகத்தில் ஒருவருமில்லையே; இன்னெருக்கடியான சமயத்தில் எங்களை நீதான் காப்பாற்றுவாயாக" என்று மனிதன் தின்னும் அரக்கர்களுடைய ஹிருதயத்தில் கூட தயை உண்டாக்கக்கூடிய முறையில் கடவுளிடத்தில் வேண்டுதல் புரிகிருர்கள்- வணங்குகிருர்கள்- தொழுகிருர்கள்- பலியிடுகிருர்கள். இன்னுமென்ன என்னமோ வெல்லாம்செய்கிருர்கள். ஆனுல் ஒரு பதிலையும் ஒரு உதவியையும் காணேம்!

அந்தோ! இத்தனை வணக்கமும் வேண்டுகோள்களும் விழலுக்கிரைத்த நீர் போலாயிற்றே! பக்தர்கள் சொல்லும் அத்தனை புகழுக்குரிய கடவுளொருவனிருந்தால் இத்தகைய மக்களின் பரிதாபமான காட்சியை பார்த்துக் கொண்டிருப்பானு? மக்களின் பரிதாபகரமான காட்சியை பார்த்துக்கொண்டு ஒருசிறிதும் உதவிசெய்யாமலிருப்பவனை, வணங்கி இவ்வளவு காலம் உலக மக்கள் ஏமாற்ற மடைந்தது போதாமைக்கு இன்னுமின்னும் ஏமாற்ற மடைவது அறிவீனமல்லவா? எத்தனை மக்கள் இத்தகைய கடவுளை நம்பி ஏமாற்றமடைந்தார்கள்! எத்தனை மக்கள் இந்த கடவுள் என்னும் சொல்லை நம்பி சோம்பேறி யானுர்கள்! எத்தனை மக்கள் இந்தகடவுள் என்னும் வெறும் சொல்லை நம்பி இவ்வுலக இன்பத்தை வெறுத்தார்கள்! மனித சமூகம் என்றைக்கு இந்த உலக நிலைமைக்கும் கடவுளுக்கும் ஒத்திட்டு பார்த்து சிந்திப்பார்களோ அன்றைக்கே கடவுள் என்னும் சொல்லின் சூழ்ச்சியையும், புரட்டையும் கடவுள் பேரில் கட்டியிருக்கும் வீண் புகழுரைகளையும் உணர்வார்கள்!

தற்கொலைக்கு காரணம்.

எல்லாவற்றிலும் ஏமாற்றமடைந்து கடைசியில் கடவுளித்திலும் ஏமாற்ற மடைந்த ஏழை மக்கள். பொருளில்லார்க்கு இவ்வுலகில்லையென்னும் பழமொழிப்படி "சகிக்க முடியாத வறுமையின்கொடுமை

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

"பரிதாபத்துக்குறிய பஞ்சமர்கள்"

தானியம் குவியும் "தைமாதத்திலும் எலிவளை தோண்டும் காக்ஷி"

(சித்தக்காடு தோழர் K. ராமையா)

ஆரம்பக் கல்வி.

பஞ்சமர்களின் சொல்லமுடியாத துக்கத்தின் அடிப்படையான தத்துவத்தைப்பற்றி பல பகுதிகளாக பிரித்து 'குடி அரசு'பத்திரிகையில் சொல்லிய பல அத்தியாயங்களிலிருந்து அவர்களின் கல்வித்துரை எப்படி இருக்குமென்பதைப் பற்றி சொல்லத் தேவையில்லை. அவர்கள் தாயின் வயிற்றிலிருந்து வெளி வரும்போதே ரூ. 1—4—0க்கு கடனாளியாகவே வெளிவருகிறார்கள் என்பதை முன் அத்தியாயத்தில் சொன்னேன். ஆகவே இவர்களின் குழந்தைப்பருவமே கடன்காரப்பருமாய் ஏற்பட்டுவிடுவதால், கல்வித்துரை ஒன்று இருப்பதாகவே அவர்கள் அறிந்துகொள்ள முடிவதில்லை. மதலைச்சொல் மாறுமலிருக்கும்போதே மாடு மேய்க்க ஆயுத்தப்படுத்துவதும் ஐந்து வயது ஆரம்பத்திலேயே அடிமை, கேவலம், போன்றவைகளே உருவாயமைந்த ஜாதியில் பிறந்தவர்கள்தான் என்ற பலமான உணர்ச்சியை ஊட்டி புகட்டுவதும், உதைத்தல், அடித்தல், வைதல்போன்ற எக்கொடுமையை செய்தாலும் வாய் பொத்தி எதிர் பேசாமலிருப்பதே தங்களின் ஆரம்பக் கல்வியாகக் கருதிக்கொண்டிருப்பதோடு, இக்கூட்டத்தாரைவைத்து படைத்துக் காப்பதாக மனப்பால் குடித்துக்கொண்டிருக்கும் மிருசுதாரர்களும் மேலே சொன்னவைகளையே ஆரம்ப கல்வியாக கற்பித்தும் வருகிறார்கள். அதோடும், வாய்பொத்திதான் பேசவேண்டும். தெளிவான நடையில் பேசினாலும் பாவம், நல்ல உடைதரித்துக்கொண்டு, ஆண்டைமார் முன் நின்று பேசப்படாது. கௌபீன கோலத்துடன் தான் பேசவேண்டும். தலையில் எண்ணை தடவிக்கொண்டு பேசப்படாது, பறட்டை தலையுடன் தான் பேசவேண்டும். இந்தமுறைசறை எல்லாம் அவர்கள் குழந்தை பருவத்திலேயே தெரிந்துகொள்ள வேண்டிய ஆரம்ப படிப்புகள். போனால் ஏண்டா போனாய் போகாவிட்டால் ஏண்டா போகவில்லை, என்ற மிருசுதாரிடமிருந்து ஜனிக்கும் அர்த்தமற்ற அதிகார கேள்விகளுக்கு கட்டுப்பட்டு நடப்பதே ஹரிச்சுவடி படிப்பு. இந்த ஆரம்ப போதனையிலேயே ஜனிக்கும் பஞ்சமக் குழந்தைகளுக்கு கல்வி அபிவிருத்தி செய்வான்வேண்டி லேபர் டிபார்ட்மெண்டு சார்பாக பலவிடங்களில் ஸ்கூல்வைத்து நடத்துவதுயாவருமறிந்ததே! இந்த லேபர் டிபார்ட்மெண்டை நிர்வாகம் புரிய சம்பளம் வாங்கிக்கொண்டு சஞ்சரிக்கும் திருக்கூட்டத்தாரெல்லாம், மிருசுதாரர்களுடையவும், உயர்ஜாதிகளுடையவும் வம்ச பரம்பரையை சேர்ந்தவர்களென்பதோடு அக்கூட்டத்தாருக்கு துதி பாடுவதேயாகும். எலிக்கும், பாலுக்கும் பூனையை காவல் வைத்தமாதிரி, லேபர் டிபார்ட்மெண்டுக்கு மிருசுதாரர்களுக்கு துதி பாடுபவர்களை நிர்வாக புரியச்சொன்னால் அந்த ஸ்தாபனம் பஞ்சமர்களை முன்னுக்கு கொண்டுவர எப்படி பாடுபட முடியுமென்பதை வாசகர்களே! சிந்தித்துப்பார்க்கட்டும். இந்த லேபர் ஸ்தாபனம் உயர்ந்தவர்களின் உத்தியோக வேட்டைக்காக ஏற்பட்டதென அறியவும். லேபர் பள்ளியில் படிப்பதாகச் சொல்லும் பஞ்சமக்குழந்தைகளை எவ்வளவுதூரம் தாராளமாக மிருசுதாரர்கள் அனுமதிக்கிறார்கள் என்பதை கூர்ந்து கவனித்தால் அந்த ஸ்தாபனம் என்ன நோக்கத்தோடு சிருஷ்டிக்கப்பட்டதென்பது ஒருவாறு புலப்படும். கோடை காலத்தில் அதாவது மாசி மாதத்துக்குப்பிறகு வைகாசி வரையில்தான் மாடு மேய்க்கும் வேலையில் தினம் கொஞ்சம் லீவு கிடைக்கமுடியும். ஏனென்றால் மாசி மாதத்துக்குப்பிறகு பயிர் பச்சையில்லாத காலம். மாட்டை மறைத்துவிட்டு தினம் சில மணிநேரம் பள்ளிக்குவரலாம். இம்முறையில் பள்ளிக்குவர சந்தர்ப்பம் கிடைத்தது கூட குறிப்பிட்ட பள்ளிக்கூட உபாத்தியாயர் வாங்கும் சம்பளத்துக்காக அவருடைய சொந்த பிரயத்தனத்தால்தான் அழைத்துக் கொண்டதே தவிர வேறல்ல. இந்த லேபர் ஸ்கூலில் உத்தியோகம் புரியும் உபாத்தியாயர்களுக்குக் கெல்லாம், தினசரிபட்டி எப்படியாவது பூர்த்திசெய்யும் பொறுப்புக்குத்தான் சம்பளம் கொடுக்கப்படுகிறது. உபாத்தியாயர் பொறுப்பில் செல்லும் மாணவர்கள் அங்குபோகும் சிலமணி நேரத்திலாவது ஏதாவது படிக்கிறார்களா? படிக்கமுடியுமா என்றால், இல்லை. அதற்குள் ஆள்மேல் ஆள் வந்து விடும். மாட்டைக்காணுமென்ற புகாருடன் பட்டிக்காரன் பள்ளி வாசலின் வாயில் வந்தபடி திட்டிக்கொண்டிருப்பான். பறையனெல்லாம்படிக்க ஆரம்பித்தால்தான் பஞ்சம் வந்துவிட்டதென்டான். இன்னும் பல கஷ்டம். பள்ளியில் நுழைந்த உடன் பஞ்சம மாணவர்களுக்கு ஏற்படும். இததொல்லையால் வெளிவரும் காக்ஷி மிகபரிதாபகரமானதாகவே இருக்கும். இத்தொல்லைகளுக்கெல்லாம் லேபர் ஸ்கூல் உபாத்தியாயர்களும் கட்டுப்பட்டுத்தான் நடக்கவேண்டும். ஆகவே பேபர் டிபார்ட்மெண்டால் அவர்களுக்கு எவ்வித நன்மையுமில்லை. லேபர் ஸ்கூலில் படித்த எத்தனை மாணவர்கள் வருஷவாரியில் உயர்தர படிப்புக்கு சென்றிருக்கிறார்கள் என்றால் 100-க்கு ஒன்று கூட இருக்கமுடியாது. கட்டாயக்கல்வி ஏற்பட்டு பல வருஷங்களாகியும் பஞ்சம சகோதரர்கள் எத்தனை பேர்கள் கல்வியில் கடைத்தேறி இருக்கிறார்கள்? இனவித்தியாசம் மாறுமல் எந்த பள்ளிக்கூடங்களிலும் அனுமதிகொடுக்க வேண்டுமென்ற சர்க்கார் சட்டமிருந்தும் அந்த சட்டத்துக்கு கடுகளவு யோக்கியதை ஜாதிக்திமிர் பிடித்தவர்கள் கொடுத்திருக்கிறார்களா? சட்டம் குப்பைத்தொட்டியில் கிடைப்பதைத்தவிர வேறென்ன? இந்த பரிதாப ஜாதியார் தப்பித்தவறி கிறுமங்களிலிருக்கும் ஆரம்பப்பள்ளிக்கூடங்களில் சேர்ந்துவிட்டால், ஜாதித்திமிர் பிடித்தவர்கள் அந்தப்பள்ளிக் கூடத்துக்கேதங்கள் புத்திரபாக்கியங்களைப் போகாமல் பகிஷ்கரித்து விடுவார்கள். இம்மாதிரி சம்பவம் எத்தனையோ நடந்திருப்பதை பத்திரிகைகளில் படித்திருக்கலாம். ஆகவே இந்தபரிதாப ஜாதியாருக்கு சர்வதுரையிலும் ஜாதி வெறியர்கள் செய்யும் மகத்தான தீங்கைப்போலவே கல்வி விஷயத்திலும் அந்த சமூக குழந்தைகளுக்கு கேடு செய்கிறார்கள்.

பஞ்சமர்களிலும் பல ஜாதி

இத்தகைய பரிதாபத்துக்குரிய பஞ்சமர்களின் வாழ்வின் சர்வ பாகத்தில்தான் கல் நெஞ்சம் படைத்த மிராசுதார்கள் மகத்தான கொடுமைகள் செய்கிறார்களென்றதில்லை. இன்னும் அவர்கள் ஒத்து வாழாதபடி பல சூழ்ச்சிகளையும் செய்திருக்கிறார்கள். பறை பதினெட்டு ஜாதி என்ற ஒரு கற்பனையை செய்து அவர்களிடம் ஒற்றுமை நிலவா வண்ணம் செய்திருக்கும் சூழ்ச்சி மிக மிக பரிதாபகரமானதாகும். பரிதாபமே உருவாயமைந்த இந்தக் கூட்டத்துக்கும் இந்த பல ஜாதி கற்பனை அவர்களின் மனதை இறுகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. எப்படி தாங்கள் மிராசுதார் கூட்டத்துக்கே உழைத்துப்போட ஜென்ம மெடுத்திருப்பதாக கருதுகிறார்களோ அதேபோல் தாங்கள் பல ஜாதிகள்தான் என்ற உணர்ச்சியையும் நியாயமாகவே கொண்டிருக்கிறார்கள். பஞ்சமன், பறையன், பள்ளன், வெட்டியான், கோலியன், தச்ச வரத்தான், அச்சு வேளாளன், தீயன், வள்ளுவன் போன்ற பெயர்களையுடைய ஜாதிகள் இந்த கற்பனையின்பாற்பட்டது தான். இக் கூட்டத்துக்கு கடவுள் வழிவந்ததாக சொல்லும் சில மகான்களால் அதாவது தோழர் காந்தி போன்ற மகான்களால் திருக் குலத்தான் என்றும், ஹரிஜனன் என்றும் இருவிதமான ஜாதிகளை சமீபகாலத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஜாதிக்கு சீர்திருத்த ஜாதி என்றும் பெயர். இக் கூட்டத்தினருக்கு இந்த ஜாதி வேற்றுமையை கொடுத்திருப்பதற்கு மூல காரணம் அக்கூட்டத்தின் ஒற்றுமையை பங்கப்படுத்துவதோடு, பிரஸ்தாப வேற்றுமையை பலப்படுத்தி விடுவதின் அளவிலிருந்தே மிராசுதாரன் உடல் நலுங்காமல் உட்கார்ந்து சாப்பிடவும், மேலே குறிப்பிட்ட கொடுமைகளை செய்யவும், ஒரு பெரிய சௌகரியமாய் இருக்கிறது. இந்த ஜாதிப் பிரிவினைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு மிராசுதார்கள் தங்கள் காரியத்தை சாதித்துக் கொள்வது, உடல் நோகாமல் உட்கார்ந்து தின்தின்பது போன்றவைகளை அபிவிர்த்தி செய்து கொள்வது. வெகு விந்தையானது. ஒரு குறிப்பிட்ட மிராசுதாரனுக்கு சில பஞ்சமர்கள அடிமை வேலை செய்வதாக வைத்துக் கொள்வோம். இவர்கள் அடிமை வேலையில் ஏதாவது தவறுதல் செய்து விட்டாலோ அல்லது தவறுதல் செய்து விட்டதாக மிராசுதார் உணர்ச்சியில் கருதி விட்டாலோ அதற்கு செய்யும் பல தண்டனைகளில் ஜாதியைக் காட்டி கண்டபடி திட்டுவது, கீழ் ஜாதிகாரனை விட்டு மான பங்கப் படுத்தச்சொல்வதுபோன்ற கொடுமைகளும் ஒன்றாகும். ஒரு பறையன் செய்த குற்றத்திற்கு பறையனை விட கீழ் ஜாதியாக கருதும் வெட்டியானைக்கொண்டு வைவது, அதாவது வெட்டியாரப் பயலை விட்டு உதைக்கச்சொல், வெட்டியாரப்பயலை விட்டு மயிரை அறுக்கச் சொல், வெட்டியாரப்பயலை விட்டு கட்டி வைத்து உதைக்கச்சொல், என்பது போன்ற மிக இழிவான வார்த்தைகள் பேசி திட்டுகிறார்கள். ஜாதி பேத உணர்ச்சி மிகுந்த பஞ்சமர்களுக்கு, கீழ் ஜாதிக்கார வெட்டியானை காட்டி ஆண்டைமார்கள் பேசிவிட்டார்களே என்று மனதை ரொம்பவும் புண்படுத்திவரும். செய்கையில் நடந்துவிட்டால் மனம் நொந்துவிடும். கீழ்ஜாதியாகக் கருதிக்கொண்டிருக்கும் வெட்டியான்களுக்கு மேல்ஜாதிக்காரர்களை கேவலப்படுத்துவதற்கு தங்களை ஏவிய பெருமை கிடைத்ததற்கு ஆண்டைமார்களால் கிடைத்தென்ற பெருமைக்காக ஆண்டைமார்களை போற்றுவார்கள். இப்படியே பறை பதினெட்டு ஜாதியிலும் நிகழுவதாகும். சோத்துக்கு தாளம் போடும் இக்கூட்டத்தாருக்கிருக்கும் ஜாதி புத்தியைப் பாருங்கள். இந்தமனப்

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க

கத்தோலிக்க நண்பர்களே!

இக்காலத்திலுமா மூட நம்பிக்கை?

[நாகை தோழர் இருதயராஜ்]

கடவுள், மதம், ஜாதி இவைகள் ஒழிய வேண்டுமென்று சுயமரியாதை தோழர்கள் சொல்வார்களானால், வந்து விட்டது சோபம். பூலோகமே அழிந்துவிடுமென்றும், பூமி அதிர்ச்சியுண்டாகிவிடும் என்றும், சுயமரியாதையுள்ளவர்கள் நாஸ்திகம் பேசுபவர்களென்றும், சில பிரகஸ்பதிகளான மத குருக்களும், மத அபிமானிகளும் சொல்லும்பொழுது நான் வருந்தாது என் செய்வது.

பூலோகமானது பழயன கழிதலும் புதியன புகுதலும் என்று அறிவில் அதிவேகமாக வளர்ச்சி கொண்டு வரும் இக் காலத்திலும், ஊசியின் துவாரத்தில் ஒட்டகம் நுழைந்தாலும், பணக்காரர்களுக்கு மோட்சமில்லையென கிறிஸ்த மதமே படிப்பிப்பதுபோல், தனிஉடமை தகர்ந்து பொது உடைமை தோன்ற பாடுபடும் இக் காலத்திலும், சேலை கட்டிய மாதரை நம்பினால் தெருவினின்று தியங்குவரே என்ற பழமை மறந்துபோய், ஆடை கட்டிய ஆண்களை நம்பினால் அடிப்பூதிகளாய்த் தான் மடியவேண்டுமென்ற புரட்சி எண்ணம் பெண் மக்களிடத்தில் குமுரும் இக்காலத்தில், தேவாலயம் என்ற சொல்போய், நாடகசாலை என்ற நவச்சொல் தொனிக்கும் இக்காலத்தில், பரலோகத்திற்கும்,பூலோகத்திற்கும் தோழர் "சேசு" அசரீர் வார்த்தை பேசினார் என்று தெய்வப் பெருமை பேசின நாள்போய், பதினாயிரமயிலுக்கப்பாலுள்ள தோழர்களோடு தற்கால உலகம் தாமஸ் எடிசன் என்னும் மனித கடவுளின் சக்தியால் கண்டுபிடிக்கப்பட்ட மின்சார சக்தியைக்கொண்டு எதிர்முகமாய் பேசுவதைப்போல், அசரீர் வார்த்தைகள் பேசி வரும் இக் காலத்தில், மலடி என்ற பட்டத்தை தகர்த்து, கடவுளின் அருளால் கர்ப்பம் உண்டாகி குழந்தை பிறக்கவும், கர்ப்பத்தை தடை பண்ணினார் என்று நம்பின காலம்போய், வேண்டும்பொழுது பிள்ளைகளை பெற்றெடுக்கவும், வேண்டாத பொழுது கர்ப்பத்தை தடை செய்து கொள்ளவும், தற்கால அறிஞர் உலகம் பாடுபட்டு வரும் இக் காலத்தில், கத்தோலிக்க மதம், இந்துமதம், புத்தமதம் என்று பல மதங்களிருந்தனவாம் என்று நமது பின் சந்ததியார்கள் இறந்த காலத்தை பேசுங்காலம் நெருங்கி வரும் இக் காலத்தில், மக்களை பசிப் பிணியாலும், மத குருக்களின் அடிமைப்படுழுண்டுவரும் ஏழை மக்களை உயிர் பிணங்களாய் ஜீவிப்பதை பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு பரம்பொருள் என்ற ஒரு கடவுள் இருக்க ஞாயமில்லை என்றும், அவ்வாறு கடவுள் என்ற புனைப்பெயரை வைத்துக்கொண்டிருக்கும் ஒரு சக்தியை அடியோடு சமதர்மத்தைக்கொண்டு கங்கணம் கட்டித்திரியும் இக் காலத்திலும், கடவுள் வேண்டும், மதம் வேண்டும், ஜாதிப் பிரிவினை வேண்டும் என்று எண்ணி மனப்பால் குடித்துவரும் கபட வேஷதாரிகளான மதப் பித்தர்களின் நம்பிக்கை சுய நம்பிக்கையா? மூட நம்பிகையா? வென்று தான் கேட்கிறேன்.

இப்பேர்பட்ட ஒரு நம்பிக்கையை மூட நம்பிக்கை என்று எண்ணுவதிலும், எழுத்தால்வரைவதிலும் என்ன தடையிருக்கிறது? அல்லது வேதாகமத்திலுள்ள கோட்பாட்டிலாவது சிறிதாவது ஜன சமூக முன்னேற்றத்திற்கு இடமுண்டா? மதத்தின் கொள்கையும், கர்பனையும் ஒரு விதமானால் கத்தோலிக்கர்களின் நடத்தைகளும் போதனைகளும் மிக விரோதந்தான்.

"இந்தப்புளுகு கந்த புராணத்திலுமில்லை" என்ற பழமொழிபோல், கத்தோலிக்கர்களின் கந்த புராணமாகிய பைபிளில் சொல்லியிருக்கும்படியாகத்தான் கிறிஸ்தவர்கள் நடந்துகொள்கின்றார்களா? ஒருவர் சொல்லுவதையும் கேட்பதில்லை. பைபிளின் படியும் நடப்பதில்லை என்றால் இது எப்பேர்ப்பட்ட கபடமென்று வாசகர்களே ஊகித்துப்பாருங்கள். ஒரு வைரவன் வைக்கோலின் மேல் படுத்துக்கொண்டிருக்கும் பொழுது ஒரு பசுமாடு வைக்கோலையண்டி தன்னுடைய பசியை அந்த வைக்கோலை சாப்பிட்டு அடக்கிக்கொள்ள போகும் பொழுது வைக்கோலின் மேல் படுத்துறங்கும் வைரவன் எழுந்து வள்! வள்!! என்று குறைத்தானும் அப்பொழுது அந்த பசுமாடு தோழனே! நான் சாப்பிடவும் வைக்கோலை கொடுக்கமாட்டாய்-நீயும் புசிக்கமாட்டாய் என்றால் இதானது மமதை என்று அர்த்தமாகும் என்று கேட்டதாம்! அதுபோல் எனது கத்தோலிக்க நண்பர்கள் சுயமரியாதைப் படியும் நடக்கமாட்டார்கள் அல்லது புராண மரியாதைப்படியும் நடக்கமாட்டார்களென்றால் இது எப்பேர்ப்பட்ட அயோக்கியத்தனமானது.

உங்களது ஞான குடும்பமாகிய திருச்சபையில், பல ஊழல்கள் நடந்து வருவதைக் கண்ட எந்த சுயமரியாதை தோழர்களும் நீங்கள் நம்பி வரும் செயல்களைக் கண்டு, அது கத்தோலிக்கர்களின் மூட நம்பிக்கையென முடிவு கட்டாமலிருக்க முடியுமா? அவ்வாறுமுடிவு கட்டும்சுயமரியாதை தோழர்களையும்அவர்களுண்டயலக்ஷியங்களையும் கண்டு பொறுமைப்படும் பிரகஸ்பதிகளும், மத அபிமானிகளும் பல்லையிளிப்பதனால் பலன் கிட்டிவிடுமோ? மூட நம்பிக்கையில் முதல்பரிசுபெற பொருத்தமுள்ள கத்தோலிக்கர்களும் ஓல மிடுவதினால் பலன் கிட்டிவிடுமோ? ஒருபோதும் முடியாது முடியாது!! ஒரு மனிதன் யுத்தத்திற்காக வேண்டிய கருமருந்தை ஒரு கட்டிடத்தில் ஒருவித ஆபத்தும் வராமல் பாதுகாப்போடு பந்தோபஸ்த்தாய் வைத்து, அதனருகிலே அம்மருந்திற்கு தீங்கு விளைவிக்கும் நெருப்பையும் வைப்பானானால் அது எப்பேர்ப்பட்ட மடத்தன்மையோ, அதுபோல நீங்கள் தெய்வமென ஆராதித்தும், வணங்கியும் வரும் தேவபிதாவானவர் பூலோகத்தில் ஆதாம், ஏவாளென இரு மனிதர்களையுண்டு பண்ணி அவர்களுக்கு ஒரு கட்டளையாய் ஓ! மனிதர்களே நீங்கள் எல்லா கனிகளும் அருந்தலாம், ஆனால் இந்த நடு மரக்கனியை மாத்திரம் புசிக்க வேண்டாம், அப்படி மீறி புசிப்பீர்களானால் நீங்கள் பிறகு சாவீர்கள் என்ற கடும்பத்தியமான ஞான மருந்தை கொடுத்துவிட்டு அந்த தேவனின் கட்டளையான பத்தியத்தை முறிக்கும்படியான ஒரு சாத்தானையும் அந்த சிங்காரத் தோப்பில் வைத்து பல்மாய- கைகளால் அந்த சாத்தான் மனிதனை எய்த்து போட்டதால் மனிதர்கள் விலக்கப்பட்ட கனியை தின்றார்களானதால் அவர்களுக்கு தேவன் சாபம் போட்டாரென்றால் இது எப்பேர்ப்பட்ட பச்சை தவறு என்று பாருங்கள். மனிதனை உண்டுபண்ணி நீ அதை புசிக்காதே என்று கட்டளை கொடுப்பதும் மறுபுறம் சயித்தானைவிட்டு மனிதர்களை ஏமாற்றமடைய செய்வதென்றால் இது என்ன? தேவகுதா? அல்லது பாம்பேஷோ இப்பேர்ப்பட்ட அநீதியான ஒரு பரம் பொருளை என்னென்றுரைப்பது என்று இன்னும்தான் யோசனை செய்து வருகின்றேன். இல்லை! இல்லை!! அட பாழும் அநீதியும் பய வஞ்சகமும், சூதும், ஏய்ப்புங்கொண்ட தெய்வமே என்ற முடிவிற்கு வந்துவிட்டேன்.

வேத புராணங்களை சற்று ஆராய்ந்து பார்த்தாலோ முன்னுக்குப் பின் முறணாக வேதாணிருக்கிறது. அதாவது:—

புது ஏற்பாடு632-ம்பக்கம் 1. அதி. 13 & 14 வசனத்தில் பார்த்தால் கடவுள் மனிதனை சோதிப்பவரல்ல மனிதனே மருண்டு சோதனையடைகிறான் என்று சொல்லப்பட்டிருக்கிறது, மறுபக்கத்தில் ஆதி ஆகமம் 44-ம் பக்கம் 22 அதி 1. முதல் 4-ம் வசனம் முடியுமட்டும் தேவனானவர் அபிரகாமை சோதிக்கும்படி அபிரகாமுக்குத் தரிசனையாகி நீ உன் நேச குமாரனை யீசாக்கை வெட்டி எனக்கு பலியிட வேண்டும் என்றதாகவும், அபிரகாம் விசுவாசத்தால் தன் மகனை வெட்டப்போனதாகவும், தேவன் வெட்டாதே நான் உன்னை சோதித்தேன் என்று சொன்னதாகவும் புலப்படுகிறது. இதைக்கொண்டு நன்கு புனருலோசனை செய்து பார்த்தால் இது வேதாகமச் சொல்லா? மூடநம்பிக்கையா? வென்று யோசித்தால் அப்பொழுது உங்களது தேவனின் தவறான தன்மையும், தப்பிலிப் பேச்சுகளும் புலப்படாமல் போகாது. அல்லது இன்னும் நீங்கள் கடவுள் சோதனை செய்கிறார் என்ற மூடநம்பிக்கை கொள்வீர்களானால் அப்பேர்ப்பட்ட பரம்பொருள் மனிதனை சோதிப்பதென்றால் மனிதத் தன்மையில் முடிந்த காரியமா? அப்படி சோதிக்க வேண்டுமென்றால் பாட்டாளியாகிய நம்மையா சோதிப்பது? உண்ண உணவும், உடுத்த உடையும், குந்த குச்சுமில்லாமல், பணக்கார ஆதிக்கர்களிடமும், மதக்குருக்களிடமும், ஜாதி கட்டுப்பாட்டிற்குள்ளும் அகப்பட்டுழலும் ஏழைகளான நம்மையா சோதிப்பது! வெகு பேஷ்! ஏழைமக்களை மாத்திரம் 'கர்த்தா' சோதிப்பதென்றால் அப்பேர்ப்பட்ட ஒரு பரம்பொருளை என்னென்று சொல்வது? இதுவும் போறாமல் பாவம் என்றும், புண்ணியமென்றும் வருப்புகள் வகுத்து பாவம் செய்ததால் நரகம் கிட்டும், புண்ணியம் செய்தால் மோட்க்ஷம் கிட்டுமென்றும் நயவஞ்சகம் காட்டி, பாவம்தவறி செய்து விட்டால் பாவ சங்கீர்த்தனம் என்னும் தேவதிரவிய அனுமானத்தால் போக்கிக் கொள்ளலாம் என்ற ஒரு நம்பிக்கை கத்தோலிக்கர்களிடம் இருப்பதால்தான் உலகத்தில் கொலை, களவு, வஞ்சகம், சூது, வைராக்கியம், பிடிவாதம், மாதர் துரோகம், குருதுரோகமென்று சொலலப்பட்ட துரோகங்களிலும் மனம் துணிந்து செய்துவிடுகிறார்கள். ஏனென்றால் பாவசங்கீர்த்தனம் என்று ஒரு மூடநம்பிக்கையைக் கொண்டு பாவத்தை தொலைத்து விடலாமென்ற நம்பிக்கையிருப்பதினால் தான், பாவத்தை வெகு எளிதில் கட்டிக்கொள்ள ஏதுவாகிறது என்று எவர்களுக்கும் விளங்காமல் போகாது. உதாரணமாக ஒரு மனிதன் ஒரு பலாப்பழத்தை அறுத்து அதனுள்ள சுளையை அருந்த எண்ணி அப்பழத்தை அறுக்கத்துடங்கு முன், கொஞ்சம் நல்ல எண்ணையையும் அருகில் வைத்துக்கொண்டு அறுக்கத்துடங்குகிறு

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

தாழ்த்தப்பட்டோரின் புது நிலைமை.

(சேலம் A. M. பாலசாமி)

சென்ற ஒரு வருஷமாக இந்தியாவெங்கும் தாழ்த்தப்பட்டோரின் நிலைமையைப்பற்றிய விஷயம் ஒரு அகில இந்தியப் பிரச்சினையாகக் காணப்படுகிறது. இந்தியப் பத்திரிக்கைகள் எல்லாம் திடீரென்று மையல் கொண்டதைப்போல் வெகு பிரமாதமாக இதைப்பற்றி எழுத ஆரம்பித்துவிட்டன. பல துறைகளில் பொதுச் சேவை செய்யும் பொதுஜன ஊழியர்கள் எனப்படுவோர் எல்லோரும் இந்தப் பிரச்சினையைப்பற்றி மிகக் கவலையுடையவர்களைப் போன்று நடிக்க ஆரம்பித்துவிட்டனர். எல்லா மேடைகளிலும் (Platforms] இதைப்பற்றிய பேச்சுத்தான். சட்டசபைகளில், மகாநாடுகளில், பொதுக் கூட்டங்களிலும் தாழ்த்தப்பட்டோரின் நிலைமைக்கு வருந்திப் பேசுவோர்கள் அதிகம். ஒருவர் பொது ஜன ஊழியர் என்று எல்லோரும் சொல்லவேண்டுமென்று கருதினுல் முதலில் அவர் தாழ்த்தப்பட்டோரின் பங்காளியாக வேண்டியது முதல் கடமை. அவர்களின் பரிதாப நிலைமைக்குக் கண்ணீர்விட்டு வக்காலத்துப் பேசவேண்டியது இரண்டாவது வேலை. உடனே அவர் உண்மை அரசியல்வாதி ஆகிவிடுகிறுர். தாழ்த்தப்பட்டு இழி நிலையில் உள்ள ஆதித்திராவிடர்களை கிராமங்களில் மரத்தில் கட்டிப் போட்டு, ரத்தம் பீர உதைத்து அடித்து உயிரோடு வதைக்கும் மிராஸ்தார், ஜமீன்தார்கூட்டம்கூட இன்று இந்தப் பிரச்சினைக்கு ஆமாம்சாமி போடுகிறுர்கள். நாய், பன்றி, கழுதையைவிட, மலத்தைவிடக் கேவலமாகக்கருதி, மிலேச்சர்கள், சண்டாளர்கள் என்று சொன்ன வாய்கள் இப்பொழுது தத்கினத்தோம் போட்டு ஹரிஜனச் சேவையைப்பற்றி மிகப் பரிதாபக் குரலில் பேச ஆரம்பித்துவிட்டன. ரோல்ஸ்ராய்ஸ் காரில் உல்லாசப் பிரயாணம் செய்து பட்டுப் பீதாம்பரங்களை உடுத்திச் சர்க்காருக்குச் சாகும்வரையில் நல்ல பிள்ளைகளாக இருப்பதாகச் சத்தியஞ் செய்யும் சர்க்கார் தாசர்களுக்குக் கூட இதைப்பற்றிப் பேசுவது நாகரீகமாகப் போய்விட்டது. தாழ்த்தப்பட்டோரின் பிரச்சினையைப்பற்றிப் பேசுவதற்கு ஒரு அகில இந்திய மகாநாடு கூடுகிறதென்ருல், அங்கு பார்க்கலாம். விளம்பரப் பிரியர்கள், உண்மை நடிகர்கள், மந்திரிகள், சேனுதிபதிகள், உத்தியோகஸ்தர்கள் சட்டசபை அங்கத்தினர்கள். பொதுஜன சேவையர்கள் பேச்சுகள் இருதயத்தை வெடிக்கச் செய்துவிடும், கண்ணீர் ஆராய் ஓடும்!! முடிவு ஒரு பெரிய திட்டத்தோடு மகாநாடு கலைந்துவிடும். மறுநாள் திட்டமும் பறந்திடும்,

இந்த வீண் ஆர்பாட்டங்களுக்கு மத்தியில் பீஹார் பூகம்பத்தோடு மற்ருெரு பூகம்பமும் கிளம்பியுள்ளது. அதுதான் "ஹரிஜன சேவை" என்னும் வெடிகுண்டு. அதற்குத் தலைவர் உலகம் போற்றும் உத்தமர், மகாப் பெரியவர்-அஹிம்சா மூர்த்தி மறுபடியும் சுயராஜ்யம் வாங்கித் தருபவர்-மனித வர்க்கத்திற்கே புதுமையானவர்-தோழர் காம்சந்திரமோகன்தாஸ் காந்தியே ஆவர். இவருடைய இன்றைய புது சங்கதியைப் பற்றி அதிகம் சொல்ல ஆசைப்படவில்லை. வாழ்க்கையில் சரித்திரப் பூர்வமாக ஒரு காரியத்திலாவது அவர் வெற்றி அடைந்தது கிடையவே யாது. மக்களை மடையர்களாக்கித் தாசர் கூட்டங்களை அதிகமாகச் சேர்ப்பதில் அதிகச் சமர்த்தர். சுயராஜ்யப் போராட்டத்தின் தோல்வியால் தனக்கிருந்த அரசியல் செல்வாக்கெல்லாம் குறையவும், இந்திய வாலிபர்களெல்லாம் ஒரே முகமாக எதிர்க்க ஆரம்பித்தவுடன் தனது மகாத்மாத் தன்மைக்கு ஆபத்து வருமென்று நினைத்து இழந்துபோன செல்வாக்கை மீண்டும் பெறச் செய்யும் சூழ்ச்சிதான் இன்று தோழர் காந்தியார் ஹரிஜன நாடகம் நடிப்பதும், கிளர்ச்சி செய்வதும், கண்ணீர் விடுவதும் என அறிக, புருஷன் இறந்துபோனுல் அவரோடு மனைவியும் நெருப்பில் விழுந்து சாம்பலாய்ப் போகவேண்டுமென்கிற மகாக் கொடூரமான சதிவழக்கத்தை ஒழிப்பதற்காகச் செய்த கிளர்ச்சியைவிட, பால்மணமாருத இளம் வயதில் பொம்மைக் கல்யாணம் பண்ணும் பரிதாபக் காட்சியை அடியோடு மாற்றுவதற்குச் செய்த போராட்டத்தைவிடவும் நேற்று நடந்த பீஹார் பூகம்பத்தால் உண்ண உணவின்றி, இருக்க வீடின்றி, உடுக்க உடையின்றித் தவிக்கும் மக்களுக்காக உதவி செய்ய வேண்டுமென்ற கெஞ்சுதலைவிட இன்று அதிகமான பிரசாரம், கிளர்ச்சி, பேச்சுகள் தீண்டாதார்களின் நிலைமையைப் பற்றி எப்படினுங்கூட திடீரென்று தோன்றிய இந்த ஆர்பாட்டங்களால் என்ன பலன் ஏற்பட்டுவிட்டது? நமது தோழர் காந்திபாபு அவசியத்திற்காக ஹரிஜன சேவை செய்ய புறப்படவும் இந்த நல்ல சமயத்தை நழுவவிடக் கூடாதென்று தேசபக்தாகளும், பொது ஜன ஊழியர்களும் சேர்ந்துகொண்டு எல்லோருமாகச் செய்த பிரசாரத்தினுல் தாழ்த்தப்பட்டவர்கள்- தீண்டப்படாதவர்கள்-ஒடுக்கப்பட்டவர்களின் நிலைமையைச் சிறிதளவாவது மாற்ற முடிந்ததாவென்று கேட்கின்ருேம்,

தாழ்த்தப்பட்டோரின் நிலைமை மாறவேண்டுமாஞல் அவர்களின் இழிநிலைமைக்குக்காரணமென்னவென்பதையும், அந் நிலைமையை நிலைநிறுத்துவதற்கு ஆதாரமாய் உள்ளதையும் முதலில் அறிந்து அவைகளை நெருப்பிலிட்டுப் பொசுக்காதவரையில் இந்தப் பேச்சுகளால் எதையும் சாதித்துவிட முடியாது. ரஷ்ய தேசத்து சுதந்திர ரத்த ஓட்டமுள்ள வீரர்கள். ஜார் மன்னனின் கொடுங்கோன்மையான ஆட்சியை முற்படச் செய்து விடுதலையடைந்தது போல, பல்லாயிர வருஷங்களாக அடிமைப்படுத்தப்பட்டு, கொடுமைப் படுத்தப்பட்டு இழி நிலையில் உள்ள தோழர்கள் மூட நம்பிக்கைகளை உதறித் தள்ளி அடிமை விலங்குகளை அறுத்தெறிந்து சுயமரியாதை உணர்ச்சியுடன் கிளம்பி மனித உரிமைக்காகப் போராட முன் வந்தால் தான் சுதந்திரமும், விடுதலையும் அடையமுடியும். காந்தியாரின் எண்ணை சோப்பு, சீவக்காயும், ஒரு முழக் கதர் துண்டும் ஒரு வேலை சாப்பாட்டாலும் தாழ்த்தப்பட்டோரின் நிலைமை மாறுதல் அடையுமா? எத்தனை நாட்களுக்குக் காந்தியாரை எதிர்பாக்க முடியும், தோழர்களே! மிட்டாய் வேண்டுமென்று அழுகிற குழந்தையிடம், கையில் காசு இல்லாத தாயார் மிட்டாயை விஷமென்று சொல்லி, முலைப் பாலைக் கொடுத்து ஏமாற்றுவதைப்போல, கற்ப கோடி வருஷங்களாக மானத்தை மறைக்கவும் துணியின்றி, குடலைக் கையில் பிடித்துக்கொண்டு உயிர் வாழும் ஏழைமக்களை எண்ணையாலும், சோப்பாலும், ஒரு வேளைச் சாப்பாட்டாலும் ஏமாற்றுகிறுர். நம் காந்திபாபு மனித வர்க்கத்தின் மிகக் கொடூரமான பழக்க வழக்கங்களில் மிகவும் மிருகத்தனமான இவ்வட்டூழியம் ஒழிக்கப்பட வேண்டுமாஞல் பல ஆண்டுகளாக, சதா சர்வ காலமாக இயந்திரங்கள்போன்று மனைவி மக்களுடன் அல்லும், பகலும் நெற்றிவியர்வை நிலத்தில் விழவும், உடம்பைச் சாராகக்கசக்கிப் பிழிந்து தொண்டு செய்ததின் பயனுல், வேரொரு சோம்பேறிக் கூட்டம இன்பத்தோடு ஏமாந்த ஏழை மக்களின் ரத்தத்தை உறுஞ்சி, உண்டு உயிர் வாழவும், கபடமின்றி, சலிப்பின்றி பாடுபட்ட பாட்டாளிகள் பட்டினியோடும, பச்சைத் தண்ணீரால் குடலைக் கழுவி நடைப் பிணங்களாய்த் திரியவும் ஏற்பட்டதையும் உணர்ந்து ஏமாற்றத்திலிருந்து தெளிந்து உழைத்தஉழைப்பின் பயனைத்தும் உற்சாகத்தோடு அனுபவிப்பதன் உரிமைக்காகப் போராடத் தியாகஞ்செய்ய முன் வரவேண்டும். பொருளாதார சமத்துவம் ஒன்றுதான் ஏழைமக்களின் துயரைத் தீர்க்க முடியும். பொருளாதாரச் சமத்துவம் ஏற்பட்டாம் தீண்டாமையும், நெருங்காமையும், பாராமையும் பஞ்சாய்ப்பறந்துவிடும்.

வேத சாஸ்திரக் கட்டளையும், ஜாதிமதக் கோட்பாடுகளும், ஆதித்திராவிடர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெரிதும் முட்டுக்கட்டையாய் இருப்பதோடு அவர்கள் என்றும் ஏழ்மையாகவும், அடிமையாகவும் இருப்பதற்கும் ஆதாரமாய் இருக்கிறது. சாஸ்திரங்களும, வேதங்களும் ஆதி திராவிடர்களை என்றும் கூலிகளாக (Labourers) வும், ஏழைகளாகவும் இருக்க நிலைநிறுத்துவதோடு அவர்கள் தப்பித்தவறி சற்று பொருளாதார வசதிகள் ஏற்பட முயன்ருலும் அது சாஸ்திரத்திற்கு விரோதமென்றும் அவர்கள் நரகத்திற்குச் சென்றுவிடுவார்கள் என்றும் பயமுறுத்துகிறது. எல்லா மக்களைப்போன்று அறிவு, ஆராய்ச்சி உடல் உள்ள ஒரு கூட்டத்தார் என்றும், ஏழைகளாகவும், அடிமைகளாகவும் இருக்கவேண்டுமென்று இயம்பும் வேத சாஸ்திரப் புராண ஜாதி மதக் கட்டுப்பாட்டை பகுத்தறிவின் சம்மட்டியால் தூளாக்கி எல்லாவற்றையும் சேர்த்து வங்காளாக் குடாக்கடலில் வீசி எறிந்து நியாயமான மனித உரிமைக்காகப் போராடவேண்டியது விடுதலையில் ஆர்வங்கொண்ட தோழனுடைய கடமையல்லவா? மதமும் ஜாதியும் தாழ்த்தப்பட்டோரின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முதல் முட்டுக்கட்டை, இரண்டாவதாக சிறிதேனும் உழைக்காத சோம்பேறிக் கூட்டம் அவர்களைப் பிடுங்கித் தின்னுவதோடு தோளமேல் சவாரி செய்கிறது. இவ்விரு அசல் அட்டூழியங்களை அரவே ஒரே முகமாக எதிர்த்துப்போரிட்டுவெற்றி பெறச் சமதர்மமொன்றே அவர்களுக்குதவும், சமதர்மமொன்ருல்தான் ஏமாந்த ஏழை மக்களின் நிலைமையெல்லாம் மாறுதலடையும் (Socialism is the only remedy for the world human crisis) ஏமாந்தமக்களே! பாடுபட்டுப் பட்டினியாய் இருக்கும் பாட்டாளிகளே! சமதர்மமே முடிவான லட்சியம் என்றெண்ணி உயிருள்ளவரையில் இதற்காகவே உழைத்து எல்லா மக்களுக்கும் இன்பமுடன் அமுத ஊட்டும் சமதர்மத்தை நிலைநாட்டுவீர்.

ஜஸ்டிஸ் கட்சியின்

அதிருப்தி நிலை.

(தோழர் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்.)

நமது ஜஸ்டிஸ் கட்சியின் நிலைமை இன்று எவ்வாறு இருக்கின்றது? எங்கு நோக்கினும் அதிருப்தி. எங்கு திரும்பினும் உணர்ச்சியின்மை. ஆதிகாலத்தில் அடிப்பட்டு, மண்டை முதலியன உடைபட்டு, சக்தத்தைப்போட்டு, ரத்தத்தைச் சிந்தி, சொத்துக்களை இழந்து, சுகத்தையெல்லாம் துறந்து, தன்னலம் காணாது பாடுபட்டு புரிந்து வந்த வாலிப வீரர்களின் உணர்ச்சியும் ஊக்கமும் எவ்வாறுள்ளது இன்று? அவர்களது ஊக்கம் குன்றி உணர்ச்சி அழிந்து, உருவம் சிறுத்து, உலகத்தையே வெறுத்து ஒன்றிலும் நம்பிக்கையற்ற வாய்த்திரிகின்ற காட்சி ஒவ்வொருவர் மனத்தையும் உருகவைக்காமல் போகாது? கூப்பாடு போட்டு நம் கட்சியை ஸ்தாபித்த அருந்தொண்டர்கள் என்ற அரிய வீரர்கள் இன்று சாப்பாடு தேடும் வகை இன்னது என்று தெரியாமல் சிதைந்தொழிந்து சீர்கெட்டு வாழ்கின்றனர்? இறக்கின்றனர். ஆனால் நேற்றைக்குவந்து தஞ்சை நகரில் நம்மிடம் தஞ்சம்புகுந்து தங்க இடம்கேட்டு கெஞ்சி நின்ற தன்னலமிகள், தான் தோன்றித் தம்பிரான்களாய் சர்வாதிகாரம் பண்ணித் தாண்டவமாடி வருகின்றனர். நமது ஜஸ்டிஸ் கட்சியின் [illegible]ளையை உணர்ச்சியின்மை, ஊக்கக்குறைவு என்னும் கொடும் பேய்கள் தமது இரு கரங்களாலும் இறுகப்பிடித்து நெரித்துக்கொண்டு வருகின்றன. என்றைக்கு அது வாயைப்பிளக்குமோ என்ற நிலைமையில் அது இருந்து (இறந்து) வருகின்றது. இக்கட்சியானது தோழர் எஸ். சத்தியமூர்த்தி கூறியபிரகாரம் ஐந்து அடி ஆழத்தில் தோண்டிப் புதைக்கப்படவில்லையானாலும், அது மூர்ச்சையற்று அசைவற்று இருக்கும் தருவாயில் அதை உயிரோடு படையேற்றி ஜமீன்தாரர்கள் என்பவர் தோட்களின்மீதே சுடுகாட்டிற்குச் சென்றுகொண்டே இருக்கிறது. இத்தருவாயில் கட்சியின் உண்மை வாரிஸ்க்காரர்கள் விரைந்தோடிச் சென்று அதன் உடலைப்பிடுங்கிவந்து ஊக்கத்தோடு சேர்ந்து, அதன மூர்ச்சை தெளிவித்து, அதற்குப் புத்துயிர் கொடுக்கவில்லை என்றால் நாளையே இறக்கும் நமது ஜனநாயககட்சி என்பது முக்காலும் நிச்சயம். இதுவே ஒவ்வொருவருடைய உணர்ச்சியும், உண்மையான கருத்துமாகும்.

நமது நாடு பனகால் அரசரைப பறிகொடுத்த நாளிலிருந்து நமது கட்சியானது தலைவரற்றதாயும் தந்தையற்றதாயும் இருந்தே வந்துள்ளது. பிளவுகள் பலவும், கட்சிப்பிரதி கட்சிகளும், பிளேக்கு நோயைப்போல் பரவி, நம்பிக்கையின்மையும் நாசமாக்கும் கருத்துக்களுமே மலிந்து நம் கட்சியின் ஒற்றுமை வாழ்க்கையும் உயர்ந்த லக்ஷியங்களும் முற்றிலும் பறந்துபோய், மோசமான நிலைமைக்குக்கொண்டுவரப் பெற்றிருக்கிறது நம் ஜஸ்டிஸ் கட்சி.

ஒவ்வொரு மனிதனும் தன்னைத் தலைவனாக்க கருதிக்கொள்ளுவதோடு நில்லாமல், தனக்குப்போற்றலும் புகழும் பொருந்திய பூமாலைகள் சூட்டப்படாவிடினும், மற்றவரைச் சும்மாவிடுவதில்லை. அரசியல் உலகத்தில் தன்னலமே இம்மியும் அற்ற சந்நியாசிகள் இருப்பது அரிதுதான். ஆனால் ஒழுங்கற்ற முறையில் அச்சுயநலம் தாண்டவமாடுமேல், அது ஒருவனுடைய அரசியல் கொள்கையின் அறிகுறியாகவும் அடையாளமாகவும் கையாளப்படுமேல், அது ஏனைய ஒழுக்கமுறைகளை எல்லாம் தகர்த்தெறிந்து செல்லுமேல், அத்தகைய சுயநலம் என்னும் பேயைத் துண்டுதுண்டாய் வெட்டிப் பொசுக்குவது உண்மைத்தொண்டர்களின் கடமையல்லவா? தற்காலத்தில் நமது கட்சிக்குத் தலைமை வகிப்பதாகப் பறைசாற்றுபவர்களின் நோக்கு சாற்றுதற்கியலாத முறையில் இருக்கின்றது. "தற்காத்துத் தற்கொண்டார் பேணி"த்தம்மையே வலுப்படுத்திக் கொள்ளுவதே அவர்களின முக்கிய நோக்கமாகவிருந்து வருகின்றது. அவர்களின அழுக்கும் அவமதிப்பும் சார்ந்த லக்ஷியங்களை நிறைவேற்றுவதில், அவர்கள் எத்தகைய இழிவான முறைகளையும் பின்பற்றுவதில் சற்றும் பின்வாங்குவதில்லை. நம் தேசத்தில் இந்த ஜஸ்டிஸ் கட்சியில் இருப்பதைப்போல வேறெந்தக் கட்சியிலும இத்தகைய பெரும் பெருச்சாளிகள உள்ளிருந்து கொண்டே அரித்துவரும் காட்சியைக் காண்பது அரிது. இது உண்மையேயன்றோ?

இன்றையதினம் ஜஸ்டிஸ் கட்சியில் பொதுவாகவும், சட்டசபைக்கூட்டத்தில் சிறப்பாகவும், முதல்தரமான மக்களை கிடையாது என்று கூறினால் அது முற்றிலும் பொருந்தும் உண்மைபற்ற உறுப்பினரும் உபயோகமற்ற பேர்வழிகளுமே கட்சியைக் கைப்பற்றிக்கொண்டு அதன்வாயிலாக வரும் அளவற்ற பயன்களையும் பரிசுகளையும் அடைந்தும் அனுபவித்தும் வருவது பிரத்தியட்சக் காட்சியாகும். ஆதியில் இக்கட்சியில் அணிபா விளக்காய் இருந்து அழகுபடுத்திக் கொண்டிருந்த அரியமக்களிற் பலர், அமுங்கிக் கிடக்கும் இடம் தெரியாமல் இருக்கிறார்கள். திவான்பகதூர் இராமசாமி முதலியார் அவர்களோ டாரண்டோவிற்கும், லண்டனுக்கும், கப்பற் பிரயாணம் செய்வதிலும், வெள்ளைக் காகிதத்திட்டத்தைக்காக்க வீறிட்டுக் கதறியபின் வீண் ஏமாற்றம் அடைவதிலுமே தன் அரியகாலத்தைக் கடத்திவருகின்றார். ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றிச் சிந்திக்கவும் அவருக்கு அவகாசம் இல்லை. அவரது இல்லம் இப்போது டெல்லியிலும் சிம்லாவிலும் இருக்கின்றது. அவரது உள்ளமோ சட்ட மெம்பர்? ஸ்தானத்தில் பதிந்துள்ளது. [அது ஒருவழியாக முடிந்து விட்டது. ப-ர்] ஏனைய விஷயங்கள் எல்லாம் அவருக்கு மாயையாகத் தோன்றுகின்றது. சர். ஏ. பி. பாத்ரோ என்பவரோ, தனிப்பட்ட முறையில் சர்வ தேசத்தலைவரெனத் தன்னைத்தானே எண்ணிக்கொண்டு உத்தியோகம் என்னும் சரிப்புமலைச் சிகரத்தை யடையத் தத்தளித்துக்கொண்டு நிற்கின்றார் ஒருபுறம். மற்றொருபுறம் சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் தனது பழையகாலத்திய சக்தியையும் சாமர்த்தியத்தையும் மறந்து குகைக்குள் இருக்கும் முனிவரைப்போல் வெளியில் தலைகாட்டாமல் வாளாவிருந்து வருகிறார். இப்போது அவ்வரிய தலைவரை கவுன்சில் ஆப் ஸ்டேட் என்னும் சட்டசபை ஒருவாறு ஏற்றுக்கொண்டுள்ளது. [இப்போது சட்டமந்திரியாகவும் நியமிக்கப்பட்டார்] இன்னும் நமது டாக்டர் சி. நடேச முதலியாரோ வெனின், அவர் உண்மையும் ஊக்கமும், உணர்ச்சியும் குன்றுவண்ணம் ஆதிகாலத்தைப்போலவே உழைத்துக்கொண்டுதான் வருகின்றார். ஆனால் நம் கட்சியின் சில பிரமுகர்கள் அவருக்கு எவ்வளவு இடையூறுகள் செய்ய வேண்டுமோ, அவற்றை எல்லாம் இடைவிடாது ஊக்கத்தோடு செய்துகொண்டேதான் வருகின்றார்கள். இவையனைத்திலும் கேவலமானதும் கேட்கவொண்ணாததுமான ஒரு நிகழ்ச்சி சமீபத்தில் நிகழ்ந்தது. நமது ஜஸ்டிஸ் கட்சி என்னும் ஜனநாயகக்கட்சியின் ஸ்தாபகரான தியாகராயப் பெரியாரின் சந்ததியில் வந்த, திவான்பகதூர் பி. டி. குமாரசாமி செட்டியார் இக்கட்சியினின்றும் விலகிக்கொண்டார். அந்தோ! இதனினும் விபரீதமான காட்சி இந்தியாவில் எங்கேனும் உண்டோ? ஜஸ்டிஸ் கட்சியின் ஸ்தாபகரும், தலைசிறந்த தலைவருமான சர். பி. டி. செட்டியாரின் வீரம் பொருந்திய இரத்தம், தன் நரம்புகளில் ஓடும் பெரும் பேறுபெற்ற குமாரசாமி செட்டியார், தனது வாழ்க்கையில் ஒவ்வொரு முயற்சியிலும் தோற்கடிக்கப்படுவது. அதுவும் யாரால்? தனது பெரிய தந்தையாரின் அரும் பெயரைக் காலையிலும் மாலையிலும், கனவிலும், நனவிலும், கதறிக்கூவி வயிற்றைக் கழுவிவரும் சில நன்றிகெட்ட அரசியல் வாதிகளால், இவ்வநியாயம் ஒவ்வொருவர் மனத்தையும் இளகவைக்கும் அன்றோ? ஜஸ்டிஸ் கட்சியின் தற்காலப்போக்கு பரிதாபத்துக்கே உரியதாகும். உண்மை உழைப்பாளிகள் உருக்குலைந்து நாசமாக, ஓர் சில சுயநலமிகள், போலிப்புலிகள் உண்டு கொழுத்து உயிர் வாழ்கின்றனர். தனத்துக்கே, இன்று ஓர் தனிமதிப்பு வழங்கப்படுவதும், பொய்மையாளர்க்கே புகழ் மாலைசூட்டுவதும் வழக்கமாகிவிட்டது. பணமுடிப்பு பலத்தவர்களே நமது கட்சியை ஆளுகின்றனர். குணம், படிப்பு இவை கொண்டவர்கள் இங்கு குந்தவும் இடமில்லை. நமது உன்னத கட்சியின் பேரும் பெருமையும் இன்றைக்கிருப்பது போல், எந்தக்காலத்திலும் அழிந்

தொடர்ச்சி 12-ம்பக்கம் பார்க்க.

புரட்சி

ஈரோடு 1934- ஏப்ரல் மீ 1-உ

நமது நாகரீகம்.

—:O:—

உலகில், மக்கள் அடைந்து வரும் நிலைமையைக் காட்டுமிராண்டித் தன்மையென்றும், அநாகரீக வாழ்வென்றும், அரை நாகரீக நிலைமையென்றும், நாகரீக நிலைமையென்றும், வகுத்து வருகின்றார்கள். காட்டுமிராண்டித் தன்மையில் மக்கள், விலங்கினங்களைப் போல், வீடுவாசமின்றி, நாளைக்கு வேண்டுமென்ற பகுத்தறிவின்றி, மிருகாதிகளைப போல் அங்குமிங்கும் இரைதேடி வாழ்ந்துவந்த வாழ்க்கையாகும். இவ்வாழ்க்கையில், இன்றைக்கும் சில மக்கள் வாழ்ந்துவருகின்றார்கள். இலங்கையிலிருக்கும் வேடர்களும், ஆப்பிரிக்காவில் வாழ்ந்துவரும் காட்டுமனிதர்களும், புஜீதீவில் சில காலத்திற்குமுன வாழ்ந்துவந்த மக்களும், இன்றைக்கும் காட்டுமிராண்டித் தன்மையிலே இருந்துவருகின்றனர். இந்நிலைமையிலுள்ள மக்களுக்குக் கல்யாணமென்ற கூட்டுறவு கிடையா. பெண்களைச் சட்டிபானைகளைப் போல் ஆண்டனுபவித்து வருகின்றார்கள். இதற்குமேற்பட்ட மக்கள் நிலைமையில்மனித சமூகம், சிறு சிறு கிராமங்களில் வசித்துவரத்தலைப்பட்டனர். கிராம தலைவர்களென்றும், கிராமச் சங்கங்களென்றும், சமூக வாழ்க்கையை உண்டாக்கிக்கொண்டு, தத்தம் கிராமங்களில் சிலகாலம் தங்கியிருந்து, வேறு பிரதேச கிராமங்களைக் கைக்கொண்டு, ஏகதேசமாக நிலங்களையும் பயிர்செய்து வந்தகாலம் அநாகரீகக் காலமென்றுசொல்லப்படும். ஆண்களையும் பெண்களையும் அடிமைப்படுத்தி வந்த காலமிதுவே. அடுத்தடுத்து ஒரு சமூகத்தார் மற்றொரு சமூகத்தாரோடு போர் புரிந்துவந்த காலமுமிதுவே. இந்த அநாகரீகக் காலத்தில் அம்பு, வில் ஆயுதங்களும், எலும்பு, தோல் சுக்கி முக்கி கற்களை ஆயுதங்களாகவும், ஆபரணங்களாகவும தரித்துவந்திருக்கின்றனர். மனிதர் இறந்தால் அவருடைய ஆன்மா உலகில் திரும்ப உலாவுமென்ற எண்ணமும், இக்காலத்தில் தோன்றியதாக ஊகிக்கலாம். அந்த வாழ்க்கையில் பொருளை வாங்குவதும் விற்பதும் கிடையாது. இவ்வித வாழ்க்கையில், அரேபியர் நமது நாட்டில் குறவர், மறவர் இன்னும் அனேக ஆப்பிரிக்க மக்களும் வாழ்ந்து வருகின்றனர்.

அரை நாகரீக வாழ்க்கையில், மக்கள் நகரங்களிலும், பட்டினங்களிலும் சில ஆயிரம் பெயர்கள் தங்கி வாழ ஆரம்பித்தனர். பயிர்த்தொழில் முக்கியமாக உயிர் வாழ்விற்கு அத்தியாவசியமாக ஏற்பட்டது. தலைவனை அரசனென்றும், பாதுகாப்பிற்கு வீரர்களென்றும், மந்திரிப்ரதானிகளென்றும், இந்த அரை நாகரீக காலத்தில்ஏற்பட்டது. சொத்துரிமையும் இந்தக் காலத்தில் உண்டாகியது. போக்குவரத்திற்கு வண்டிகளும், ரதங்களும் ஏற்பட்டன. பண்டைக் காலத்து பண்டமாற்றுக்குப் பதிலாக, நாணய செலாவணி ஏற்பட்டது. பண்டைக் கால அடிமைகளும் இந்த வாழ்க்கையிலிருந்து வந்தனர். பெண்களுக்குச் சுதந்திரம் ஒன்றுமில்லாமலே புருஷனுக்கு அடங்கி நடக்க வேண்டுமென்ற மனப்பான்மையும், இவ்யுகத்தில் ஏற்பட்டது. கல்விக்கும், கேள்விக்கும் சிற்சில ஸ்தாபனங்களும் உண்டாயின. காட்டுமிராண்டித் தன்மையில் வீட்டிற்கு வீடு, கிராமத்திற்குக்கிராமம், சண்டை போட்டுக் கொண்டுவந்ததுபோய், தேசத்திற்காக சண்டைபோடும் நிலைமை உதித்தது. சிற்சில பண்டங்களில் வர்த்தகமும் செய்து வந்தார்கள். நாடு நகரங்களில் ஆயிரம் பதினாயிரக்கணக்காக வாழ ஆரம்பித்தனர். மதங்களும், புராணங்களும் உற்பத்தியாயின. குற்றவாளிகள் கொடூரமாக நடத்தப்பட்டு வந்தனர். ஆடு, மாடு, குதிரை முதலிய மிருகங்கள் மனிதனுக்கு உபயோகப்படும்படியாக பழககபபட்டும் வந்தன. சிற்சில நீதிஸ்தலங்களும் ஏற்பட்டுள்ளன. அநாகரீக காலத்திலுண்டான தலைவன் இந்த [செமி] அரை நாகரீகத்தில் அரசனாக மாறினன். அவனுக்கு தெய்வத் தன்மையும் ஏற்பட்டது. மக்கள் ஓரிடத்தில் நிலைத்து வாழ்ந்துவர ஆரம்பித்த காலமிது.

இந்தக் காலம், பாரத இராமாயண வாழ்க்கை நடந்து வந்ததாகச் சொல்லும் காலமாகும். தற்போது இந்த அரை நாகரீகத்தில் அப்சீனியர்களும் தென் அமெரிக்க வாசிகளும், சிற்சில பஸிபிக் தீவிலுள்ள மக்களும் பெரும்பான்மை இந்திய மக்களும் வாழ்ந்துவருகின்றனர். பூர்வ காலத்தில் தமிழர்கள் அடைந்த நாகரீகமும் இந்த அரை நாகரீகமென்றே கருதப்படும். பண்டைக்கால ஈஜிப்ட் தேச நாகரீகமும் அப்சீனியன், கார்டியன், பபிலோனியன்நாகரீகங்களும், இந்த அரை நாகரீகத்தைச் சேர்ந்தவை. மத்தியகால ஐரோப்பிய நாகரீகமும் இந்த அரை நாகரீகத்திலே மூழ்கிக்கிடந்தது. கிரீஸ், ரோமாபுரி நாகரீகமும் இந்த நாகரீக காலத்தைச்சேர்ந்தவை.

இந்த அரை நாகரீகத்திலிருந்து பெறப்பட்ட நாகரீகம், தற்கால நாகரீகமாகும். இதன் முக்கிய இலக்கணமென்னவெனில், லட்சக்கணக்காக மக்கள் நாடு நகரங்களில் வாழ்ந்துவர ஆரம்பித்தனர். ஒருவருக்கொருவர் சண்டை செய்துகொள்ளாமல், நியாயஸ்தலங்களை ஏற்படுத்திக்கொண்டு, தங்கள் விவாதங்களைத் தீர்த்துக்கொள்ள ஆரம்பித்தனர். அவரவர்களின் அபிப்பிராயங்களை முறட்டுத்தனத்தில் அடக்கி ஆள்வதை விட்டுவிட்டு, விவாத மூலமாக பகுத்தறிவைக் கொண்டு மாற்றிக்கொள்ள ஏற்பட்ட காலமுமிதுவே. பொதுஜனவாக்கென்று ஏற்பட்ட காலமுமிதுவே. அரசுகள் செய்வதெல்லாம் ஒத்துக்கொள்ளவேண்டுமென்ற கட்டாய திட்டத்தை மாற்ற ஏற்பட்ட காலமுமிதுவே. உலகிலுள்ள பொருள்கள், சரிசமத்துவமாக உலகில் உழைப்பவர்களுக்கு உரியது என்ற எண்ணமுளைத்ததும் இந்தக்காலமாகும். கொடூர தண்டனைகளால் அடக்குவது மிருகத்தன்மை என்ற மனப்பான்மை ஏற்பட்டதும் இந்தக்காலத்தில் தான். சமத்துவம், சகோதரத்வம, சுதந்தரம், உலக மக்கள் யாவருக்கும் உரியது என்ற பேரிரைச்சல் எழுந்ததும் இக்காலமே. பெண்கள் ஆண்களுடன் உலக வாழ்க்கையில் சரி சமத்துவ உரிமையுடையவர்கள் என்ற மனப்பான்மை உண்டான காலமுமிந்த நாகரீக காலமே. ஏகதேசமாக சிற்சிலரே சர்வஞானத்தைப் பெற்றுவந்த காலம்போய், சர்வமக்களும் பெறவேண்டுமெனறு வற்புறுத்தப்பட்டுவரும் காலம் இந்த நாகரீக காலமே! எவ்வித அடிமைத்தனமும், மக்களவாழ்க்கையினின்றும் நீக்கவேண்டுமென கட்டாயப்படுத்துவதும இந்த தற்கால நாரீக காலத்தில்தான்.

தற்கால நாகரீகம், பண்டை கால காட்டுமிராண்டி, அநாகரீக காலங்களிலிருந்து பெறப்பட்டு வந்தமையால், அந்தந்த காலத்து வாழ்க்கை, தற்கால நாகரீகத்திலும் அங்குமிங்கும் நிறைந்து கிடக்கின்றன. அந்தந்தக் காலத்து பழக்க வழக்கங்களும், நீதி நெறிகளும், நம்பிக்கைகளும், கோட்பாடுகளும் மாறி வருகின்றன. கால தேச வர்த்தமானப்படி மேற்கண்ட சட்டதிட்டங்களும், விலக்கு விதிகளும் மாறுகின்றன. ஆனால் அப்படி மாறிவந்தும், கால தேச வர்த்தமானங்களுக்கு உதவாத உபயோகமற்ற திட்டங்கள், அடிபட்டுப் போகாமல், தற்கால நாகரீகத்தில் அங்குமிங்கும் நிலைத்து வருகின்றன. தற்கால நாகரீகத்தில் உபயோகமற்ற பலவித கொள்கைகளும், கோட்பாடுகளும் சிதறுண்டு வந்தபோதிலும், முழுமையும் நாசமடையவில்லை. அவைகள் நாசமடையவேண்டில், அவைகள் என்னவையென்று பொது மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். முதலாவது, அரசுகளின் ஏகாதிபத்தியமும், காட்டுமிராண்டியின்வாழ்க்கையினின்றே தொடர்ச்சியாக வந்து கொண்டிருக்கிறது. ஆதிகால காட்டு மிராண்டித்தலைவன், தன்னைச் சேர்ந்த குடும்பத்தவர்களையும், சுற்றியுள்ள மக்களையும் அடக்கியாண்டு வந்தான். அதைப்போலவே, இன்றைக்கும் ஏகாதிபத்திய அரசுகளும், எல்லா உலக சுகபோகங்களை தங்களுடையதென்று கோடானுகோடி மக்களை அடக்கியாண்டு வருகின்றன.

காட்டுமிராண்டி, புலித்தோலையும், கோரப்பற்களையும், எலும்புகளையும், மண்டை ஓடுகளையும், அம்பு, வில்களையும் கொண்டு, தன்னை அலங்கரித்துக் கொண்டு கிராம மக்களை பயப்படுத்தி வந்ததைப்போல, தற்கால அரசுகளும், சேவகர்களையும், சிப்பந்திகளையும், இராணுவத்தையும, இராணுவத்தலையர்களையும் கொண்டு, பல கோடி மக்களை அடக்கி ஆண்டுவருகின்றனர். மந்திரங்களையும், தந்திரங்களையும் கொண்டு, காட்டுமிராண்டித் தலைவன் தனது பிரஜைகளை பயமுறுத்தி வந்ததைப போல், இக்காலத்து அரசர்களும், மூட மதங்களையும், புராண இதிகாசக்கதைகளையும் கொண்டு, பல கோடி மக்களை பயமுறுத்தி வருகின்றனர். பண்டை காலத்து காட்டுமிராண்டிகள், பெண்களையும், பிள்ளைகளையும் கொடூரமாக நடத்தி வந்ததைப் போல, இன்றைக்கும் கோடான கோடிபெண்களும், சிறுவர்களும் கொடூர

மாக நடத்தப்படுகின்றனர். அந்தக்காலத்தில் உழைப்பவனுடைய உழைப்பையும், அதன் பயன்களையும், ஆதிகால அநாகரிகத்தலைவன், தனது சுகபோகத்திற்கு இறையாயிட்டு வந்ததைப்போல், இன்றைக்கும், முதலாளிகளென்றும், நிலச்சுவான்தார்களென்றும், பெயர்படைத்த பல்லாயிரம்பேர், பல கோடி பல்லாயிரம் மக்களின் உழைப்பையும், அதனாற் பெறும்பயனையும், அபகரித்துக்கொண்டு வருகின்றனர். பொது மக்கள், அந்தக்கால தந்திரத்தையும், சூழ்ச்சியையும் தெரிந்துகொண்டால், தனது ஆதிக்கத்திற்கு அபாயம் வருமென்று அநாகரிகத்தலைவன் எண்ணிவந்ததைப் போல், இன்றைக்கும், நாகரிகமடைந்தவனெனச் சொல்லும் அரசனும், பொது மக்கள் விஞ்ஞானமடைந்தால், தனது ஆதிக்கத்திற்கே அபாயம் வருமென எண்ணி வருகின்றான். ஆதிகால அடிமைத்தனம் தற்காலத்தில் பல்வேறு ரூபமாக சமூக வாழ்க்கையில் நிறைந்துள்ளது. முக்கியமாக மத்திர தந்திரங்களால் கட்டுண்டு கிடக்கும் மக்களின் அடிமைத்தனம் அறவே ஒழியவேண்டும். மதங்களும், இதிகாச புராணங்களும், மக்களின் அடிமைத்தனத்தை நீடிக்கச் செய்து வருவது, தடைபடவேண்டும். ஏகாதிபத்திய அரசர்களால், அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் கோடான கோடி மக்கள், அடிமைத்தனத்திலிருந்து விடுபடவேண்டும். பண்டைகால துற்பழக்க வழக்கங்களால் தாழ்த்தப்பட்டபலகோடி பெண்மக்கள், சரி சமத்துவசுதந்தரத்தைப் பெறவேண்டும். சொந்தக்காரர்களாலும், நிலச்சுவான்தார்களாலும், அடிமைப்படுத்தப்பட்ட கோடானகோடி குடி மக்கள், நிலத்திலும் நீரிலும் சரி சமத்துவம் பெறவேண்டும். உழைப்பவனுக்கே தனது உழைப்பின் முழுபயன் சேரவேண்டும். இதுதான் தற்கால நாகரிகத்தின் சரி சமத்துவ வாழ்க்கை. உலக மக்களில் எவனுக்காகினும், இந்த சரி சமத்துவ சமதர்மம் குறைவுபடுமேயானால், அது காட்டுமிராண்டி அநாகரீக வாழ்க்கையே யொழிய நமது நாகரீகமாகா.

துணுக்குகள்.

லண்டன் மாணவர்கள்.

குடியேற்ற நாடுகளில் உள்ள மக்கள், பரிபூரண சுயேச்சையோடு வாழவேண்டுமென்கிற கிளர்ச்சியால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு அழிவை உண்டாக்கவேண்டுமென்கிற கோட்பாடு லண்டன் சர்வகலாசாலைகளில் ஏற்பட்டு வருவதானது அங்கு சர்வகலாசாலை அதிகாரிகளிடையே சிறிது பீதியை உண்டாக்கி வருகிறது. 12 இந்தியப் பொதுவுடமை வாதிகளைத்தவிர்த்து கணக்குப்பார்த்தாலும், அங்கு வசித்துவரும் சில ஆயிர இந்திய மாணவர்களும் கிரேட் பிரிட்டனில் ஸ்திரமாக நிலைபெற்றுள்ள சிலரும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு விரோதமான இயக்கத்திலேயே சார்ந்துள்ளனர் என்பது பகிரங்க இரகசியம். அந்த சர்வகலாசாலை யூனியன்களில் நிகழும் தர்க்க வாதத்தின் போது இரு இந்தியர்கள், பொதுவுடமை தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவதும், இருபது பேர் தொழிலாளர்களுக்காகவும், சமுதாய ஜனநாயகத்துவ கொள்கைகளுக்காகவும் பரிந்து பேசுவது வாடிக்கையாகும். இந்த மாதத்தின் முதல் வாரத்தில் ருசிகரமான இரண்டு சர்வகலாசாலை மீட்டிங்குகள்நடைபெற்றன. அதில் ஒன்று கேம்பிரிட்ஜ் மாணவர்களின் சோஷியலிஸ்ட் கழகத்தாரால் கேம்பிரிட்ஜில் கூட்டப்பட்டதாகும். இதில் பென் பிராட்லேயும், சக்லத்வாலாவும் முக்கிய பேச்சுக்காரர்களாவார்கள்.

பிரிஸ்டல் சர்வகலாசாலையில் வருஷாந்திர விழா சனிக்கிழமை (3-3-34) இரவு நடந்தது. சர்வகலாசாலையின் 'இன்டர் நேஷனல் சோஷியலிஸ்டு குரூப்' மீட்டிங்கை ஆரம்பித்தது. அன்று பேச எடுத்துக்கொண்ட விஷயம் "ஜனநாயகத்துவமும்—இந்திய விவசாயிகளும்" என்பதைப்பற்றியதாகும். இந்த விழாவில் பேச லார்டு லாயிட் அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவரால் வரமுடியாததின் காரணமாக அவர் தனக்குப் பதிலாக சர் லூயிஸ்டு ஆர்ட்டை நியமித்து அனுப்பியிருந்தார். சர்வ கலாசாலை மாணவர்களின் சார்பாக இந்திய விவசாயிகளின் ஜனநாயகத்துவ முறைகளுக்குப் பரிந்துபேச, வாலிப இந்திய மாணவரான மிஸ்டர் சிங் நியமிக்கப்பட்டிருந்தார். பிரிட்டிஷ் சோஷியலிஸ்ட் மாணவர்கள் தங்களுக்காகப் பேச ஏகாதிபத்தியத்தின் நேர் எதிர்ப்புவாதியான மிஸ்டர் பிராட்வாலே நிறுத்தியிருந்தார்கள். ஆனால் கடைசி நிமிஷத்தால் அவருடைய பெயரை மாற்றிவிட்டு ஷாபூர்ஜி சக்லத்வாலா பெயரை புகுத்திவிட்டார்கள்.

சர் லூயிஸ்டு ஆர்ட் ஒரு மணி நேரத்திற்கு அதிகமாக, ஜாக்கிரதையாக தான் எழுதி வைத்திருந்த பேச்சைப் படித்தார். இந்தியர்கள் பன் நெடுங்காலமாக ஒரு மனிதனின் குடைக்கீழ் இருக்க நம்பிக்கை கொண்டவர்களென்றும், இந்திய விவசாயிகள் ஒரு மகாராஜாவையோ அல்லது ஒரு நவாபையோ தான் விரும்புகிறார்களென்றும், அவர்கள் எந்த பார்லிமெண்ட் தலைவரையும் விரும்பவில்லையென்றும், எவ்வாறு இந்தியாவின் பல ஜாதி பாமரவகுப்பார்களை பெரிய மொகல்களும் பேஷ்வாக்களும் ஆண்டார்களென்றும், வழக்கமான அழகான சம்பிரதாயப் பேச்சில் சித்தரித்துக் காட்டினார். மிஸ்டர் சிங் பேசும் பொழுது இந்தியர்கள் 4000-கி.மு. காலத்திலேயே "குடியாட்சியை" இந்தியாவில் நிறுவி அதனை ஆண்மையோடு நடத்தியிருக்கின்றார்களென்றும், இன்றையதினம் இந்திய கிராமவாசிகள் அறியாமையில் மூழ்கியிருந்த போதிலும் "பஞ்சாயத்து" மூலமாகவே இந்தியாவில் சாந்தியை ஏற்படுத்தலாமென்றும் தக்க ஆதாரங்களோடு எடுத்துக் காட்டினார். சக்லத்வாலா பேசும் பொழுது, சர் லூயிஸ்டு ஆர்ட் பேசியது யோக்கியமானதானாலும், அவருடைய நோக்கம் முற்றிலும் தவறான எண்ணம் கொண்டதென்றும் அவருடைய பரிசீலனை முறைகளும் முடிவுகாணும் தன்மைகளும முழுதும் தப்பானதென்றும் எடுத்துகாட்டிப் பேசினார். பின்னால் சக்லத்வாலா பேசிக்கொண்டிருக்கும் பொழுது கன்சர்வேடிவ் கக்ஷியைச்சேர்ந்த பார்லிமெண்டு (பிரிஸ்டல் பிரிவு) அங்கத்தினரான லார்டு ஆப்ஸ்லே "இந்தியாவுக்குத் தேவையான ஜனநாயகத்துவத்தைப் பற்றியதில்" குறுக்கு கேள்வி கேட்டார். இதற்கு சக்லத்வாலா பதில் சொல்லும்பொழுது 1918-௵ 'க.கி' எலெக்ஷன் அனுபவத்தினாலாவது அல்லது 1924-௵ ஜினோவியப் போர்ஜரியாலாவது அல்லது 1931-௵ பின்மணி எலக்ஷனைக் கொண்டாவது, இன்றைய பார்லிமெண்டரி முறையானது உண்மையான ஜனநாயகத்துவம் கொண்டது என்று எவர் துணிந்த பேசுவாரானாலும் அந்த இங்கிலீஷ்காரரின் அறியாமைக்கும் அதும் பாவத்திற்கும் தான் பெரிதும் ஆச்சரியப்படுவதாகக் கூறினர்.

மார்க்ஸ் விழா.

7-தேதி புதன்கிழமை யன்று, கார்ல் மார்க்ஸ் இறந்த 51-வது வருஷ விழாவுக்காக லண்டனில் உள்ள புரட்சி தொழிலாளர்கள், மார்க்ஸ் ஞாபகார்த்த வாசகசாலையாரும், தொழிலாளர் பள்ளிக்கூடத்தாரும் குறிப்பிட்டிருந்தவாறு மார்க்ஸ் புதைக்கப்பட்ட ஹைகேட் சவக்காட்டில் கூடினார்கள். அன்று பேசியதில் முக்கியஸ்தர் ஆர். பேஜ் ஆர்னட்என்பவராவர். அவர் பேசும் பொழுது காரல் மார்க்சைப்பற்றியும் அவருடைய உயிர் தோழரான பிரடிரிக் என்ஜல்சைப்பற்றியும் சிலாகித்துப் பேசி, அவருடைய உபதேசங்கள் தடுக்கமுடியாத சம்பவங்களாக இன்று நிகழ்ந்துவருவதாகவும், தொழிலாள பாட்டாளி மக்கள் தங்களைத்தாங்களே நன்கு உணர்ந்து தங்களின் விடுதலைக்குப்போராட முனைந்து விட்டார்களென்றும், உலகத்தின் ஆறில் ஒரு பகுதியான ஐக்கிய சோவியத்தில் ஸ்டாலினின் தலைமையின் கீழ் "மார்க்கிசம்" வெற்றிபெற்றுவிட்டதாகவும், இங்கு (இங்கிலாந்தில்) மார்க்சின் சவத்திற்குமேல் நிற்கும் நாம் உழைப்பாளிகளான பாமரர்களின் சர்வாதிகாரத்தால் அண்மையில் மார்க்ஸிசத்தின் வெற்றியையும், தொழிலாள வகுப்பாரின்விடுதலையையும், குடியேற்ற நாடுகளில் வாழும் மக்களின் சுயேச்சையையும், சோஷியலிசத்தின் ஸ்தாபித்தத்தையும் காணுவோமென்று கூறி முடிவாக "எல்லா தேசங்களிலுமுள்ள பாடுபடும் மக்களே ஒன்று சேருங்கள்" என்று பேசி முடித்தார்.

குஜராத்தில் சோஷியலிசம்.

சமீபத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பம்பாய் சோஷியலிஸ்டு குரூப்பாரின் வேலைத்திட்ட அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு குஜராத்தி சோஷியலிஸ்ட் பிரிவு ஒன்று வாலிப காங்கிரஸ் ஊழியர்களைக்கொண்டு பரோடாவில் கடந்த மார்ச்சு மாதம் 17 தேதியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சோஷியலிஸ்ட் நோக்கங்கொண்ட குஜராத்தி வாலிபர்கள் அதில் கலந்து கொள்ளும்படி ஓர் அறிக்கையும் வெளியாகி இருக்கிறது.

காரைக்காலில் "சமதர்ம விலாஸ்" கட்டிடத் திறப்புவிழா.

காரைக்கால் இலேக்கார வீதியில் தோழர் பி. கோவிந்தசாமி அவர்களால் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத் திறப்பு விழாவானது 25-3-34 தேதியன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. அவ்வீதிகள் முழுதும் பிரஞ்சு அரசாங்கக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இவ்விழாவிற்கு உள்ளூர் முக்கியமான தோழர்கள் பலரும் விஜயம் செய்திருந்தார்கள்.

இவ்வூர் வக்கீல் தோழர் சிவசுப்பிரமணியம் அவர்கள் இக்கட்டிடத் திறப்புவிழாவின் அவசியத்தைப் பற்றி நன்கு விளக்கிக்கூறி இக்கட்டிடம் "தேச ஊழியர் சங்கத்தின்" உபயோகத்திற்கென்றே மிகப் பிரயாசையுடனும், பொதுநல நோக்கத்துடனும் கட்டப்பட்டு தோழர் பி. கோவிந்தசாமி அவர்களால் மகிழ்வுடன் உதவப்பட்டிருக்கின்றதென்றும் குறிப்பிட்டு விட்டு தோழர் எஸ். ராமநாதன் அவர்களைத் திறந்துவைக்குமாறு கேட்டுக்கொண்டார். தேச ஊழியர் சங்கத்தின் தலைவர் தோழர் சேஷாசலம் அவர்களும் முறையே எழுந்து திறப்புவிழாவாற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

அதன் பிறகு, சென்னை தோழர் எஸ். ராமநாதன் அவர்கள் "சுயமரியாதை இயக்க லட்சியம், சமதர்மத் திட்டத்தின் நோக்கம், பொதுவுடைமையினால்தான் தொழிலாளர்கள் சமவுரிமையும் பூரண இன்பமும் பெற முடியுமென்றும், மிக விளக்கமாகவும், விரிவாகவும் பேசி இக்கட்டிடத்தை பெருமகிழ்வுடன் திறந்து வைப்பதாகச் சொல்லி அமர்ந்தார். இக்கட்டிடத்திற்கு "சமதர்ம விலாஸ்" என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

பின்னர் பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலம் அவர்களும் திறப்பு விழாவை யொட்டி பிரசங்கம் செய்தார். தோழர் சொ. சிதம்பரம் அவர்கள் நன்றி கூறினர். யாவருக்கும் சந்தனம் தாம்பூலம் வழங்கப்பெற்று விழா இனிது முடிந்தது.

காரைக்கால் தேச ஊழியர் சங்கம் பொதுக்கூட்டம்.

இச்சங்கத்தின் ஆதரவில் 25-3-34 தேதியன்று மாலை 5-மணிக்கு இவ்வூர் நெப்போலியன் பேட்மிண்டன் திடலில் தோழர் சொ. சிதம்பரம் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. உள்ளூர்-வெளியூர்களிலுமிருந்து பெருந்திரளான மக்கள் விஜயஞ் செய்திருந்தார்கள். சில தோழர்கள் சமதர்மக் கீதங்கள் பாடினார்கள்.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் சமத்துவம், கல்வி, தீண்டாமை, மூடநம்பிக்கை, மதம், கடவுள், தேசீயம், ஒழுக்கம், வீண் செலவு, சடங்குகள், மோக்ஷ-நரகம் என்பவைகளைப்பற்றி மிக விளக்கமாகவும் விரிவாகவும் பேசி விட்டு தேச ஊழிய சங்கத்தார் இக்கொள்கைகள் இந்நாடு முழுவதும் பரவத்தக்க பிரசாரமும் முயற்சியும் செய்யவேண்டுமென்றும், பொது ஜனங்கள் சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்ந்து உதவிபுரிந்தும் ஒத்துழைத்தும் வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். தோழர் எஸ். ராமநாதன் தனது உடல் அசௌகரியத்தால் மாலை பொதுக்கூட்டத்தில் பேச முடியவில்லை.

தலைவர் முடிவுரைக்குப் பிறகு நன்றி கூறலுடன் இரவு 7-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது. இக்கூட்டத்திற்குதோழர்களான பி. கோவிந்தசாமி, எம்.வி.பொன்னையா, எம்.வி.ஆறுமுகம், சொ.சிதம்பரம் ஆகியவர்களின் முயற்சியும், ஊக்கமும், ஒத்துழைப்பும் பெரிதும் பாராட்டக்கூடியதும் குறிப்பிடத்தக்கதுமாகும். இனி இவ்வூர் "தேச ஊழியர் சங்கம்" "சமதர்ம விலாஸ்" கட்டிடத்திலேயே திகழும். இது போன்ற பொதுக்கூட்டங்கள் இனி அடிக்கடி இவ்வூரில் நடைபெற்றுவரும்.

சுயமரியாதை சங்கம், கோலாலம்பூர்.

இச்சங்கத்தின் இரண்டாவதாண்டு முதலாவது பொதுக்கூட்டம் நகர மண்டபத்தில் 11-3-34ந்தேதி ஞாயிற்றுக்கிழமை 3-30 மணிக்கென்று குறிப்பிட்டிருந்தும் அகோர மழையின் காரணமாக 2-30 மணிக்குத் தோழர் எஸ். ஜெக்கோப்வலியோன் அம்மாள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முகவுரையாக, "ஆதி மக்களின் காட்டுச் சஞ்சாரத்தையும், இடி மின்னல்களுக்குப் பயந்து சூரிய சந்திரர்களைக் கண்டு வணங்கிய விதத்தையும், ஒரே இடத்திற் தங்கி வாழ்ந்ததையும், பாகுபாடுகளும், பொறாமையும் உண்டாகி நாளாவட்டத்தில் ஜாதிகளும், அடிமைகளும் உண்டாயின என்று விளக்கமாகவும், மக்களின் மனதில் பதியுமாறும் பேசினார்கள்.

பிறகு, "தமிழ் நாடு" ஆசிரியர் தோழர் ஆர் வெங்கிட்டராயலு அவர்கள் "வாலிபர் கடமை" என்பது பற்றி நீண்டதோர் சொற்பெருக்காற்றினார்கள். அடுத்தபடியாக தோழர்களான சந்திர ராஜன் அவர்கள் "மக்கள் முன்னேற்றமென்றும்" ஜி. குமாரசாமி அவர்கள் "நமது தற்கால நிலைமை" என்பதைப்பற்றியும பேசி முடித்தார்கள்.

தலைமை ஆசிரியர் பதவி ஆதிதிராவிடருக்கு வேண்டும்.

சென்னிமலை போர்டு எலிமெண்டெரி பாடசாலையில் சென்ற பதின்மூன்று வருஷங்களாக தலைமை ஆசிரியராக இருந்த, தோழர் கே. எஸ். முத்துசாமி அய்யரவர்கள் தமது உத்தியோக சர்விஸ் முடிந்து 27-3-34-ல் விலகியிருக்கிறார்.

மேற்படி தலைமை ஆசிரியர் ஸ்தானத்திற்கு, மேற்படி பாடசாலையில் ஹெட்மாஸ்டருக்கு அடுத்தபடியாக (ஹெட்மாஸ்டர் இன் சார்ஜ்) இருந்துவரும் பி. மனுவேல் (ஆதிதிராவிடர்) தான்போர்டில் 12-13 வருஷங்களாக நன்நடக்கையுடனும் வேலை செய்துவந்திருப்பதால்; தனது கிரேடிலுள்ள ஜூனியர்களை நியமிக்காமல், தன்னையே ஷை ஸ்தானத்துக்கு நியமிக்க வேணுமென்றும்; தன்னைவிட உயர்கிரேடுள்ளவர்களை நியமித்தால் தனக்கு ஆக்ஷேபனை இல்லையென்றும்; தான தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவனாதலால், தனது விண்ணப்பத்தையே முதலில் கவனிக்கவேண்டுமென்றும், ஈ. தா போ பிரசிடெண்டு அவர்களுக்கு, ஈரோடு ரேஞ்ச் பாடசாலைகளின்டெபுட்டி இன்ஸ்பெக்டரவர்கள் மூலமாக விண்ணப்பித்துள்ளார். ஈ. தா. போ. பிரசிடெண்டு அவர்கள் ஈரோடு தாலூகா ஹரிஜனக் கமிட்டி அங்கத்தினராயிருக்கிறபடியால், ஹரிஜன முன்னேற்றங் கருதி பி. மனுவேல் அவர்களுக்கு ஷை பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்தானத்துக்கு உத்திரவு போட்டுக்கொடுப்பாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதிதிராவிடர் ஆசிரியராகஇருந்துவருவதால், சென்னிமலை நகர வாசிகளுக்கு சிறிதும் ஆக்ஷேபனை கிடையாது.

(நமது சொந்த நிருபர்)

பெண்ணாடத்தில் சமதர்மப்பிரசாரம்.

பெண்ணாடத்தில் 4-4-34ந்தேதியன்று புதன் கிழமை மாலை 5மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் "சமதர்மம்" என்பது பற்றி பேசுவார்.

(ஒரு நிருபர்)

தலைவி முடிவுரைக்குப் பிறகு காரியதரி தோழர் எஸ். எம். ராமய்யா அவர்களால் வந்தனோபசாரம் கூறக் கூட்டம் 6-30 மணிக்கு இனிது முடிந்தது.

தேவை.

தக்க டிபாசிட் கட்டக்கூடிய பொறுப்புள்ள ஏஜண்டு
உரிகம்
காரைக்குடி
ஆகிய இரண்டிடங்களுக்கும் தேவை. விபரத்திற்கு எழுதவும்.

மானேஜர் "புரட்சி"

[9ம் பக்கத் தொடர்ச்சி]

தொழிந்து சிதைந்ததே கிடையாது. "ஜஸ்டிஸ் கட்சி" என்றால் காதைப்பொத்திக் கொள்ளுபவர் எத்தனைபேர், கண்ணீர் விடுபவரின் கணக்கென்ன, வதைப்படுவர் வகைகள் என்ன, வைது திட்டிவசைபாடுபவர் எண்ணிக்கை என்ன? அக்கட்சியின் பேரைச்சொல்லி அடிபடாமல் ஒருவன் திரும்பினால் அவன் அதிர்ஷ்டசாலியேதான என்று சொல்லும் நிலைமையில் இருக்கின்றோம். ஒருகாலத்தில் கட்சியின் பெயரைக்கேட்டமாத்திரம், கர்ஜிக்கும் பார்ப்பனச் சிங்கங்களும் சற்று அச்சங்கொண்டு அடங்கும். இன்றோ, கட்டுண்டுகிடக்கும் இச்சிங்கத்தின் உடலின்மேல், கையிற்கும் போதாத சுண்டெலிகள் களிகொண்டு ஏறி விளையாடுகின்றன. திருச்சி என்றாலே திரும்பியும் பாராமல் ஓடக்கூடிய தோழர் சத்தியமூர்த்தி, அதே திருச்சியில் நமது கட்சியைக் குழிதோண்டிப்புதைக்க யோசனைகூற முடிந்திருக்குமேல் நமது நிலைமையை என்னென்று கூறுவது?

(தொடரும்)

புதிய வெளியீடுகள்.

சமயமும் விஞ்ஞான சாஸ்திரமும்.

இந்நூல்
அறிஞர் தோழர் கே. பிரமச்சாரி
எம். ஏ. எல். டி.
அவர்களால் எழுதப்பட்டது.
விலை அணா 3.

பிரகிருதி வாதம்.

இந்நூல் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களால் கடவுள். மதம், ஆத்மா, நான், மோட்ச நரகம், பாவபுண்யம், ஒழுக்கம், நாஸ்திகம் முதலியவற்றைப்பற்ற எழுதப்பட்ட அரிய நூல்.

விலை அணா 3.

பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட்,
ஈரோடு.

சென்னை சலவைத்தொழிலாளர்களின் மாபெருங்கூட்டம்.

:O:

சென்னை சலவைத் தொழிலாளர்களின் மாபெருங்கூட்டம் ஒன்று 27-3-34 ந்தேதி செவ்வாய்க் கிழமை மாலை 5-30மணிக்கு சென்னை தோழர் எஸ். குஞ்சிதம் அம்மாள் பி. ஏ., எல். டி., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்னை நகரத்தின் 23. டிவிஷன்களிலுமிருந்து சலவைத்தொழிலாளர்கள் சுமார் 1000 பேருக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள். தலைவர் முன்னுரை கூறிய பிறகு பட்டுக்கோட்டை தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் இக்கூட்டத்தின் நோக்கத்தைக் குறித்து மிக நன்றாக விளக்கிப் பேசினார். அதன் பிறகு பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் "தொழிலாளர்கள் நிலை" என்பது பற்றிப் பிரசங்கம் செய்தார். கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:—

(1) சலவைத தொழிலாளர்களையும், அவர்களது பெண்களையும் குறித்து இழிவாகவும், கேவலமாகவும் பாடப்பட்டுள்ள கிராம்போன் பிளேட்டுகளை பகிஷ்கரிப்பதுடன், மேலும் நாடக மேடையில் அப்பாட்டுகளை பாடிவருவதையும் வன்மையாய்க்கண்டிக்கிறது.

(2) அரசாங்கத்தார் மேற்படி பிளேட்டுகளைப் பறிமுதல் செய்தும், நாடக மேடையில் சலவைத் தொழிலாளர்களை இழிவு படுத்தும் பாட்டுகளைப்பாடாமல் தடுக்கும் படி ஏற்பாடு செய்யுமாறும் கேட்டுக் கொள்ளுகிறது

(3) சென்னை நகரில் சலவைத தொழிலாளர் சங்கம் ஒன்று ஏறபடு அதை ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறது.

(4) சென்னை நகரில் சலவைத் தொழிலாளர் மகாநாட்டை விரைவில் கூட்டுவதற்குத தக்க முயற்சிகள் செய்ய வேண்டுமென்று இக்கூட்டம் ஏகமனதாகத் தீர்மானிக்கிறது.

இத்தீர்மானங்களை தோழர் கே. வி. அழகர்சாமி நன்கு விளக்கிக் கூறிய பின்னர் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. பிறகு தலைவர் முடிவுரை கூறினார். தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் நன்றி கூறி மலர் மாலை சூட்டினார். சந்தனம், பன்னீர், தாம்பூலம் வழங்கப்பட்டது. இக் கூட்டத்தில் ஒரு போட்டோவும் எடுக்கப்பட்டது. இத்துடன் பொதுக்கூட்டம் கலைவுற்றது. மீண்டும் சமூக முன்னேற்ற சங்கம் நிறுவுதல் குறித்து ஆலோசனைக் கூட்டம் ஆரம்பமாகி இரவு 11-30-மணிக்கு முடிவுற்றது.

நாட்டாம்பள்ளி.

23-3-34உ நாட்டாம்பள்ளியில் சுயமரியாதைச சங்க ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் மாலை 5மணிக்கு நடந்தது. ஜோலார்பேட்டை தோழர் வி. பார்த்தசாரதி தலைமை வகித்தார். சமதர்மக கீதங்கள் பாடப்பட்ட பின் "தொழிலாளர் நிலை" என்பது பற்றி தோழர் எஸ். வி. லிங்கம் பேசினார் பின்னர் தோழர் ஜீவானந்தம் அவர்கள் 'சமதர்மம்' என்பது பற்றி உபன்னியாசம் செய்தார். அக்கிராசனர்முடிவுரையுடன் இரவு 8-30மணிக்குக் கூட்டம் முடிந்தது. திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், ஜோலார்பேட்டை இவ்விடங்களிலிருந்து சுமார் 30 தோழர்கள் இதற்கு விஜயமாகி இருந்தார்கள். இவர்கள் யாவருக்கும் இரவு நாட்டாம்பள்ளி தோழர்களால் ஓர் சமபந்தி போஜனம் நடந்தது.

(ஒரு நிருபர்)

வில்லிவாக்கத்தில் சமதர்மப் பிரசாரம்

தோழர்கள்
கே வி அழகிரிசாமி,
டி. என். ராமு விஜயம்.

வில்லிவாக்கம் கொன்னூர் மேலையம்பதி சமதர்மச்சங்கத்தின் ஆதரவில் 25-3-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பட்டுக்கோட்டை கே.வி அழகர்சாமி, திருவாரூர் டி. என். ராமு, சி. தங்கராஜ், எஸ். ரங்கனாதன், ஆர். டி. அப்பாக்கண்ணு எம். முனுசாமி, வி. குப்புசாமி, டி. ஐ தியாகராஜ் சி. சக்கரபாணி, கே. எல. செல்லப்பா, டி. முனுசாமி முதலிய தோழர்களும் மற்றும் அகரம் பெரம்பூர், வியாசர்பாடி, சென்னை முதலிய பல இடங்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் பெரும்பாலான ஜனங்கள் வந்திருந்தனர். கூட்டத்திற்கு தோழர் டி. என். ராமு அவர்கள் தலைமை வகித்தார். தோழர் சி. தங்கராஜ் 'சமதர்மம்' என்பது பற்றியும், தோழர் தங்கரூபன் நமது நிலைமையும், கடமையும், என்பது பற்றியும், தோழர் ஆர். டி. அய்யாக்கண்ணு 'சுயமரியாதை இயக்கம் கூறுவதென்ன? என்பது பற்றியும் பேசினார்கள். பின் தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கள் சமதர்மம என்பதைப் பற்றி சுமார் 1மணிநேரம் விரிவாகவும், மிக விளக்கமாகவும் பேசி முடித்தார். தலைவர் முடிவுரைககுப்பின் கூட்டம் முடிவு பெற்றது. இதனால் வாலிபர்களிடையே மிகக வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என ஷை சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

சுயமரியாதைச்சங்கம் நாகபட்டணம். சங்கப் புதுவருஷ தேர்தல்.

தோழர்களே!

நாளது 2-4-34உ திங்கட்கிழமை இரவு 8மணிக்குச் சங்க அங்கத்தினர்களின் கூட்டம் சங்கக் கட்டிடத்தில் நடைபெறும். அதுசமயம் சங்கத்தின் புதிய வருஷத்திற்காக நிர்வாகஸ்தர்களின் தேர்தல் நடைபெறும் அதற்கு அனைவரும் தவறாது வரவேண்டிக்கொள்ளப்படுகிறது ஷை சங்கக்காரியதரிசி எ. கோவிந்தன் அறிவிக்கிறார்.

சென்னை மைலாப்பூர் சுயமரியாதைச் சங்கம். பொதுக்கூட்டம்.

இச் சங்கத்தின் ஆதரவில் 2-4-34 திஙகட்கிழமை மாலை 5மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் தோழர்கள் எஸ் குருசாமி பி. ஏ., எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல் டி., பாரதிதாஸன், அ. பொன்னம்பலனார் ஆகியவர்கள "சமூக சீர்திருத்தம்" "சுயமரியாதை இயக்கம்" "சமதர்மம்" "ஏழைகள் துயரம்" என்பது பற்றி பிரசங்கம் செய்வார்கள். (ஒரு நிருபர்)

சுயமரியாதைத் தோழர்கள் மகாபலிபுரம் பிராயாணம்.

சுயமரியாதை தோழர்களான:— எல். இராமசாமி, பண்டிதை. ரங்கநாயகி, (மைலாப்பூர்) சீனிவெங்கடசாமி, ஜி. பார்த்தசாரதி, (புதுவை) பாரதிதாஸன், எஸ் குருசாமி, குஞ்சிதம். டி. சுப்பிரமணியம் —காந்தம், சகுந்தலை, பிச்சு—மிராண்டா, எம். கே. அழகப்பா ஜெஸ்லி —கமலம், தங்கம்மாள், அ பொன்னம்பலனார் ஆகியவர்கள் 31-3-34 சனிக்கிழமை மாலை 3மணிக்கு சென்னையிலிருந்து போட்டில் மகபலிபுரம் சென்று ஏப்ரல் மாதம் 1ந்தேதி ஞாயிறுமாலை 5மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு 2-4-34ந்தேதி காலை சென்னைக்கு திரும்பி விடுவார்கள்,

தோழர் அ. பொன்னம்பலனார் சுற்றுப்பிரயாணம்.

தோழர் அ. பொன்னம்பலனாரவர்கள் காரைக்காலிலிருந்து 26-3-34 காலை சென்னைக்கு வந்து சேர்ந்தார். 31-3-34-ல் மகாபலிபுரம் சென்று ஏப்ரல் 2ந்தேதி சென்னை திரும்புவார். 3-4-34ந்தேதி இரவு சென்னையிலிருந்து புறப்பட்டு 4-4-34ல் பெண்ணாடம் தங்கி, 5-4-34ல்திருச்சி மார்க்கமாக பயணமாகி 6-4-34 நாகர் கோவில, வடசேரிககுச் செல்லக் கூடும். அங்கிருந்து புறப்பட்டு காரைக்குடி மார்க்கமாக நேரே ஈரோடு வந்து சேர்வார். (ஒரு நிருபர்)

மிஸ். நீலாவதி.

திருச்சி தோழர் எஸ். நீலாவதி அவர்கள் தமது உடல் நிலைமை உத்தேசித்து டாக்டர்கள் அபிப்பிராயப் படி இன்னும் நான்குமாதங்களுக்குப் பொதுக் கூட்டங்களில் பேசுவதற்கு இயலாதெனத்தெரிவிக்கிறார்கள்.

தோழர் கே. வி. அழகிரிசாமி அவர்கட்கு. சிற்றுண்டி விருந்து.

சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றத்தின் சார்பாக ஷை மன்றத்தின் உபதலைவர் தோழர் சி தங்கராஜ் அவர்கள் 26-3-34ந்தேதி திங்கட்கிழமை மாலை 4மணிக்கு 221 தங்கசாலை. வீதியில் சிற்றுண்டி விருந்து நடத்தினார். சுமார் 50 தோழர்களுக்கு மேல் கலந்து கொண்டனர். அவர்களில் தோழர்கள் சி.டி. நாயகம், எல். ராமசாமி, அ பொன்னம்பலம், கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல். முதலியோர் குறிப்பிடத் தக்கவர்களாவார்கள்

மீயூட்சுவல் கிளப் கிராண்ட் நேஷனல் குதிரைப்பந்தய லாட்டரி.

இந்தியாவில்
வெற்றி பெற்றவர்கள்.

23-3-34ல் நடைபெற்ற மீயூட்சுவல்கிளப் இன்கார்ப்பரேட்டட் "கிராண்ட் நேஷனல்" குதிரைப்பந்தய லாட்டரியில் 1-வது 2-வது 3-வது பிரைஸ் பெற்ற விபரமும், இந்தியாவிற்குக் கிடைத்த பிரைஸ் விபரமும் கீழ்கண்டவாறு தலைமை ஆபீசிலிருந்து தந்தி கிடைத்திருக்கிறதென மீயூட்சுவல்கிளப் ஏஜெண்ட், திருச்சங்கோடு எஸ் கே. வரதராஜுலு அறிவிக்கிறார்:—

1-வது பிரைஸ் தங்கணிக்கா 2-வது பிரைஸ் ஜமைக்கா 3-வது பிரைஸ் Q.226050 நாகப்பூர் மத்திய இந்தியா.

பிரைஸ் 1-க்கு 51 பவுன் வீதம் 7ஓடின குதிரைப் பெயர் பிரைஸ்:- Q.61281 ஆமதாபாதஇந்தியா எம். 49087 ஜம்ரா பஞ்சாப், இந்தியா, சி. 46682 தாம்னி இந்தியா, ஓய் 32976 ஆமதாபாத் இந்தியா W. 71652 காரச்சி இந்தியா, ஆர்.79579 கார்க்பூர் இந்தியா, 10957 செய்கி பர்மா இந்தியா

பிரைஸ் 1-க்கு 160 பவுன் வீதம் 2 ஓடாத குதிரை பெயர் பிரைஸ்:- 550075 டான்டிகல், இந்தியா, ச 47746, மிட்னபூர் இந்தியா இதோடு அனேக ரொக்கபரிசுகளும் இந்தியாவிற்குக் கிடைத்திருக்கிறது.

சர். கே. வி. ரெட்டி

சென்னை நிர்வாக சபை மெம்பர்.

மன்னர் அங்கீகாரம்.

திவான் பகதூர் சர். எம். கிருஷ்ண நாயருக்கு அடுத்தபடியாக, சென்னை சர்க்கார் நிர்வாகக்கவுன்ஸில் மெம்பராக சர். கூர்மா வெங்கடரெட்டி நாயுடுவை நியமித்துள்ளதை மன்னர் அங்கீகரித்து விட்டதாக சென்னை சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

வீரநல்லூர் சீர்திருத்தத் திருமணம்.

25-3-34 காலை 9மணிக்கு இவ்வூர் தோழர் ஆறுமுக முதலியார் அவர்கள் குமாரர் தோழர் முத்தையாவுக்கும், ஆவுடையப்ப முதலியார் அவர்கள் குமாரத்தி தோழர் முத்தம்மாளுக்கும் ஷை ஆறுமுக முதலியார் இல்லத்தில் சீர்திருத்தத்திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. திருமணத்திற்கு ஆண்களும் பெண்களும் சுமார் 500பேர்கூடி இருந்தார்கள். பள்ளி மாணவிகள் கோலாட்டு, கும்மி, சங்கீதம்பாடி முடிந்ததும் மணமகனும், மணமகளும் அவர்கள் ஆசனத்தில் அமர்ந்ததும் தோழர் ஆறுமுக முதலியார் எழுந்து தான் கொஞ்சநாளாக சீர்திருத்தங்களில் பிரியம்கொண்டிருந்ததாகவும் அதை நடைமுறையில் காண்பிக்க சந்தர்ப்பம் வாய்த்ததைப் பற்றி மகிழ்ச்சியடைவதாயும் இத் திருமணத்தை தலைமை வகித்துநடத்தித்தர தோழர் பழனியாண்டி முதலியார் அவர்களை கேட்டுக்கொளவதாகவும் சொல்லி முடித்தார். அதன் படி தோழர் பழனியாண்டி முதலியார் தலைமை வகித்து பழமையான மூடச்சடங்குகளைப்பற்றியும், புரோகிதத்தைப்பற்றியும், சிகனம் என்பதைப் பற்றியும், வெகு விரிவாக எடுத்துச் சொல்லி மணமகனைக் கொண்டு திருமங்கல்யம் பூட்டச் சொன்னார்.

அதன் பின் அம்பாசமுத்திரம் வக்கில் தோழர்கள் சுப்பிரமணிய முதலியார் பி. ஏ. பி. எல்., அவர்களும், திருநெல்வேலி வழக்கறிஞர் சங்கர சுப்பிரமணிய முதலியார் பி. ஏ. பி. எல். அவர்களும் உள்ளூர் சுப்பிரமணியஞ் செட்டியார் அவாகளும் சீர்திருத்தத் திருமணம் என்பதைப்பற்றி விரிவுரை நிகழ்திஞர்கள். மணமக்கள் மாலை மாற்றிக் கொண்ட பின் சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு அன்று இரவு 8மணிக்கு உள்ளூர் தோழர் எ முத்து கிருஷ்ணன் அவர்களால் பக்க வாத்தியஙகளுடன் சுயமரியாதைச் சமதர்ம பாட்டுக்கச்சேரி நடைபெற்றது.

சேலம் ஜில்லா சங்க அமைப்புக் கூட்டம்.

தோழர் ஈ. வே. கிருஷ்ணசாமி தலைமை வகிப்பார்.

8-4-34ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு சேலம் செவ்வாய் பேட்டை சுயமரியாதைப் பார்க்கில் சேலம் ஜில்லா சுயமரியாதைச் சங்க அமைப்புக் கூட்டம் நடைபெறும். ஷைகூட்டத்திற்கு 'புரட்சி' பத்திராதிபர் தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமை வகிப்பார்கள். தோழர்களான அ. ராகவன், ப. ஜீவானந்தம், பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி ஆகியவர்கள் விஜயம் செய்வார்கள்.

ஷை கூட்டத்திற்கு நமது ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு சங்கமும் இரு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பவேண்டுகின்றோம்.

ஷை கூட்டத்தில் சேலம் ஜில்லாவைப்பொருத்தவரை இயக்கவளர்ச்சிக்கான வேலைகளைப்பற்றி யோசித்து முடிவு செய்யப்படும். சேலம் ஜில்லா சு. ம. மகாநாட்டைப்பற்றியும், தோழர் எஸ். ராமநாதன் அறிக்கையைப்பற்றியும் ஆலோசிக்கப்படும். அப்பொழுது ஜில்லா சபையின் நிர்வாகஸ்தர்கள் தேருதலும் நடைபெறும். இயக்கவளர்ச்சியில் ஆர்வமுள்ள தோழர்கள் யாவரும் தவராமல் விஜயம் செய்யவேண்டுமாய் கோறும்

ஆர்கனைசர்கள்:—

R. நடேசன்,
A. M. பாலசாமி,

தோழர் சொக்க லிங்கம். மறைவு.

திருப்பத்தூர் தென்மாபட்டு வாசியும் இரங்கூனில் பிரபல தங்கம் வெள்ளி நகை வியாபாரியும், சுயமரியாதை வீரரும் இரங்கூன் சுயமரியாதைச் சங்க ஸ்தாபகரும் சுமார் 25 வயதே நிரைந்த வாலிபரும் தளராத ஊக்கம் நிறைந்த தோழர் சொக்கலிங்கம் அவர்கள் நிமோனியா ஜுரத்தினால், மார்ச்சுமீ 19உ காலை 8மணிக்கு தமது குடும்பஸ்தார்களையும், பால்ய மனைவியையும் ஒரு மாதம் நிரம்பப் பெறாத ஆண் குழுவியையும் விட்டுப் பிரிந்தார் தோழரவர்கள் மறைவு சமீபத்தில் ஆறுதல் அளிப்பதாக இல்லை என்பதில் ஐயமில்லை.

அவரைப் பிரிந்த குடும்பத்தார்களுக்கு நமது அனுதாபத்தைத்தெரிவித்துக்கொள்வதோடு ஆறுதல் பெறுமாறு ரங்கூன் சு-ம- சங்கத்தின் சார்பாக காரியதரிசி தெரிவித்துக்கொள்ளுகிறார்.

வேண்டுகோள்.

சென்னையில் தற்போது ஒரு மத்திய நிர்வாகசபை அவசியம் வேண்டியிருப்பதால் ஒவ்வொரு சங்கத்திலிருந்தும் இரு அங்கத்தினர்களை பிரதிநிதிகளாகத்தேர்ந்தெடுத்து ஷை விலாசத்தாருக்குத்தெரிவிக்க கேட்டுக்கொள்கிறேன். மத்திய நிர்வாக சபையின் அவசியம் என்னவென்றால் பொதுவான காரியங்களை உதாரணமாக மேதினக்கொண்டாட்டம் போன்ற தினங்களை சிறப்பாக எல்லா சங்கத்தாரும் சேர்ந்து நடத்துவது போன்றதாகும்.

ஷை கமிட்டியின் திட்டங்களும், நிர்வாக முறைகளும் தலைவர், உபதலைவர், காரியதரிசி, பொக்கிஷதார் போன்ற நியமனங்களும்பிரதிநிதிகள் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படும். பிரதிநிதிகள் கூட்டம் கூடிய சீக்கிரம் நடைபெறும் என சென்னை சுயமரியாதை இளைஞா மன்றக்காரியதரிசி தோழர் எஸ் ரங்கநாதன் எழுதுகிறார்.

(விலாசம் காரியதரிசி, சுயமரியாதை இளைஞர்மன்றம், 65, 66 நாட்டு பிள்ளையார்கோவில் தெரு, சென்னை)

சென்னை சுயமரியாதைச்சங்கம்.

22-3-34-ந்தேதி மாலை 6மணிக்கு பிரம்பூர் பாரெக்ஸ்ரோட்குருசடிஎதிர் மைதானத்தில் தோழர் எஸ். ரங்கநாதம் அவர்கள் தலைமையில் தொழிலாளர் துயரம் என்பதைப்பற்றி தோழர் புதுப்பேட்டை சாமிநாதன், தோழர் ஜார்ஜ் டவுன் எம். எஸ். முத்து, சி. ஆர். அமிர்தவாசகம் முதலியவர்கள் பேசியபின் சுமார் 8-30மணிக்கு வந்தனத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

சென்னை.

சிந்தாதரிப்பேட்டை சுயமரியாதை சங்க மாதாந்திரக் கூட்டம் கடந்த 25-3-34 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு ஆரம்பித்து இரவு 9மணிக்கு முடிவடைந்தது.

[7-ம் பக்கத்தொடர்ச்சி]

ன் ஏன் என்றால் அறுக்கும் பொழுது பால்கள் கையில் பட்டாலும் பக்கத்திலிருக்கும் நல்ல எண்ணையைக் கொண்டு போக்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையிருப்பதால் தான். அந்த நல்ல எண்ணையினால் கையில் படும் பாலைப்போக்கிக் கொள்ள முடியாது என்ற நம்பிக்கை அவனிடத்திலிருக்குமானால் வெகு ஜாக்கிரதையாயும பழத்தின் பால் கையில் படாவண்ணமும் வெகு கண்ணும் கருத்துமாகத்தான் அப்பழத்தை அறுத்து முடிக்கும்படி நேரிடும். அது போல உங்களது சகோதரர்கள் அடி, உதை, உபாதை என்றும் அடிமை, கொடுமை, சிறுமை, வறுமை என்ற சொற்களாலும் கதறுவது 'பழர்பழர்' என்று தொனிக்கின்ற சப்தத்தை சிறிதும் கவனியாது, கடவுள் போச்சே! ஜாதி போச்சே!! மதம் போச்சே!!! என்று கொட்டாவி விட்டு வரும் கதறோலிக்கர்களே! உங்களுக்கு பிறர் சிநேகமென்பது சிறிதும் கிடையாதா? அல்லதுகடவுளும், மதமும் ஜாதியும் போனாலும் போகட்டும் ஆனால் அயலார்கள் துன்ப முறா நாங்கள் சகியோம் என்று மக்களுக்காக பாடுபட முன் வந்தால் தேவனாகிய "சேசு" கோபித்துக் கொள்வாரோ?

ஒரு மனிதன், தன்னைப்போல் மற்றவனையும் நேசியாது ஜன சமூகத்திற்கே தீங்கு விளைப்பானென்றால் அன்னவனை, வெரும் முட்டாளென்று மாத்திரம் சொல்ல பொருத்தமிராது என்பிரிய நண்பர்களே! "தன்னைத்தான் தான் சிநேகிக்குமாப்போல் மற்றெலலோரையும் சிநேகிக்கிறது" என்றதுபோல் மனிதனை பல்வேறு பிரிவினைகளைக் கொண்டு பிரிக்காமல் மனிதன் மனிதனாகவே பாவிக்கப்பட வேண்டும் என்ற பரந்த நோக்கங்கொண்டு ஜன சமூக முன்னேற்றத்திற்காக பாடுபட முன் வாருங்கள். அதற்கு முரணாக நிற்கும் எந்த அடையாளமோ, மதமோ, ஜாதியோ, கடவுளோ, ஆஸ்திக்கமோ அவைகளை எல்லாம் அழித்து புதைக்கவேண்டியது தான் மனிதனுடைய கடமை. அது தான் உண்மை அதுதான் நன்மை, அதுதான் மனிதத்தன்மை.

உலகத் தொழிலாளர் தினமாகிய

மே தினத்தைக் கொண்டாடுங்கள்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

பான்மையை மிருசுதார்கள் பலபடுத்திய ஒரு பாவமே அக்கூட்டத்தின் அடிமைச்சங்கிலி என்றும் அறுபடாமலிருந்து கொண்டிருக்கிறது. இத்தப்பிப்பொல்லாத ஜாதிப்பாகுபாட்டால் இன்னும் சில அபாயங்கள் அவர்களுக்கிருந்து கொண்டிருக்கிறது. இக்கூட்டத்தினரை என்றும் மீளாப்படுகுழியிலாழ்த்தும்படியான புரோகிதக் கோட்பாடுகளும் தாண்டவமாடுகின்றன. இவர்களுக்குள்ளேயே வள்ளுவர் என்ற கூட்டத்தார் மிக உயர்ந்தவர்களாகவும், குருக்கள்களாகவும் கருதிக்கொண்டு ஓர் கூட்டம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இக்கூட்டத்தார் ஜோசியம், ஆரோடம், கைரேகை, புரோகிதம், முதலான தொழில்களையே பெரும்பாலும் கொண்டவர்கள். வள்ளுவக்கூட்டத்தார். குறளின் ஆசிரியரான திருவள்ளுவர்மரபின் வழிவந்தோராக சொல்லிக் கொள்கிறார்கள் என்றாலும், உயர் ஜாதியினர்கள் இக்கூட்டத்தாரையும் தீண்டாதாராகவே கருதிக் கொண்டிருக்கிறார்கள். தங்களை உயர் ஜாதியார் சர்வதுறையிலும் கேவலப்படுத்துகிறார்களே என்ற யாதொரு வெட்கமில்லாமல் பஞ்சம சகோதரர்களை இந்த ஜாதிமான்கள் (வள்ளுவர்கள்) எல்லாத்துறையிலும் விலக்கிக்கொண்டிருப்பது வெகுவிந்தையானது. பரிதாபத்துக்குரிய பஞ்சமசகோதரர்களுக்கு இவ்வள்ளுவக் கூட்டத்தார் மோக்ஷகைகாட்டி மரங்களாம்! எப்படி உயர் ஜாதி இந்துக்களுக்கு பிராமணோத்தமர்கள் மோக்ஷ கைகாட்டிகளோ அதே போல் வள்ளுவர்கள் பறை பதினெட்டு ஜாதிக்கும் மோக்ஷ கைகாட்டிகளாகும். பறை பதினெட்டு ஜாதியின் நன்மை தின்மைகளுக்கு பிராய சித்த பிம்பங்கள் வள்ளுவர்கள். இந்த வள்ளுவக்கூட்டத்தாரை உயர்வாகக் கருதிக்கொண்டிருக்கும் அடிமை ஜாதியார்கள் தங்களுக்குக் கிடைக்கும் மிக குறைந்த வருவாயிலும் ஒரு பகுதியை வருஷ வர்த்தனை என்ற பெயரால் பொதுவாகவும், அவ்வப்போது ஏற்படும் அதாவது புரோகித கற்பனையால் ஏற்பட்டிருக்கும் சில்லரை சடங்குகளின் பெயரால் சில்லரையாகவும் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்களுடைய வருமானத்தைப் பற்றியும், இவர்களின் வாழ்வின் நாகரீகத்தைப்பற்றியும் முன் அத்தியாயங்களில் சொல்லி இருக்கிறேன். கொடுமையும் அநாகரீகமுமே உருவாயமைந்த இக் கூட்டத்துக்கும் மோக்ஷபித்து பிடித்திருக்கிறது ஒரு பக்கமிருக்கட்டும். அப்பித்து பலப்பட்டிருப்பதால் சில காலத்துக்கு கிடைக்கும் கொஞ்ச வருமானத்தையும் கொடுத்து விட்டு பட்டினி கிடக்கும் காக்ஷி மிக பரிதாபகரமானதாய் இருக்கிறது. ஆகவே பஞ்சமர்களுக்குள்ளும் ஜாதிப்பிரிவினையை அனுஷ்டிப்பது மிருசுதார்கள் குதிரை ஏறவும், வள்ளுவ புரோகிதர்கள் இவர்களை மென்மேலும் பைத்தியக் காரர்களாக்கவும் காட்டுமிராண்டிகளாக்கவே இருக்கவும் ஓர் பெரிய சகியாய் இருக்கிறது. அதோடும் இந்த பெரும் கற்பனைகளை பரிதாப ஜாதிக்கு புகட்டிய உயர் ஜாதியாருடைய அடிப்படையான நோக்கமெல்லாம் தங்கள் பெண்டாட்டி பிள்ளைகள் பல்லாண்டு பல்லாண்டு க்ஷேமமாய் இருந்த விடத்திலிருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கவும், மூன் ஜாக்கிரதையாக செய்யப்பட்ட சூழ்ச்சியென்பதை பரிதாப கூட்டத்தார் பூரணமாக உணரவேண்டிய. பரிதாப ஜாதியாரின் மாறுதலுக்கு பாடு படுபவர்கள் இக்கொடுமைகளையும் ஆழ்ந்து கவனிக்க வேண்டும்!

எலி வளை தோண்டும் பரிதாபம்.

பங்குனி மாதம் முதலேடு விளைந்த தானியமெல்லாம் மிருசுதார் வீட்டு கொல்லை தலைமாட்டு சேரடியில் கட்டுக்கிடை செய்யப் பட்டாகிவிடும். பங்குனிமாதத்தோடு போரடி கருக்காய் பட்டரை இவைகளில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒன்றிரண்டு நெல் தானியங்களையும் கசக்கி எடுத்து பண்ணை வீட்டில் கொண்டு வந்து பந்தோபஸ்து செய்தாகிவிடும். சேரடியில் பந்தோபஸ்து செய்யும் நெல் எல்லாம் வியாபாரிக்கு போட்டவைகள் போக மிகுதியாக இருப்பவைகளே கட்டுக்கிடைசெய்யப்படும். கட்டுக்கிடை செய்வதெல்லாம் ஆடி அறுதலையில் கிருகியாக கிரயம் செய்வதற்காகவே இறப்பு செய்யப்படுவதின் அந்தரங்க நோக்கமாகும். இந்த மாதங்களின்தான் மிருசுதார்கள் செய்து கொள்ளும் வியாபாரகடன்களை ஈடுசெய்துகொள்வது வழக்கம். மிருசுதார்களின் தாசிவேசிகளுக்கு மனம் பூரிப்படையும்படி சனமானம் அளிக்கும் சந்தோஷகரமான காலமும் இதுவாகும். வேசியர்கள் வீட்டுக்கு பரிதாப ஜாதியார் உழைத்து சேர்த்திருக்கும் தானியம் வருஷ பூராவும் உட்கார்ந்து தின்று கொழுக்க கட்டுக்கிடை செய்யும் காலமும் இதுதான். பரிதாப ஜாதியார் உழைத்து சேமித்திருப்பதில் உடல் நலுங்காமல் உட்கார்ந்த இடத்தில் குடிகூத்தியில் சுகமாக சஞ்சரிக்கு மிருசுதார்கள் ஒரு பகுதியார். குடும்பக்கவலையுள்ள மிருசுதார்கள் என்ற ஒரு கூட்டமுண்டு. இவர்கள் பிறர் ஜோலிக்கு போக மாட்டார்கள என்றும, பிறத்தியான் காசிக்கு ஆசைப் பட மாட்டார்கள் என்று நல்ல பெயருக்கு பாத்திரப்பட்டு காலம் கழிப்பவர்கள். இக்கூட்டத்தார் குடும்பத்துக்கு அவசியமான சாமான்களை வாங்கி அபிவிர்த்தி செய்வதிலும், பெண்டாட்டி பிள்ளை குட்டிகளுக்கு காலத்துக்கேற்ற நவீன முறையில நகைகளை செய்து போட்டு அலங்கரித்து ஆசை பார்ப்பதும், பாத்திர பண்டங்கள் வாங்குவதும், மிகுந்தவைகளை தக்க இடத்தில் வட்டிக்கு விட்டு இருக்கும் சொத்தோடு சொத்தாக அபிவிர்த்தி செய்யும் வேலையில் காலம் கழித்துக் கொண்டிருப்பவர்கள். இன்னொரு சாரார் தர்மிஷ்டர் என்று சொல்லப்படுபவர்கள். இப்பகுதியார் ஸ்தல யாத்திரை, தீர்த்த ஸ்நானம், பிராமண சமாராதனை போன்ற கைங்கர்யங்களின் பரிதாப ஜாதியாரின் உழைப்பை சிலவிடக் கூடியவர்கள் இந்த கைங்கர்யங்கள் செய்வதால் போர மோக்ஷத்திற்கு நல்ல கெதி கிடைக்கக்கூடிய மகான் என்ற பட்டத்தை சிலசோம்பேரிகளுக்கு கொடுக்கப்படும் இனத்தை சேர்ந்தவர்கள். இப்படியே தங்கள், தங்கள் மனோபிஷ்டத்தை யாதொரு கவலையில்லாமல் தாராளமாக பூர்த்தி செய்து கொள்வதில் பரிதாப ஜாதியாரின் உழைப்பின் பலனை உபயோகப்படுத்திக் கொண்டாலும், தங்கள் வருவாய்க்கு மூலகருவியாக இருந்த பரிதாப ஜாதியாருக்கு தானியம் சொரிந்த அந்தக்காலத்திலும் அவர்களுடைய கேவல நிலைமைக்கு விமோசனமில்லை. பங்குனி சித்திரை, வைகாசி இந்த மூன்று மாதங்கள் மகசூல் முடிவடைந்த காலமாய் இருந்தாலும், பரிதாப ஜாதியார் வீட்டில் கால்படி நெல்லுக்கு வழியிருக்காது. அதோடும் இந்த மூன்று மாத காலமும், கால்படி அரைப்படி கிடைக்க கூடிய வேலையுள்ள காலமுமல்ல என்பதை சொல்ல வேண்டியதில்லை. இம்மாதங்களில் வயிற்றுக்கு வழியில்லாமல் எலி வளை தோண்டுவதென்ற பழக்கம் எல்லா கிராமத்திலும் பரிதாபஜாதியாரிடம் காணப்படும் ஒரு சாதாரண சம்பவம். எலிகள் தங்கள் வயிற்று உணவுக்கு திருடி வைத்திருக்கும் தானியங்களை பரிதாப ஜாதியார் தங்கள் பசிப்பிணியைத் தீர்த்துக்கொள்ள வெட்டி எடுப்பார்கள். இந்த வளைகள் பெரும்பாலும் வயல் கரைகளிலேயே இருக்கும் எலிவளை தோண்டுவதிலும் பகிரங்கமாக தோண்டுதற்கு முடியாது. ஆண்டைமார்களுக்குத் தெரியாமல் ரகசியமாய்த்தான் வெட்டிஎடுக்கவேண்டும். ஆண்டை மார்களுக்கு தெரிந்துவிட்டால் வயல்களையே பரப்பலகள் வெட்டி நாசப்படுத்தி விட்டான் என்ற குற்றத்துக்கு உட்படும்படி ஏற்படும். எலி வளையிலிருக்கும் தானியத்தை பரிதாப ஜாதியார் பசிக்கொடுமையால் வெட்டி எடுக்கிறார்கள். அவர்கள் உழைப்பை எல்லாம் இருப்பு செய்து கொண்டு மேலே சொன்னபடி தங்கள் இஷ்டத்துக்கு சிலவு செய்து கொண்டிருக்கிறோமென்கின்ற கருணை இல்லாமல் அவர் செய்யும் அடாதச்செய்கையை கொஞ்சம் கவனிக்கவேண்டும். பசிப்பிணியால் எலிவளைதோண்டும் பரிதாபகரமான காக்ஷியை ஈர, இரக்கமில்ல மிருசுதார்களோ, அல்லது அவர்களிடத்தில் கைகூலி வாங்கும் மணியாரன், கிராமதலையாரிபோனறவர்களோ அகஸ்மாத்தாய் கண்டுவிட்டால் கண்டவிடத்தில் கொடுக்கும் உதையோடு ஆண்டைவீட்டு அடிவாசலில் கொண்டு நிறுத்துவார்கள். அண்டைவீடு ஆனதால் அங்கு கட்டிவைத்து செம்மையாக உதை கொடுக்கப்படும். இதோடாவது பசியால்வாடி நிற்பவனை விடுவார்களா என்றால் அதுதான் இல்லை. கரையைவெட்டி சேதம் விளைவித்த கஷ்டத்துக்கு என்று சொல்லி குறிப்பிட்ட ஒரு தொகையை அபராதம் விதித்து பரிதாப ஜாதியாரின் உழைப்பில் பிடித்து வைத்திருக்கும் வருமானத்தின் ஒரு பகுதியில் ஈடு செய்துகொள்வார்கள். இப்படியே அவர்கள் வருமானத்தில் பெறும் பாகம் மிருசுதார்களால் சூரையாடப்படும். இம்மாதிரியான வாழ்வே அவர்களின் வாழ்வு என்பதை எங்கும் சர்வசாதாரணமாக காணப்படும் சம்பவமே அல்லாமல் மிகைப்படுத்தி சொல்லியதல்ல. சுருங்க உரைக்கின், தானியம் குவித்தகோடையில் எலிவளை தோண்டுவதும், தானியப் குவிய வயல்களை பண்படுத்தும் ஆடையில் நண்டுவளை, நத்தைகளை அக்கூட்டத்தின் உழைப்புக்கு பலன் என அறிக.

நல்லபெயர் வைத்துக்கொள்வதும், பாவமா!

சர்வ உயர்ஜாதியார்களின் திருக்கண்களுக்கும், கள்ளனுய், கபடனுய் எத்தனையோ வம்ச பரம்பரையில் தீயனுய் இந்த பரிதாப ஜாதியார் காணப்பட்டு வந்தார்கள். பல திறப்பட்ட அபிப்பிராய பேதத்துக்குரிய உயர் ஜாதியினர்கள், சாதி மாச்சலியம் தலைகொண்டு நிற்கும் உயர்ஜாதியினர்கள் இந்தப்பரிதாபஜாதியாரைப் பொறுத்தமட்டில் ஒருங்குசேர்ந்து செய்துவந்த கொடுந்துன்பங்கள் பல. அவர்களை அழைப்பதற்காவது நல்ல பெயர்களையாவது சூட்டிக்கொள்ள உரிமை கொடுத்தார்களா என்றால் இல்லை. அவர்கள் வயற்றில் அடித்தார்கள். அது லாபத்தைகருதி செய்தார்கள் என்று சொல்லலாம். பரிதாப ஜாதியார் தங்கள் புத்திரபாக்கியங்களுக்கு நல்ல பெயர்வைத்து அழைப்பதில் கூடவா கல்நெஞ்சம படைத்த மிருசுதாரர்களின் கண்ணை உறுத்தவேண்டும். "புருஷோத்மன், வெங்கிடாஜலபதி, திருஞானசம்பந்தன், ஸ்வதாரண்யம், வண்மீகலிங்கம், கிருபாநிதி, கிருத்திவாசன், வேதாந்தம், நடராஜன்" போன்ற இம்மாதிரியான பெயர்களை பரிதாப ஜாதியாரிடையே காணவேமுடியாது. இப்பெயர்கள் பரிதாப ஜாதியாரின் வாயில்கூட நுழையவே நுழையாதென்பதை அவர்களின் ஆரம்ப நிலையை முன் குடி அரசு அத்தியாயங்களின் நான் எழுதியவைகளை படித்தவர்களுக்கு தெளிவாய் புலப்படும். இம்மாதிரியான பெயர்களை தரித்துக் கொள்வதால் வரும் லாபமும் அப்பெயருக்குள்ள யோக்கியதையும், என்ன என்பது வேறுவிஷயம். இப்பெயர்களே உயர்ஜாதி மிருசுதார்க

என்னமோ பிரமாதமாய் கருதிக்கொண்டு பரிதாப ஜாதியார் தரித்துக் கொள்வதில் உலகமே முழுகிப்போய் விடுவதாய் நினைக்கிறார்கள். அவர்களுடை மனப்பான்மையில் எவ்வளவு தூரம் பேதபுத்தி தாண்டவமாடுகிறதென்பதை காட்டவே இதை எழுத வேண்டியிருக்கிறது. இப்பெயர்களெல்லாம் உயர் ஜாதியாருக்கு சொந்தமான கடவுள்களுடைய திருநாமங்களாதலால், அப்பெயர்களை பரிதாப ஜாதியார் தரித்துக்கொள்வது மகா பாதகமென்கிறார்கள். அவர்கள் சொல்லும் இம்மகா பாதகத்தை ஏற்றுக்கொள்ள பயந்து நடுங்கும் பரிதாப ஜாதியார் தங்கள் சமூகத்தில் ஜனிக்கும் புத்திரபாக்கியங்களுக்கு வம்ச பரம்பரையாக சூட்டிக்கொண்டுவரும் பெயர்களை கேட்க, கேட்க மிக விந்தையாகவே இருக்கும். தூண்டி, துடப்பக்கட்டை, நொண்டி, தாப்பாக்கட்டை, கட்டேரி, காட்டேரி, ப்ளான், எலியன், பறட்டயன், மொழியன், காத்தான் போன்ற பல பெயர்களே பரிதாப சமூகத்தில் வழங்கிக் கொண்டுவருவதாகும். தப்பித்தவறி சில விடங்களில் பொன்னுசாமி, ரெங்கசாமி, பெரியசாமி, சின்னசாமி, என்பது போன்ற பெயர்கள் காணப்பட்டாலும், அப்பெயர்களை முழுதும் சொல்லி அழைக்க மிராசுதாரகள் சொல்லி அழைக்க மிராசுதார்கள் சங்கோசப்படுவார்கள். தங்கள் பிரபல தத்துவத்துக்கு பங்கம் வந்துவிட்டதாக கருதுவார்கள். ஏனென்றால் அப்பெயர்களில் "சாமி" என்ற ஒரு வார்த்தை கலந்திருப்பதால் தான்! மிராசுதார்களுக்கேற்பட்ட இந்த இடஞ்சலை தீர்த்துக் கொள்ளவும் வேண்டும். ஆனால் பரிதாப ஜாதியானை வேலைக்கழைக்க எதாவது ஒரு பெயரைக்குறிப்பிட்டு அழைத்தும் ஆகவேண்டும். ஆகவே "சாமி" என்ற பதத்தை எடுத்துவிட்டு "பொன்னு" "சின்னு" "பெரியா" "ரெங்கா" என்று அழைத்துக்கொள்ளும் மிராசுதார்களோடு கழுதை, நாய் என்ற செல்லப்பெயரைவைத்து அழைக்கும் மிராசுதார்களும்உண்டு. அல்லது ஏலே தூண்டி மகனே! ஏலே தாப்பாக்கட்டை மகனே! ஏலே துடப்பக்கட்டை மகனே என்று தகப்பன் பெயரை வைத்து அழைத்துக்கொள்ளுவதின் மூலம் சாந்தி செய்துகொள்ளும் மிராசுதார்களும் சிலருண்டு. பரிதாப ஜாதியார் படும் பல்லாயிரக் கணக்கான அவஸ்தைகளில் இதுவும் ஒன்று என அறியவும்.

முன்னேற்றம்.

பிரிட்டிஷ் மலேயா நாடுகளில் முதன்மை வாய்ந்த நமது சுயமரியாதை இயக்கப்பத்திரிகை.

மலாய்நாட்டிற்கு வருட சந்தா ஷில்லிங். 5

வெளிநாடுகளுக்கு ரூ. 8-0-0

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சகித்ததெல்லாம் போதும் போதும்" என்று சொல்லிக்கொண்டு ஏழைமக்கள் தற்கொலை புரிந்து கொள்கிறார்கள். மக்கள் தற்கொலை செய்து கொள்வதற்கு முக்கிய காரணம் வறுமையின் கொடுமையேயன்றி வேறல்ல என்பதை ஒவ்வொரு தற்கொலை நிகழ்ச்சிகளையும் கவனித்தால் அறியலாம். உதாரணமாக ராமநாதபுரம் ஜில்லா பாகநேரியில் சமீபத்தில் நிகழ்ந்த பரிதாபகரமான தற்கொலை நிகழ்ச்சியிலிருந்து யூகிக்கலாம். அவை வருமாறு:— "ராமநாதபுரம் ஜில்லா பாகநேரியில் ஒரு ஸ்திரீ வறுமையின் கொடுமை தாங்க முடியாமல், தன் உயிரைமாய்த்துக்கொள்ளவும், தனது குழந்தைகள் நான்கையும் கொன்று விடவும் உறுதி கொண்டாளாம். சென்ற வெள்ளிக்கிழமை இரவு அவள் தனது வீட்டை விட்டுப் புறப்பட்டு ஒரு கிணற்றருகில் சென்று குழந்தைகளை ஒன்றன் பின் ஒன்றாக நான்கு குழந்தைகளையும் கிணற்றில் எறிந்து விட்டு தானும் தற்கொலை செய்து கொள்ள முயன்றாள். ஆனால் அவள் சொற்ப காயங்களுடன் தப்பி விட்டாள். மூன்று குழந்தைகளின் பிரேதங்கள் மட்டும் தண்ணீரில் மிதந்தன—மற்றொரு குழந்தையின் பிரேதம் கிடைக்கவில்லை." (தினகரன்) இத்தகைய நல்லதங்காள் நிகழ்ச்சிகள் இவ்வுலகமெங்கும் சர்வ சாதாரணமாய் மலிந்து விட்டன. வறுமையின் கொடுமை சகிக்காவிட்டால் ஏழை மக்கள் வேறு என்ன தான் செய்வார்கள்! பிரக்யாதி பெற்ற போர் வீரனும் பிரான்ஸ் சக்கரவர்த்தியுமான நெப்போலியன் கூட வறுமையின் கொடுமை தாங்க முடியாமல் ஓர் முறை தற்கொலை செய்து கொள்ள போனதாகவும், பிற்பாடு ஒரு நண்பரின் பண உதவியால் காப்பாற்றப்பட்டார் என்பதையும் நாம் நெப்போலியனின் சரித்திரத்தில்பார்கிறோம். "நான் உலகத்தையே ஆட்டவல்லேன்" என்று வீரகர்ஜனை செய்த நெப்போலியனே வறுமையின் கொடுமை பொறுக்க முடியாமல் தற்கொலை செய்து கொள்ள முயன்றிருக்கும், போது இன்றைய ஏழைமக்களுக்கு வறுமையின் கொடுமையை சகித்துக் கொண்டிருக்க முடியுமா? இப்போது நாம் தற்கொலைகளுக்கு முழு முதல் காரணம் வறுமை என்பதை அறிகிறோம்.

அமெரிக்காவில் தற்கொலையை தடுக்கும் சங்கத்தை ஸ்தாபித்திருக்கும் எச். எம். வாரன் என்பவர் கூட அவர் பெற்ற 25 வருட அனுபவத்தால் "தற்கொலைக்கு முக்கிய காரணம் வேலையில்லாத்திண்டாட்டமும்; வேலையிலிருந்து திடீரென நீக்கப்படுவதுமே இதனால் மனவெறுப்படைந்து தரித்திரத்தால் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அமெரிக்காவில் 1932-ம் வருடத்தில் மாத்திரம் 20000 பேர் தற்கொலை செய்து கொண்டார்கள்" என்று அவர் முசிய பத்திரிகைகளில் குறிப்பிட்டிருக்கிறார்.

களவு, கொலைக்கு காரணம்.

அநேகர் மேற்காட்டியபடி வறுமையை நிவர்த்தி பண்ணிக்கொள்வதற்கு ஒழுங்கான வழியொன்றுமில்லாமையினால் களவு செய்கிறார்கள். களவு செய்யும் போது தற்காப்பின் நிமித்தம் ஏதாவது ஆயுதத்தை தன்னுடன் எடுத்துச் செல்கிறார்கள். களவு செய்யும் போது யாராவது தன்னை பிடிக்க வந்தால் உடனே தற்காப்பின் நிமித்தம் கையிலிருக்கும் ஆயுதத்தால் தாக்குகிறார்கள். உடனே கொலைநடக்கின்றன ஏதோ கள்ளர்கள் தப்பியோட முயற்சிக்கிறார்கள்; முடியாவிட்டால் பிடித்து போலீசாரிடம் ஒப்படைக்கிறார்கள். பிற்பாடு ஆகிறதென்ன? மரண தண்டனை கொடுக்கிறார்கள். அல்லது 5-வருடமோ 10வருடமோ அரசாங்கத்தார் சிறைச்சாலையில் அடைத்து வைக்கிறார்கள். சிறைத்தண்டனை முடிந்தவுடன் அரசாங்கம் அவர்களுக்கு வேலை கொடுக்கிறார்களா? இல்லை, வெறுமனே வெளியே துரத்தி விடுகிறார்கள். மீண்டும் ஒழுங்கான முறையில் இல்லாமையை நிவர்த்தி பண்ணிக் கொள்ள மார்க்கமில்லாவிட்டால் என்ன செய்வார்கள்? தற்கொலை செய்து கொள்வார்கள். தற்கொலை செய்து கொள்ள இஷ்டமில்லாதவர்கள் பழைய குருடி கதவைத் திறடி என்று, பழையபடி கொலை, களவு செய்வார்கள். உலகத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தினால் ஏற்பட்ட வறுமையை நிவர்த்தி பண்ணிக்கொள்வதற்காக வேண்டி முக்கில் சிறு சிறு களவுகள் செய்தவர்கள் தான் காலம் போகப்போக அல்கபோன் (Alcapon) போன்ற மாபெரும் கொள்ளைக் கூட்டத்தலைவனாகி பதினாயிரக் கணக்கான வறுமையாளரை சேர்த்துக்கொண்டு கொள்ளையடிக்கிறார்கள். இப்போது சிறைச்சாலையில் இருக்கும் கைதிகள் எல்லாம் முன் வறுமையால் பீடிக்கப்பட்டு வறுமையை நிவர்த்தி பண்ணிக் கொள்வதற்காக களவு செய்தவர்களே! உலகத்தில் எல்லா மக்களுக்கும் சமமாக பொதுவாக இருக்க வேண்டிய நிலங்கள்......முதலியவைகளை சிறு பான்மையினர்களாகிய முதலாளிகள் கைப்பற்றிக் கொண்டால் பெரும்பான்மையினர்களாகிய மக்கள் என்ன செய்வார்கள்? எங்கு நோக்கினும் எதைப்பார்த்தாலும் சர்வமும் முதலாளிக்கு சொந்தம்! ஏழைமக்களுக்கு தேவையானதை பெறுவதற்கு மார்க்கம் இல்லை. (இன்றைய அரசாங்கங்களும் சட்டங்கள் என்று ஏற்படுத்தியிருப்பதெல்லாம் இந்த முதலாளித்துவத்தை இல்லாதவர்கள் எதிர்க்காமல் களவு செய்ய விடாமல் முதலாளித்துவத்தை பாதுகாப்பதற்கே.) அதனால் ஏழை மக்கள் முதலாளிக்கு சொந்தமானதை களவு செய்கிறார்கள். களவு என்பது தனிவுடமையாட்சியில் உள்ள வனிடமிருந்து இல்லாதவன் பெறும் மார்க்கம்

விபசாரத்திற்கு காரணம்.

விபசாரம் என்பது மேற்காட்டியபடி பிழைக்க வழியற்று வறுமைக்காளான பெண் மக்கள் தங்களது வறுமையை யில்லாமையை நிவர்த்தி பண்ணிக்கொள்ள ஒழுங்கான மார்க்கம் ஒன்றுமில்லாமையினால் பெண்மணிகள் இல்லாமையை நிவர்த்தி பண்ணிக் கொள்வான்வேண்டி உள்ளவனுக்கு தனது "மானத்தை" விற்கிறார்கள். நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பெண்கள் இல்லமையை (வறுமையை) நிவர்த்திக்கொள்வதற்கே விபசாரத்தில் ஈடுபடுகிறார்கள். இல்லாத பெண்கள் என்ன செய்வார்கள், இருக்கிறவர்களிடமிருந்து பெறக்கூடிய ஒருவழியை கையாளவேண்டும். அந்த ஒரு வழி தான் விபசாரம். தனிவுடமை யாட்சியில் பிழைக்க வழியற்ற ஏழைபெண்கள் உள்ள வனிடம் இருந்து பெறுவதற்கு வழி யொன்றுமில்லாமையால் கையாளும் ஒரு வழிக்குத்தான் விபசாரம் என்கிறோம். இந்த ஏழை பெண்கள் விபசாரம் என்னும வழியையும் கையாளா விட்டால் தற்கொலை செய்து கொள்ளும் ஒரு வழி தான் இவர்களுக்குண்டு. தனிவுடமை ஆட்சியில் இதல்லாமல் வேறு வழியில்லை.

எல்லா வற்றிற்கும் காரணம் வறுமை.

வறுமையின் கொடுமை சகிக்க முடியாமை (வாழ்க்கை சாதனங்களாகிய உணவு உடைவீடு, சுகம் இல்லாமை) தான் உலகத்தில் நடக்கும் கொலை,களவு, விபசாரம், தற்கொலை முதலியவைக்கு காரணம் என்று அறிக! பொய், புரட்டு, ஏமாற்றம் என்பவைகளும் இந்த வறுமையால் ஏற்பட்டது தான்! இப்போது நாம் கொலை, களவு, விபசாரம் தற்கொலை பொய், புரட்டு, ஏமாற்றம் என்பவைகளுக்கு என்ன பொருள் கொள்ள வேண்டும் என்றால் தனிவுடமை யாட்சியில் (வறுமையாளரை உண்டு பண்ணும் முதலாளி ஆட்சியில்) வறுமையை போக்கிக் கொள்வதற்காக கையாளும் ஓர் மார்க்கம் என்று தான். கொலை களவுவிபசாரம், தற்கொலை முதலியவைகள் நிகழ்வது வறுமையால் என்பதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் உணர்ந்தும், இதை குற்றம்என்று அரசாங்கத்தார் கொடும்தண்டனைகளால்தண்டிப்பது நியாயமா? வறுமையால் நிகழ்வதை குற்றம் என்று கடவுள் நரகலோகத்தில் துன்புறுத்துவது நியாயமா? அல்லது அத்தனை தீச்செயல்களுக்கு முழு முதல் காரணமாகிய வறுமையை ஒழிப்பது நியாயமா? இத்தனைக்கும் ஓர் அர்ப்ப காரணமாகிய வறுமையை ஒழித்துவிட்டால், அவையனைத்தும் மனித சமூகத்திலிருந்து

மறைந்து விடுமன்றோ? ஆனால் அரசாங்கங்களும் மதவாதிகளும் இந்த அற்ப காரணமாகிய வறுமையை ஒழிப்பதற்கு தகுந்த கொள்கையை கையாளாமல் கொடிய தண்டனைகளாலும், மதங்களாலும் "மறுஉலக தண்டனைகளாலும்" ஒழிக்க முயல்வது எத்துணை அறிவீனம் இந்த முறை இதுவரைக்கும் எதிர்பார்க்கும் பயனை யளிக்க வில்லை யல்லவா?

[உலகத்தில் கடவுளால் எத்துணையோ மதங்களும், தீர்க்கதரிசிகளும், அவதாரங்களும், முப்பத்தி முக்கோடிதேவர்களும் தோன்றினவாம். இஸ்லாமிய கொள்கைப்படி ஒரு லட்சத்து இருபத்தி நான்காயிரம் நபிமார்கள் தோன்றியும் கடைசியில் மிர்சா சாகிப் தோன்றியும் "அருள், அன்பு, நீதி, சர்வசக்தி, திரிகாலஞானி......, என்னும், "அல்லா (ஹ்)" ஒருவனிருந்தும் சகல அட்டூழியங்களுக்கும் கர்த்தாவாய் காரணமாய் இருக்கும் அற்புதமான வறுமையை ஒழித்துவிட தெரியாமல் திண்டாடி யிருக்கிறார்கள்—திண்டாடுகிறார்கள். உலகத்தில் இத்துணை லட்சம்கடவுள் அவதாரங்களும், கடவுள் குமாரர்களும்தோன்றியும், "எல்லாம்வல்ல கடவுள்" இருந்தும் மக்களின் வறுமையை தீர்த்து எல்லோரும் இன்புற்றிருக்கக்கூடிய ஓர் முறையை தோற்றுவிக்க முடியவில்லை. ஆனால் ருஷியாவில் தோழர் லெனினால் தோற்றுவிக்கப்பட்ட மூன்றுநாள் சமதர்ம—பொதுவுடமை புரட்சி, கடவுளாலும் அல்லா (ஹ்) வாலும் தீர்க்கதரிசிகளாலும் முடியாத அத்துணையையும் சாதித்துவிட்டதல்லவா? கடவுள் புரட்டையும் மதங்களின் புரட்டையும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கியும், மதவாதிகள், இன்னும் மதத்தையும், தீர்க்கதரிசிகளையும், கடவுளையும் கட்டியழுவதேன்? இனிமேலாவது முட்டாள்தனத்தையும் மூட நம்பிக்கையையும் விட்டொழிக்கப்படாதா? "விஞ்ஞானத்திற்கு ஒத்த மதம், பகுத்தறிவிற்கு ஒத்தமதம், எல்லா காலத்திற்கும் ஏற்றமதம்" என்று சில மதவாதிகள் உலகத்தையே ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள்! மதவாதிகளே! இனி உங்களுடைய ஏமாற்றத்திற்கு இடமில்லையென்பதை உணருங்கள்! விஞ்ஞானத்தையும் பகுத்தறிவையும் கண்டால் மதங்கள் பஞ்சாய் பறக்கின்றனவே! அத்துணை நபிமார்களும், அவதாரங்களும் தோன்றியும், எல்லாவல்ல கடவுளிருந்தும், எத்துணையோ மதங்கள் தோன்றியும் உலகம் இவ்வளவுகேவல நிலைமையிலிருப்பதேன்?]

வறுமையை அகற்றும் சமதர்மம்.

இப்போது நாம் மேலே ஆராய்ந்ததில் எல்லா தீச்செயல்களுக்கும் காரணம் வறுமை யென்பதையும், "கடவுள்" என்பதனால் மக்களுக்கு ஆகப்போவது, ஆகினது ஒன்றுமில்லையென்பதையும், மதங்களும், தீர்க்கதரிசிகளும் இன்றைய மக்களுக்கு உபயோகமற்றவைகள் என்பதையும் அறிகின்றோம். உலகத்தில் வறுமையை பொருளாதார நெருக்கடியை ஒழித்து சாந்தியையும்—சமாதானத்தையும்—நிம்மதியையும் நிலைநாட்ட வேண்டுமாகில் சமதர்மம்—பொதுவுடமை என்பதனால் தான் ஆகும்! சமதர்மம்-பொதுவுடமை என்பதுமட்டும் தான் நவீனக்கொள்கை! சமதர்மத்தை பின்பற்றினதினால்தான் இன்றைக்கு ஸோவியத் ருஷியா வறுமையை ஒழித்து வெற்றியடைந்திருப்பதை சமதர்மத்தின் விரோதிகள் கூட கூறுகிறார்கள்! உலகமெங்கும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு, மக்கள் வேலையில்லா திண்டாட்டத்தினால் திண்டாடுகிறார்கள். இதை யகற்றுவதற்கு வழிதெரியாமல் பொருளாதார நிபுணர்கள் (மெஞ்ஞானமற்ற முட்டாள் நிபுணர்கள்) எல்லாம் மண்டையில் அடித்துக்கொண்டு கூப்பாடு போடுகிறார்கள்! ஆனால் ஸோவியத் ருஷியாவோ, பொருளாதாரத்தில் வெற்றிபெற்று திகழ்கின்றன! ருஷியாவைத்தவிர மற்றைய நாடுகள் இன்றைக்கு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டு தவிப்பதற்கு காரணம் தனிவுடமை யாட்சியேயன்றி வேறல்ல. ஒவ்வொரு முதலாளியும் தனது சுயநலத்திற்காக வேண்டி தொழிற்சாலைகளையும், ஆலைகளையும், விவசாய பண்ணைகளையும் வைத்து நடத்துவதினால்தான் உலகில் வறுமை தாண்டவமாடுகின்றன. முதலாளிகள் கையிலும் அரசாங்கங்கள் கையிலும் சிக்குண்டிருக்கும் எல்லாவற்றையும் பறித்து பொதுவுடமை ஆட்சியின் கீழ்வைத்து நடத்துவோமாகில் வறுமையென்பதற்கு இடமேயில்லாமல் போய்விடும். தனிவுடமையில் ஒவ்வொருவனும் "நான் எப்படியாவது முதலாளியாகவேணும்" என்று முயற்சிக்கிறான். ஒருவன் முதலாளியாக வேண்டுமாகில் ஒன்பதுபேர் வறுமையாளர்களாக வேண்டும். ஒன்பதுபேரை தரித்திரவானுக்காமல் ஒருவனுக்கும் முதலாளியாக வழியில்லை. தற்போது இருக்கும் முதலாளித்துவத்தை தலைகீழாய் கவிழ்த்தி பொதுவுடமை ஆட்சியை நிலைநாட்டினால்தான், எல்லாமக்களும் சுயமரியாதையுடன் இன்புற்றுவாழ முடியும். பொதுவுடமை ஒன்றுதான் மக்களுடைய தேவையை பூர்த்திபண்ணக்கூடிய மாபெரும் திட்டங்களை போட்டு மக்களின் தேவையை பூர்த்திபண்ணுகின்றன.

பொதுவுடமை ஒன்றினால்தான் எல்லாமக்களுக்கும் தேவையான வாழ்க்கை சாதனங்களாகிய உணவு, உடை, வீடு, சுகம் எல்லாம் அளிக்க முடியும்.

எங்குபோயும் ஈற்றில் பொதுவுடமைக் கொள்கைக்குதான் வந்து சேரவேண்டும்! பொதுவுடமை நிலவாத வரைக்கும் உலகத்தில் சமாதானமும நிலவாது? மக்களிடத்திலும் சந்தோஷம் திகழாது என்பது திண்ணம்.

இந்துமத பாடசாலை வாலாஜாபாத்.

23-3-34 தேதி மாலை 4 மணிக்கு தோழர்கள் என். நாராயணசாமி ஐயர் எம் ஏ. அவர்கள் (பூனா, சேனா கணித பரிசோதக உதவி நிர்வாகஸ்தர் காரியாலயத்தின் கண்காணிப்பாளர்) ராகவேந்திர ராவ் அவர்கள் (மேற்படி நிலையம் பூனா) எம். ஆர். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் (மேற்படி நிலயம் பூனா) கந்தசாமி ஐயர் அவர்கள் பி. ஏ. எல். டி. பூனா ஆகிய பெரியார்கள் வந்து இந்துமத பாடசாலையையும், அதன் கிளைகளாகிய தொழிற்சாலை, வாசகசாலை, நூற்கும் முதலியவைகளையும் பார்வையிட்டு கழகத்திற்குத் தலைமை வகித்தனர். மாணவர்கள் சொல்லரட்டங்களாலும், நடிப்புகளாலும், இன்னிசைகளாலும் கண்டோர் மனதைக் களிக்கச் செய்தனர். கடைசியில் தலைவர்கள் இப்பாடசாலை, என்வாழ்நாளில் இன்பம் தந்ததில், இது ஒன்றேயாகுமெனவும், சிறார்களது நடிப்பு சொற்சுவை முதலியன போற்றத்தக்கதெனவும், கைத்தொழிற்சாலையில் தச்சு, பைண்ட், தறி முதலியன களிப்பைத் தந்ததெனவும், நடத்துவோரது ஊக்கம் மிகவும் அருமையானதெனவும், பொதுநலத்தில் ஈடுபட்டுழைக்கவேண்டுமெனவும் கூறி முடித்தார். பின்னர் தோழர் வட. தி. மாசிலாமணி முதலியார் அவர்களால் நன்றி கூறக் கழகம் கலைந்தது.

(ஒரு நிருபர்)

ஆதிதிராவிட தொண்டர்படை மகாநாடு.

செய்யூர் கிராமத்தில் ஆதிதிராவிட தொண்டர்படை மகாநாடு 1-4-34க் தேதிகளில்நடைபெறப்போகின்றமையால் தோழர் டி. சுந்தராவ் நாயுடு பி. ஏ. பி எல். எம். எல். சி. அவர்கள் தலைமை வகிப்பார். தோழர்கள் ஜே. சிவசண்முகம் எம். ஏ., எம். எல். சி., எஸ். பி. பாலகுருசிவம், பி. செல்வநாதன், கே. ஜே. நல்லய்யா, எம். பி. தங்ககாந்தன், பி. எம். தங்கரூபன் இவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். தோழர் வசுவசந்தம் அமிர்தவாசகம், துரைசாமி இவர்கள் மேற்படி மகாநாட்டில் கலந்து கொள்வார்கள் என எம். பி. தங்ககாந்தன் எழுதுகிறார்.

"பானியால் டூத் பேஸ்ட்"

பல்லுக்கு உறுதியளிக்கவல்லதென பல நூற்றாண்டுகளாக ஆன்றோர்களால் போற்றப்படும் ஆலம் விழுதின் சத்தினால் தயார்செய்யப்படுவது வாயை சுத்தம் செய்து, ஈறுகளைக் கெட்டிப்படுத்தி, பற்களுக்கு உறுதியளித்து, பற்களை முத்துப்போல் பிரகாசிக்கச் செய்கிறது.

ஸ்டாக்கிஸ்ட்

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
52, பந்தர் தெரு, சென்னை.

'சுந்தரி ஸ்னோ.'

ஒரு சுந்தரிஸ்னோ வாங்குவோருக்கு ஒரு கைகுட்டை இனாம்.

சுந்தரி ஸ்னோ தோலைப் பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும், பிரகாசமாகவும் செய்வதோடு முகத்தில் உண்டாகும் வேர்வைக்கட்டி, பரு, மரு முதலிய தோல்வியாதிகளையும் போக்கி தோலுக்குப் புத்துயிர் அளிக்கிறது. நறுமணம் கமழ்வது. விலை மலிந்தது.

ஏஜண்ட் :- A. V. R. A.
அடைக்கப்ப செட்டியார்,
52-பந்தர் தெரு, சென்னை.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கொண்டு நிலம் வாங்கினவன், பயிருக்காகக் கடன் வாங்கி அதை அடைக்க முடியாமல், நிலத்தை இழக்க நேரிட்டது என்பது அருமை. தவிரவும் தன்னிலத்தைத் தானே பயிரிடுபவர்கள் என்று நான் சொன்னது, உழவு, கொத்து, விதைப்பு, களை எடுப்பு, முதலிய வேலைகளைச் சம்பள ஆள் இல்லாமல், தானுந் தன் மனைவி மக்களுமாக வேலை செய்கிறவர்களை கடனைக் கொடுக்க முடியாமல் வறுமைப் படுவதாகச் சொல்லப்பட்டவர்கள், இப்படிப்பட்டவர்களா என்று ஐயப்படுகிறேன். அவர்கள் கொண்ட கடன், தாங்கள் பயிரிட்ட பிறர் நிலத்தைத் தாங்களே வாங்க வேண்டுமென்ற நோக்கத்துடன், அதன் கிரயத் தொகைக் காகச் சேமித்த பெரும் பாகத் தொகையை நிறைவு படுத்தக் கூட்டுறவு சங்கங்களில் வாங்கிய சிறு பாகத் தொகையா, எனவும் ஐயப்படுகிறேன். உழவு விதைப்பு, களை எடுப்பு முதலிய வேலைகளுக்குச் சம்பள ஆட்களை வைத்து வரப்பின் மேல் நின்று வாயம்பலம் பண்ணிக் கொண்டு, பயிரிடுபவர்கள் என்ற பெயர் மாத்திரம் உடையவர்களாய் தன்னிலத்தின் சராசரி உச்ச நிகர வரும்படி இவ்வளவெனத் தெரிந்தும், வேறு காரணங்களால் தூண்டப் பட்டு, வரவுக்கு மிஞ்சிய செலவு செய்து கடனாளிகளாய் இருப்பார்களென்றே அஞ்சுகிறேன். அப்படிப்பட்டவன் எவ்வகையிலும் பயிர்த்தொழிலுக்கு ஏற்றவனல்ல மேலே நான் குறிப்பிட்ட வகைக்குக்கடன் கொடுக்க ஏற்பட்ட நில அடமானப் பாங்குகளில், கடன் வாங்கினவனை, கடனடைக்க முடியாமல் தவிக்காத படிக்காப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளன. கிரயத்தொகையும், பயிரிடும் செலவும் இனாமாகக் கொடுபட்டால் பயிரிடுபவர்கள் செழிப்புறுவார்கள் எனச்சொல்வது நான் கொண்ட கொள்கைக்கு முற்றும் முரணானது. தான் தேடாத பொருள், எவ்வளவு பக்க உதவி இருப்பினும், விரைவில் காணாமல் கரைந்து விடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கடன் பட்டவர்களை மீட்பதற்கு, செலவைக்குறைத்து சேமிப்பைப் பெருக்கும் வழக்கத்தை புகுத்துவது தான் முதல் வேலையாகும். இனம் கொடுப்பது தான் நோயை விடக்கொடிய மருந்தாகும். செலவைக்குறைக்கவும் சேமிப்பை வளர்க்கவும் ஆற்றாத கடனாளி களிருந்தால், அவர்களிடம் வேறு பொருளுமில்லாதிருந்தால், கடன்களை மன்னித்து வேறு வழியில் பிழைக்க விட்டு விடுவது தான் ஒழுங்கே யொழிய நிலத்தையும், பயிர்ச் செலவையும் இனாமாகக் கொடுத்து ஆளாக்க எண்ணுவது, பயிரிடு மக்களுக்குக்குள் நச்சுக் கிருமியைப் புகுத்தியதாகும்.

6. ஆறும் ஏழாவது பத்திகளில் குறிப்பிட்டவைகளுக்கு வேறுவிடை வேண்டியதில்லை.

ரோஜா முத்தையா

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

விட்டுப் பயந்து தயங்கினால் காரியம் கைகூடப் போவதில்லை. சற்று காலத்துக்கு லாபம் ஏற்படாமல் போனபோதிலும் சாமான்களை அதிகப்படுத்திக் கூலிகளை உயர்த்தவேண்டும். தவிரவும் இந்த உயர்ந்த கூலிகளும் பழைய கடன்களைத் தீர்க்க உபயோகிக்கப்படின் இப்புதிய சாமான்களை வாங்கமுடியாமல் போய்விடும்.

யுத்தக் கடன்கள்.

ரூஸ்வெல்ட் தவிரவும் தன் தேசத்தின் புனருத்தாரணத்தைமட்டும் கவனித்துவந்தால் மறுபடியும் பழைய நெருக்கடி ஏற்பட்டுவிடும் என்பதில் சந்தேகமில்லை. அமெரிக்காவின் ஏற்றுமதி வியாபாரம் சென்ற பத்து வருடங்களில் மிகவும் விஸ்தரித்திருக்கின்றது. ஏற்றுமதி வியாபாரம் முன்னிருந்த ஸ்திதிக்கு வரவேண்டுமாயின் யுத்தக் கடன்களை ஒருவாறு தீர்மானித்து ஒரு பைசல் செய்ய வேண்டும். மேலும் சமீபத்தில் ருஷ்யாக் கவர்ன்மெண்டுடன் வியாபார ஒப்பந்தம் செய்துகொள்ள எத்தனிப்பதுபோல் தைரியமாக உலக வியாபாரத்தை அதிகப்படுத்த முயலவேண்டும். தவிரவும் நாணயச் சிக்கல்களைச் சீக்கிரம் நேர் செய்யவேண்டும்.

சமீபத்தில் நடந்த லண்டன் கான்பரன்சுக்கு கொடுத்த தந்தியில் ரூஸ்வெல்ட் "நாணயம் ஸ்திரமாகவிருந்து நாகரீகத்துக்குகந்த முக்கிய சாமான்களை வாங்குவதற்கு இயல்பாக வினைமாறுதல்கள் இல்லாமலிருக்க வேண்டும்" என்று சொன்னார். தவிரவும் இன்னும் பத்து வருடங்களுக்கு ஒரே யோக்யதையை உடைய நாணயத்தை அமெரிக்கா வேண்டுகின்றதென்றும் தந்திஅடித்தார்.

இவ்வாறு அமெரிக்கன் கவர்ன்மெண்டார் தேசீய வியாபாரத்தையும், கைத்தொழிலையும் விருத்திசெய்ய முயன்றுவருகின்றனர். இம் முறைகளில் சில பொதுவுடைமைக் கக்ஷியின் முறைகளென்றுதான் சொல்லவேண்டும். உலக முதலாளித்வத்துக்கு தலைமையாக விளங்கிய அமெரிக்காவில் பொதுவுடைமைத் திட்டங்களில் சில கையாளப்படுவதினால் சற்று ஆச்சரியமாகத்தான் தோன்றுகின்றது.

பொன்மலை சுயமரியாதைச்சங்கம்.

நிர்வாகக்கூட்டம்.

25-3-34ந் தேதி மாலை 6 மணிக்கு நமது சங்கக்கட்டிடத்தில் நிர்வாகக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் நமது தோழர் எம். வி. துரைசாமி அவர்கள் ஏதோ அசௌகரியத்தை முன்னிட்டுவராததினால் தோழர் எஸ். எஸ். ராயப்பன் தலைமை வகித்தார். அதுசமயம் தோழர்களான பொன்னுசாமி, டி. என். ஷண்முகம், எம். கே. லாலா, நடராஜன் மற்றும் சிலதோழர்களும் ஆண்டு விழாவைப்பற்றியும், "மே" தினக் கொண்டாட்டத்தின் விசேஷத்தைப்பற்றியும் நீண்டநேரமாகப்பேசினார்கள். பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு தோழர் ராதா அவர்கள் சமதர்மக்கீதங்கள் பாடின பிறகு தலைவர் முடிவுரையின் பேரில் இரவு 8-30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

தீர்மானங்கள்

"மே" கொண்டாட்டத்தைப்பற்றி பொன்மலை தொழிலாளர் சங்கம் இவ்வருடம் கொண்டாடினால், நமது சுயமரியாதைச் சங்கத்தின் சார்பாக நடத்தவேண்டியது அவசியம் இல்லை என்றும் அவர்கள் நடத்தத்தவறினால் நமது சங்கத்தின் சார்பாக நடத்தத் தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு தொழிலாள சங்க உத்தியோகஸ்தர்களை கலந்து ஆலோசிக்க இக்கூட்டம் கமிட்டி ஒன்று நியமிக்கிறது.

ஆண்டுவிழாவைப்பற்றி அடுத்த நிர்வாகக் கூட்டத்தில் ஷை தீர்மானத்தை வைக்கும்படி காரியதரிசியை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

இம்மாதம் திருநெல்வேலியில் கூடபோகும், சென்னை மாகாண தமிழர் மகாநாட்டிற்கு தோழர் செ. தெ. நாயகம் அவர்கள் 13-3-34ல் அனுப்பப்பட்ட தீர்மானங்கள் அம்மகாநாட்டார் நிறைவேற்றிவைக்கும்படி கூட்டம் தீர்மானிக்கிறது.

காரியதரிசி எழுதுகிறார்.

சென்னை வியாசர்பாடி சமதர்ம இளைஞர் கழகம்.

19-3-34 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு மேல், தோழர் எல். ராமசாமி தலைமையில் வியாசர்பாடி மேகனவேல் முதலியார் தோட்டத்தில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. அது சமயம் தோழர் கே. வி. அழகிரிசாமி மதம் என்பதைப்பற்றி நீண்டநேரம் பேசின, பிறகு தோழர் சி. டி. நாயகம் பல அரிய விஷயங்கள் எடுத்துக் காட்டியபின், தோழர் அமிர்தவாசகம் வந்தன உபசாரத்தோடு கூட்டம் சுமார் 8-30 மணிக்கு முடிந்தது. என ஷை சங்க காரியதரிசி எழுதுகிறார்.

சென்னையில் சுயமரியாதைப் பிரசாரம்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டை சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் 26-3-34 தேதியன்று மாலை 5-30 மணிக்கு நேப்பியர் பார்க்கில் தோழர் சி. டி. நாயகம் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெருந்திரளான மக்கள் விஜயம் செய்திருந்தார்கள். தலைவர் முன்னுரைக்குப்பிறகு தோழர்கள் வி. பி. எஸ் மணியர் அவர்கள் எ. மேரி சௌந்தரி அம்மாள் அவர்கள், எஸ். குருசாமி அவர்கள் முறையே சுயமரியாதை இயக்கம், ஹரிஜனப்பிரசாரத்தின் பார்ப்பன சூழ்ச்சி, மதக்கொடுமைகள்பற்றி பேசினார்கள். தலைவர் அவசரமாக வெளியில் செல்லவேண்டி தோழர் வி. பி. எஸ். மணியர் அவர்கள் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொண்டு சென்றார்.

பிறகு பட்டுக்கோட்டை தோழர் தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் "கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?" என்று பேசினார். தோழர் பூவாளூர் அ. பொன்னம்பலம் அவர்கள் "இனி நமது எதிர்கால வேலை" "வாலிபர் கடமை" என்பதுபற்றிப் பேசினார். தலைவர் முடிவுரையுடன் இரவு 8-45 மணிக்குக் கூட்டம் முடிவடைந்தது.

சுயராஜ்யம் யாருக்கு?

(ஆசிரியர்:- தோழர் ம. சிங்காரவேலு பி.ஏ. பி.எல்.,)

சுயராஜ்யம் யாருக்கு என்ற புஸ்தகத்தின் மூன்றும் பாகம் அதாவது எது வேண்டும்? சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகம் அச்சாகி விட்டது. புஸ்தகம் வேண்டுமென்று ஏற்கனவே பணமும், ஸ்டாம்பும் அனுப்பியவர்களுக்கு, இவ்வாரத்திற்குள் புஸ்தகங்கள் அனுப்பப்படும். சொற்ப காப்பிகளே கைவசமிருப்பதால், புஸ்தகம் வேண்டுவோர் முந்திக்கொள்ள வேண்டும்.

சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? என்ற புஸ்தகத்தில் அடங்கியுள்ள விஷயங்கள்:—

உலக முக்கிய பிரச்சினை, தேசீயமும் மூட நம்பிக்கையும், சுயராஜ்யமும் தனி சொத்துரிமையும் சமதர்ம லக்ஷணம், சமதர்மத்தில் குடும்பம், மதம், ஜாதி, தேசீய அரசுகள் இருக்கா, சமதர்ம ஆக்ஷிமுறை, ஜாதி மதம் ஒழிக்கும் வழி, தனிவுடமையின் கொடுமை. பொதுவுடமை விளக்கம், சமதர்மத்தில் பொருள்கள் விநியோகம் சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா?

இதன் விலை அணா 3.

கிடைக்குமிடம்:—

சமதர்மப் பிரசுராலயம்,
22, சவுத்பீச்ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவும் ஆராய்ச்சியும் கொண்ட தான அறிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

விலை அணா 8.

லெனினும் மதமும்.

இது பொதுவுடைமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும், விலை அணா 4.

பொதுவுடைமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைம்பிய நூல். விலை அணா 4.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடி போல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பாலகாண்டம் அணா 4.

அயோத்தியா காண்டம் அணா 8.

ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்டும் பெரிய புத்தகம். விலை அணா 4.

தர்ம பரீக்ஷை.

இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணா 3.

மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல்.

விலை அணா 3.

பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெளிவில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L, அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா 2.

கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது 100 பக்கங்கள் கொண்டது. விலை அணா 5.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

விலை அணா 3.

நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

டிக்கட் 1க்கு விலை

ரூ.

4—0—0

டிக்கட்டிற்கு பணம்பெற
முடிவு தேதி 15-5-34

முதல் பரிசு பெற்றவர்.

மியூட்சுவல் கிளப்

டெர்பி

6—6—34.

எல்லா விடங்களிலும் எமது சார்பாக டிக்கட்டுகள் விற்க ஏஜண்டுகள் தேவை.

அதிகாரம் பெற்ற மியூட்சுவல் கிளப் ஏஜண்டு:—

S. K. வரதராஜுலு, திருச்செங்கோடு, சேலம் ஜில்லா S. I.

வெளிவந்து விட்டது!

நமது புதிய பிரசுரங்கள்!!

சோஷியலிசம்.

உலகானுபவப் பேரறிஞர் ஜியார்ஜ் பர்னட்ஷா எழுதி "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், விலை அணா 3

சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் பாஷை சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம், புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. தனிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

50 காப்பிகள் 1—4—0. 100 காப்பிகள் 2—0—0. 500 காப்பிகள் 8—0—0. தபால் செலவு வேறு.

போல்ஷ்விக் முறை.

விலை அணா 1. தனிப்பிரதி வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உத்திரவாதமுள்ளது.
கியாரண்டி கொடுக்கப்படும்.

எவ்வித மருந்து சாப்பிட்டும் தீராத வியாதிகள், குஷ்டம், க்ஷயம், நீரழிவு, குன்மம், இருந்தால் இதில் அவசியம் குணமாகும். இதரவியாதிகளுக்கு எல்லா ஔஷதங்களும் கிடைக்கும்.

தாம்பர பஸ்பம் அனுபானத்துடன் $\frac{1}{2}$ மண்டலம் ரூ. 25. ஏழைகளுக்கு ரூ. 12-8-0.

தாளக பஸ்பம் அனுபானத்துடன் $\frac{1}{2}$ மண்டலம் ரூ. 25. ஏழைகளுக்கு ரூ 12-8-0.

ஆர். எம். நாராயணசாமி,
தன் மந்திரி வைத்தியசாலை, பழனி.

The Right of Temple Entry.

By.

P. Chidambaram B. A., B. L. M. L. A.

Price Re. 1. Only.

Copies can be had of:-

"Kudi Arasu" Publishing House, Erode.
R. B. P. Society Ltd., Erode.

Printed Published & Edited at the Unmai Vilakkam Press by E. V. Krishnasamy.